# அறிவொளி

## பொன்விழா சிறப்பு மலர்




விவேகானந்தா


சனசமூக நிலையம்
விளையாட்டுக்கழகம்
நாடக மன்றம்
முன்பள்ளி
கல்வி மன்றம்
சி.க.கூ.வ.சங்கம்
நூல் நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவொளி

## பொன்விழா சிறப்பு மலர்



விவேகானந்தா வெளியீடு

14.06.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் விபரம்

| | | |
|---|---|---|
| மலர் | :- | அறிவொளி<br>பொன்விழா சிறப்பு மலர் |
| மலர் ஆசிரியர் | :- | மு.இரத்தினம் |
| மலர்க்குழு | :- | கா.அரசரத்தினம்<br>கி.அருமைத்துரை<br>ந.மதியழகன்<br>இ.அழகராஜா<br>தே.பரமானந்தம்<br>அ.அஜந்தா<br>மு.இரத்தினம்<br>மா.குணம்<br>சி.சிங்கராஜா<br>ஜெ.விக்னேஸ்வரி |
| பதிப்பு | :- | 14.06.2014 |
| வெளியீடு | :- | விவேகானந்தா சனசமூக நிலையம்<br>28.06.2014. |
| அட்டை வடிவமைப்பு | :- | மதுரன் |
| அச்சுப் பதிப்பு | :- | மதுரன் கிரா(f)பிக்ஸ் & ஓவ்செற் பிறின்ரேர்ஸ்.<br>அல்வாய். 0776688318, 021 226 3099.<br>*Mail:- mathurangraphics@gmail.com* |
| பக்கங்கள் | :- | 112 |
| பிரதிகள் | :- | 300 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெறும் புத்தகங்களை படிப்பதால் மனிதன் வறட்சியுடைகிறான்
படித்தவன் யார்? துளியளவாவது அன்பை உணர்பவனே படித்தவன்.
கடவுளே அன்பு. அன்பே கடவுள்.கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






திரு.மு.இரத்தினம்



திரு.சி.சிங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெருடாவில் விவேகானந்தா
# சன சமூக நிலைய
# கீதம்

**பல்லவி**

வாழிய வாழிய வளம் நிறை நிலையம்
வாழிய முத்தென வாழிய வாழியவே

**அனுபல்லவி**

ஊர்நலம் சிறக்கவே ஊற்றென திகழும்
உன்னத விவேகானந்தா நிலையம்
சேர்கலைக் கல்வியை சீர்பெற வைத்திடும்
செம்மொழிப் பொக்கிசம் செயற்றிறன் ஆலயம் வாழியவே

**சரணங்கள்**

கடல்வளம் பனைவளம் பயன்தரும் பயிர்களும்
சுடர்விடும் கலங்கரை விளக்காய் வாய்த்திங்கு
திடமுள பெரியோரின் தக்கவழி காட்டலில்
இடர்பல களைந்துமே உயர்ந்திட்ட நிலையமே வாழியவே

நல்லோரின் உளத்தினில் நீடுறு நிலைக்கவே
நாளெல்லாம் உளைத்திட்ட மக்களும் மகிழ்ந்திட
வளம்பெறு வீரரின் விளையாட்டு கழகமும்
இளம்சிறார் சர்வோதய இலவசக் கல்வியும் வாழியவே

அறிவொளி பரப்பிடும் அறிவுச் சஞ்சிகை
நெறியுடன் கலைவளர் நாடக மன்றமும்
சிக்கன கடன்பெற செப்பிடும் சங்கமும்
சேர்ந்திடல் பணிபல புரிந்திடும் பூமியாய் வாழியவே

இருவிழி காண்புறும் ஆலய அறமும்
பருகிடும் நூல்களால் பெருமையாய் மனங்குளிர
விருட்சமாய் விவேகா னந்தா நிழல்தர
கரும்பாய் இனித்திடும் கெருடாவில் பதிதனில் வாழியவே

*ஆக்கம் அல்வையூர் கலைப்பரிதி கே. ஆர். திருத்துவராஜா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# கெருடாவில் ஞானவைரவர் பாமாலை

பல்லவி

வைரவனைத் துதி மனமே
ஞான வைரவனைத் துதி மனமே
கொண்டலடியைப் பதியாய் கொண்டவனே
குடிகள் பல காத்து அருள் தருபவனே

(வைரவனைப்...)

அனுபல்லவி

பாமர மக்களின் பதியானவன் - அவர்
உள்ளத்தில் உயிராய் உறைகின்றவன்
காக்கும் கடவுளாய் வந்துதித்து பக்தர் துயர் நீக்கி
துணையாய் வருகின்றவன்

(வைரவனைப்...)

சரணம்

அற்புதங்கள் பல புரிந்து ஆட்கொண்டவனே- எம்மை
புடமிட்டு தெளிவித்து அரவணைத்து அருள் தருபவனே
முத்தமிழைப் போற்றும் எங்கள் அறிவகத்தின் அருகில்
உறைபவனே நின்புகழ் வாழி வாழி வாழியவே

(வைரவனைப்...)

ஆக்கம் :- நவீலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து...

அறிவொளி என்கின்ற இந்தப் பொன்விழா மலரை வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். 1964ல் அமைக்கப்பெற்ற இந்த விவேகானந்தா சனசமூக நிலையம் 50 ஆண்டுகள் பலவகையான சேவையாற்றி வீறுநடை போடுகின்றது என்பதை எண்ணி எண்ணி மகிழ்ந்து கொண்டாடுகின்றோம். மகிழ்ச்சியில் மிதக்கின்றோம். வருங்கால சந்ததியினரும் இதுபோன்ற பவளவிழா, நூற்றாண்டு விழாவினைக் கொண்டாட வேண்டும் கொண்டாடுவார்கள் என்று எதிர்பார்த்து எதிர்வு கூறி இம்மலரை மனமகிழ்வுடன் வெளியிடுகின்றோம்.

25ஆவது ஆண்டில் ஒரு வெள்ளிவிழா மலரை வெளியிட வேண்டும் என்று 1989ல் முயற்சித்து அது முடியாத போகவே அறிவொளி என்கின்ற ஒரு கையெழுத்துப் பத்திரிகையை வெளியிட்டு ஆறுதலடைந்தோம். அந்த ஆதங்கத்தை நிறைவேற்றுமுகமாக பலரின் ஆதரவுடன் இன்றைய நிர்வாகத்தின் அயராத முயற்சியுடனும் மூத்தோரின் ஆசியுடனும் இந்த பொன்விழா மலரை வெளியிடுகின்றோம். இதன்மூலம் ஒரு மலர் வெளியிட்டு வருங்கால சந்ததியினருக்கு ஆவணமாக வைக்கவேண்டுமென்ற ஆசை நிறைவேறுகின்றது. இந்த முயற்சிக்கு எமது நிலைய அங்கத்தவர்களின் ஒத்துழைப்புடன் வெளிநாடுகளில் இருக்கும் எமது நிலைய உறுப்பினர், மற்றும் நலன் விரும்பிகளும் நிதி வழங்கி ஊக்குவித்துள்ளார்கள். அவர்களை வாழ்த்தி நன்றி பகர்கின்றோம். எமது அறிவொளி கையெழுத்துப் பத்திரிகையின் பெயரையே எமது பொன் விழா மலருக்கும் சூட்டியிருக்கிறோம்.

இம்மலரில் எம்மோடு நீண்ட காலத்தொடர்புடைய அரசு சார்புடைய அதிகாரிகள், பாடசால அதிபர்கள், எம்மோடு இருந்து இங்கு எமது கல்விநிலையத்தில் கற்ற இன்றைய அரச உத்தியோகத்தர்கள், வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பழைய மாணவர்கள், அங்கத்தவர்கள் அனைவரும் ஆசிச்செய்தி வாழ்த்துச் செய்தி அனுப்பி இந்நிலையத்தினை நூறாண்டு வாழ்க என வாழ்த்தியிருக்கிறார்கள்.

இம்மலரினை அச்சிட்டு வழங்கிய மதுரன் நிறுவனத்தினருக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இம்மலருக்கு உறுதுணையாக படங்களை உருவாக்கித்தந்த சோ.சசிகரன் அவர்களுக்கும் ஆக்கங்களைத் தந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இம்மலிரில் வெளியிடப்பட்டுள்ள ஆக்கங்கள் அதிகமாக எமது நிலையத்தின் மாணவர்களால் ஆக்கப்பட்டவை என்பதைப் பெருமையுடன் கூறி மகிழ்ச்சியடைகிறோம். இனிவருங்காலத்திலும் மேலும் வளர்ந்து பெருவிருட்சமாகி எமக்கெல்லாம் நிழல் தரவேண்டும் என வாழ்த்தி போற்றி வணங்குகிறோம்.

**மு. இரத்தினம்**

இதழாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இ.பிரதீபன்
பொருளாளர்



இ.அபினேஸ்
தலைவர்



செல்வி.அ.அஜந்தா
செயலாளர்

எமது விவேகானந்தா சனசமூக நிலையம் ஆரம்பிக்கப்பட்ட ஐம்பதாவது ஆண்டு நிறைவில் பொன் விழாக்காணும் இந்த ஆண்டில் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய பொறுப்புக்களில் இருந்து கடமையாற்றுவதில் நாங்கள் மிகவும் பெருமையடைகின்றோம். எமது அடிப்படை அறிவுக்கு உரமூட்டிய எமது சனசமூக நிலையம் இக்கிராமத்தின் வளர்ச்சிக்கும் பெரும்பங்காற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எமது நிலையமானது ஐம்பது ஆண்டு காலமும் எந்தவித தொய்வும் இன்றி ஒவ்வொரு செயற்பாடுகளையும் நேர்த்தியாக செயற்படுத்தி வருகின்றதெனின் அது எமது கிராம மக்களின் ஒற்றுமையான செயற்பாடுகளே என்றால் அது மிகையாகாது. அது மட்டுமன்றி பல்வேறு தொழில்நுட்பரீதியில் எமது கிராமம் பெரிதும் முன்னேற்றம் காணாவிட்டாலும் கலை, கலாச்சார, விழுமியப்பண்புகளில் ஓரளவுக்கு தலை நிமிர்ந்து நிற்கின்றதெனின் அது இங்குள்ள ஒவ்வொரு பருவத்தினரதும் அதாவது பெரியவர்கள். இளைஞர்கள் சிறுவர்கள், பெற்றோர்கள் என அனைவரினதும் அயராத உழைப்பினாலேயாகும். எனவே எமது இந்த சனசமூக நிலையம் மேலும் பல்வேறு பரிணாம வளர்ச்சிகளைக்கண்டு நூற்றாண்டு விழாவினையும் கொண்டாட வேண்டுமென்பது எமது ஆசையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பொன்விழா வாழ்த்துப்பாமாலை

நலம் சுரக்கும் விவேகானந்தா எனும் நாமம் பூண்டு
விரிகடலும் நீள் விசும்பும்
நிலமைந்தும் சேர்ந்து வாழ்ந்த நித்தில மாயிலங்கும்
சனசமூக நிலையமே நீ வாழி!
குலமுறை வழுவா தொழுகும் குணமுடையோர் போற்ற
ஐம்பதில் தடம் பதித்தனையே
அலங்கார மண்டபத்தில் ஆரோகணித்திருக்கும் உனக்கு
பாலாபிஷேகம் செய்தோம் நீ வாழியவே!

கெருடாவிலுறை கொற்றவனாம் நீராழி நிறத்தன்
கொண்டலடி ஞானவைரவர் திருவருளோடும்
புண்ணயம் நிறையூரில் புதுமைகள் பெருக மறுமலர்ச்சி
தழைத்தோங்க வித்தானவனே நீ வாழி!
எண்ணரும் பளுசுமந்து ஏற்றமிகு பணிகளாற்றி
ஆணிவேரொப்ப ஆதாரம் தந்த
அண்ணலேவுனக்கு அணையா விளக்கேற்றி நாம்
ஆராதனை செய்தோம் நீ வாழியவே!

நிறைந்திடும் தத்துவங்கள் நிலை பெறுமாகமங்கள் நீரால்
சூழும் திருக் கோயிலுள்ளவூரில் நீயும்
கறையாய் நல்லமுதாய் ஆவின் பாலாய் உள்ளும் தோறும்
இனிக்கும் தமிழாய் வாழ்பவனே நீ வாழி!
பொறையில் நிலமாய் பொன்னின் குணமாய் கங்குல் பகலாய்
தூங்கா விழியினாய் தக்க துணையாய்
இறையாய் சேவகனாய் தோழனாய் இணைந்தே எம்மோடு
ஒன்றி நின்ற விவேகானந்தா நீ வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புச் சோலையாய் அறிவூட்டும் சாலையாய் பண்புதனை
யூட்டும் பாசறையாய் சீலம் நிறை
ஆன்மீகம் வளர் ஆனந்தக் கோயிலாய் திகழும் நீ வாழி
அபிவிருத்திச் சங்கமாய் இணைந்த பிறவுமுயர!
முன்னின்றுழைத்த முன்னவர்க்கு முதல் வணக்கம் செலுத்தி
ஆக்கி வைத்த பெருந்திறனை யெண்ணி
நன்றி யெனும் நன்னெறியோம்பி அவர்வழியொழுகி
நாமும் அவர் புகழ் பாடுவோமே!

திங்கள் முகத்தில் திகழும் குறுஞ்சிரிப்பும் திருக்கரத்தில்
மணிக் கொடியும் கொண்டுயர்
பொங்கு தமிழ் மணக்கும் பேர் பெறு திருவூரில்
ஐம்பது ஆண்டுகள் அகலாதிங்கே !
செங்கமல பீடத்தின் செம்மலே நீயிருந்து எமக்கு
வளம் சிறக்கும் வாழ்வின் பலமாக

தங்க நிகர் தலைமகனாக ஓங்கி வளர்ந்தின்று
பொன்விழா பெருவிழாவில் மனமொன்றி !
மங்காத விளக்கேந்தி மாசறு கொடியுமேந்தி சக்தியாய்
வாகைபல சூட வைத்தவுனக்கு
மங்கலமாய் பண்ணிசைத்து நிறை மொழிமாந்தர் சேர்ந்தே
போற்றிடுவோம் விவேகானந்தா நாளெலாம் வாழியவே!

**திருமதி நிசாந்தினி கலைச்செல்வன்** (B.A)
நீதிமன்ற உத்தியோகத்தர்
சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசியுரை

விவோகானந்தா சனசமூக நிலையம் ஒரு நூலகமாக மட்டுமன்றி, மாணவர் கௌரவிப்பு போன்ற பல சமூக நற்பணிகளையும் ஆற்றி வருவது அனைவரும் அறிந்ததே.

ஐம்பது ஆண்டுகள் ஒரு சமூக நிலையத்தினை நிர்வகித்து நடாத்திச்செல்வது என்பது ஒரு சாதாரண விடயமல்ல. இந்த வெற்றிக்கு உயிரோட்டமாயுள்ள இளைஞர்களும், ஆலோசனை வழங்கிச் செயற்படும் அவ்வூர் பொதுமக்களுமே காரணமாவர். அவர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்களே.

ஐம்பதாவது ஆண்டு விழாவினைச் சிறப்பிக்கும் நிகழ்வாக வெளியிடப்படும் இம்மலர் வெளியீடு இனிதே நிறைவுபெறவும், விவேகானந்தா சனசமூக நிலையப் பணிகள் மென்மேலும் தொடரவும் சந்நிதி வேலவன் துணை நிற்பான்.

நிலையப் பணி தொடர எமது நிறைவான வாழ்த்துக்கள்.

**சந்நிதியான் ஆச்சிரமம்**
தொண்டமானாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிச் செய்தி

கெருடாவில் தெற்கு தொண்டமானாறு விவேகானந்தா சனசமூக நிலையம் தனது 50 வது ஆண்டு நிறைவை பூர்த்தி செய்வதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

இப் பொன்விழாவை கொண்டாடுவதுடன் அதன் நினைவாக சிறப்பு மலரொன்றும் வெளியிடப்படுவது மகிழ்ச்சிக்குரியது.

சனசமூக நிலையங்கள் ஒரு பிரதேசத்தின் அல்லது கிராமத்தின் மக்களின் நலன்களை பேணுகின்ற, அவர்களினை ஒன்றுபடுத்துகின்ற, அவர்களின் ஆற்றல்களுக்கு கௌரவம் வழங்குகின்ற, அவர்களின் கலை கலாச்சாரங்களை மேம்படுத்துகின்ற அமைப்புக்களாக திகழ்கின்றன. எமது பிரதேசத்தில் இச்சனசமூக நிலையங்கள் மிகநீண்ட ஆண்டுகளாக நிலைத்திருந்து மக்களின் வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்திருக்கின்றன. இன்றைய நவீன நாகரீக காலமாற்றத்தின் பின்னரும் கூட இப்படியான சனசமூக நிலையங்களின் தேவை விதந்து போற்றப்படுவது அவற்றின் பெருமையை பறைசாற்றுகின்றது.

கெருடாவில் தெற்கு தொண்டமானாறு பிரதேசத்தின் இன்னோரன்ன செயற்பாடுகளில் விவேகானந்தா சனசமூக நிலையம் பெரும் செல்வாக்கு செலுத்தியிருப்பதனை அறியமுடிகிறது. இச் சனசமூக நிலையம் இன்னும் பன்னெடுங்காலம் ஓங்கி உயர என் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு பொன்விழா ஞாபகார்த்த சிறப்பு மலர் சனசமூக நிலையத்தின் தகவல்களை தாங்கிவரும், வரலாற்றை சொல்லி நிற்கும், ஆவணமாக விளங்க என் ஆசிகளை தெரிவித்து பணிகின்றேன்.

**இ.த.ஜெயசீலன்**
பிரதேச செயலாளர்
பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசியுரை

தொண்டமானாறு கெருடாவில் விவேகானந்தா சனசமூக நிலையம் தனது 50 வது வருடத்தை நிறைவு கொள்ளும் பொன்விழாவைக் கொண்டாடும் இவ்வேளை இந்த சனசமூக நிலையத்தின் வரலாற்றுப் பதிவாக இந்த பொன்விழா மலர் வெளியீடு செய்யப்படுகிறது.

சனசமூக நிலையங்கள் கிராமம் ஒன்றின் மக்கள் குழுக்களின் ஒற்றுமை, எதிர்பார்ப்பு, உழைப்பு என்பவற்றின் வடிவமாக செயற்பட்டு வருவது. இவை அனைத்திலும் உயர்ந்து நிலைபெற்று விளங்கும் இச்சமூக அமைப்பின் ஒரு நிலையமாக இது செயற்பட்டு வருவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைய வேண்டும்.

சமூகத்தின் முன்னேற்றத்தையும் அபிவிருத்தியையும் வளர்ச்சியையும் இலக்காகக் கொண்டு இயங்கிவரும் இச்சமூக நிலையம் இன்னும் வைரவிழா நூற்றாண்டு விழா போன்ற பல்வேறு விழாக்களைக் கொண்டாடி கிராமத்தின் எழுச்சிக்கு உதவ வேண்டுமென எமது உளப்பூர்வமான நல்லாசிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

**சர்வோதய இணைப்பாளர்**
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்பணி மன்ற ஆசிச் செய்தி

கெருடாவில் நற்பணி மன்றம் 28.09.2013ல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கெருடாவிலிலிருந்து புலம்பெயர்ந்து சுவிசில் வாழ்ந்து கொண்டிருக்கும் சமூக அக்கறையுடன் கூடிய கல்வி வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட கெருடாவில் நற்பணி மன்றம் ஒன்றை அமைத்து கெருடாவில் தொண்டைமனாறு பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு இலவசமாகக் கல்விச் சேவையாற்றி வருகின்றது. இந்த மன்றம் 1ம் ஆண்டு தொடக்கம் 7ம் ஆண்டு வரை உள்ள மாணவர்களுக்கு கல்விச் சேவையாற்றி வருகின்றது. அத்துடன் இலவச பயிற்சிக் கொப்பியும் எழுதுகருவிகளும் வழங்கி வருகின்றது.

இதற்கு வேண்டிய கட்டட வசதிகளையும் இதர வசதிகளையும் விவேகானந்தா சனசமூக நிலையம் எமக்குத் தந்து உதவியுள்ளது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இங்கே 1ம் ஆண்டு தொடக்கம் 3ம் ஆண்டு வரையும், 4ம் ஆண்டு தொடக்கம் 5ம் ஆண்டு வரை அண்ணா சனசமூக நிலையக் கட்டிடத்திலும், 6ம் ஆண்டு தொடக்கம் 7ம் ஆண்டு வரை விவேகானந்தா சனசமூக நிலைய கட்டடத்திலும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

மானிட வாழ்வின் ஜனனம் முதல் ஒவ்வொரு படிகளையும் கணணி தேவதை நிர்ணயித்துக் கொண்டிருக்கும் இன்றைய கணணி யுகத்தில் வாழ்ந்து வரும் நாங்கள் எமக்கு வித்திட்டுச் சென்ற சான்றோரின் அழகிய வாழ்க்கை முறைகளையும் பாரம்பரிய வித்தைகளையும் எம் அடுத்த சமுதாயமும் அறிந்து வாழ வித்திட்டு நீரூற்ற வேண்டியது எம் அனைவரதும் கடமையாகும்.

அந்த நன் நோக்குடன் கெருடாவில் விவேகானந்தா ச.ச.நிலையம் இன்று தனது 50 வது பொன்விழாவை கொண்டாடும் வேளையில் கெருடாவில் நற்பணிமன்ற சமூகமானது பெரும்மகிழ்ச்சி அடைகின்றது.

கெருடாவில் விவேகானந்தா ச.ச.நிலையத்தின் வளர்ச்சியும் நோக்கமும் இப்பகுதியில் வாழும் ஒவ்வொருவருக்கும் அவர்களது தேடலுடன் கூடிய சிந்தனாசக்தி, அறிவு, ஆளுமை புத்தாக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றை வெளிப்படுத்தும் வகையில் இன்றும் தலைநிமிர்ந்து நிற்கின்றமை பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது.

இவ்வகையில் கெருடாவில் நற்பணிமன்ற சமூகமாகிய எமக்கும் இவ்விவேகோனந்தா ச.ச.நிலையம் பல்வேறு வழிகளில் இடவசதியுடன் கூடிய பல தேவைகளை எமக்கு அளித்து எமது எதிர்கால வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் உரம் ஊட்டி உதவி வருகின்றமை எமக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

கெருடாவில் விவேகானந்தா ச.ச.நிலையத்தின் 50- வது ஆண்டு நிறைவில் அந்நிலையத்தின் வளர்ச்சியானது மேலும் உயர்வு பெற்று விளங்க வேண்டும் என நாம் வாழ்த்துவதுடன் இந்நிலையம் எமக்கு அளித்து வரும் அயராத அர்ப்பணிப்பிற்கு எல்லாம் வல்ல கெருடாவில் வைரவப் பெருமானை வணங்கி இந்நிலையத்தின் வளர்சச்சிக்கு ஆக்கமுடன் கூடிய ஊக்கமும் அளித்து வரும் விவேகானந்தா வாழ் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன் மேலும் மேலும் இந்நிலையம் பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்க எமது பாராட்டையும் வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கெருடாவில் நற்பணி மன்றம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்

***திருமதி. பரமேஸ்வரி யோகராசா***

அவர்களின்



## வாழ்த்துச் செய்தி

விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் வளர்ந்து உலகமயாக்கல் கட்டமைப்புக்குள் சிக்கி அதன் வேகத்திற்கு ஓடவேண்டிய நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் மனித இனம் பொதுச் சேவை செய்வதில் நேரமும் விருப்பமும் குறைந்த இக்கால ஒழுங்கமைப்பில் காலத்தின் தேவைக்கேற்ப உருவாக்கப்பட்ட கெருடாவில் தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள விவேகானந்த சனசமூக நிலையம் இன்று பொன்விழாவை கொண்டாடுகின்ற வேளையில் ஆரம்பத்தில் இருந்து இன்று வரையுள்ள நிர்வாகத்திற்கு வாழ்த்து சொல்லும் வாய்ப்புக்கு மகிழ்ச்சி அடைகின்றேன்.

விவேகானந்த சனசமூக நிலையம் தமது கிராமத்தின் வளர்ச்சிக்கு பல துறையிலும் பாடுபட்ட முதியோருக்கும் இளம் தலைமுறையினருக்கும் எமது மனமார்ந்த வாழ்த்தை தெரிவித்துக் கொள்வதோடு கிராம மக்கள் தமது கிராமத்தின் சமூகத்தின் மீது பற்று வைத்து அதனைப் பாதுகாப்பதிலும் வளர்த்தெடுப்பதிலும் அர்ப்பணிப்பு உணர்வோடு இந் நிலையம் செயற்படவும் நற்பணிகள் தொடரவும் எனது வாழ்த்துக்கள்.

பி/உ/ஆ/அலுவலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சூழ்நிலைக்கு ஏற்ப வாழ்க்கையை அமைத்துக் கொண்டு முன்னேறுங்கள்

தொண்டைமானாறு கெருடாவில் தெற்கு விவேகானந்தா சனசமூக நிலையம் "முயற்சி செய் உன்னால் முடியும்" என்ற சுவாமி விவேகானந்தரின் கூற்றுக்கு உயிர் கொடுத்து பொன்விழாக் காண்கின்ற பெருமையைப் பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்வெய்துகின்றேன்.

வாய்ப்புக்கள் வசதிகள் சென்றடையாத ஆற்றலுள்ள மக்களைக் கொண்ட இக்கிராமத்தின் வளர்ச்சி எம்மை எமது சிந்தனைகளை மேலும் மெருகூட்டுகின்றன. 1964ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சனசமூக நிலையம் கல்வி, கலை, கலாசார மற்றும் விளையாட்டுத்துறைகளில் சிறப்பாக செயற்பட்டுவருகிறது.

ஆரம்பகாலத் தலைவராக அமரர் வ.வெள்ளையன் அவர்களும் 1970 ல் திரு.சி.சோமசுந்தரம் அவர்கள் நாடக மன்ற தலைவராகவும் அவருடன் இணை இயக்குனர்களாக திரு.இ.ஆழ்வாப்பிள்ளையும் திரு.சு.செகராசா அவர்களும் செயற்பட்டு நாடக விழாவும், திரு.வே.பரமானந்தம் அவர்களின் வழிகாட்டலில் அமரர் வெ.பிறேமச்சந்திரன் உதவியுடன் கல்வி மன்றம் எனப் பல சாதனைகள் கண்டன.

சுவாமியின் பெயரை மட்டுமல்ல அவரால் குறிப்பிடப்பட்ட மந்திரவாக்குகளையும் உள்வாங்கி இதன் செயற்பாடுகள் காணப்படுவதனை உணர முடிகின்றது.

சுவாமி விவேகானந்ரதரின் "சீர்திருத்தம் என்ற வார்த்தையைச் சொல்லத் தேவையில்லை. மாறாக முன்னேறிச் செல் என்று சொல்லுங்கள். சூழ்நிலைக்கு ஏற்ப வாழ்க்கையை அமைத்துக் கொண்டு முன்னேறுங்கள்" என்ற கூற்றுக்குரிய செயல் வடிவம் இச்சனமூக நிலையத்தின் செயற்பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழவங்களில் பொதிந்து காணப்படுவதை உணர முடிகின்றது.

செயற்பாட்டினை விரிவுபடுத்தி மக்களை வாசிக்கத்தூண்டி பல்வேறு செயற்பாடுகளிற்கும் களமாக மிளிர்ந்து இச்சமூகத்தின் வளர்ச்சிக்கு இந் நிறுவனம் வழிகாட்டுகின்ற பாங்கு சிறப்பானதே.

இம்மக்களின் ஆதங்கம் நிறைவேறுவது கண்டு அக மகிழும் எமது ஈபிடிபி கட்சியானது கூட்டுப்பொறுப்போடு இச்சமூம் சார்ந்த இளைஞர்கள் யுவதிகள் வழங்குகின்ற ஒத்துழைப்பு சனசமூ நிலையத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றுகின்றது.

இது ஓர் முன்னுதாரணமான சிறந்த நிலையமாக மிளிரவேண்டுமென பொன்விழா வாழ்த்துரையிலே குறிப்பிடுவதில் நானும் பெருமையடைகின்றேன்.

மேலும் தனது சேவையினை விஸ்தரித்து பெரு விருட்சமாக மிளிர்ந்து இச் சமூகத்திற்கும் எதிர்காலச் சிறுவர்களின் ஆற்றுப்படுத்தல்களுக்கும் முகம் கொடுத்து மாற்றமுறும் எதிர்கால வாழ்வியலுக்கும் பொருத்தமான சமுதாயமாக அதன் கண்ணாடியாக இந்நிறுவனம் வளர வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

நன்றி

**ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்**
எதிர்க்கட்சித் தலைவர்
பருத்தித்துறை பிரதேசசபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துரை

கெருடாவில் தொண்டமானாறில் அமைந்துள்ள விவேகானந்தா சன சமூக நிலையம் தற்போது பொன் விழா ஆண்டில் காலடி பதித்துள்ளது.

கடந்த ஐம்பது ஆண்டு காலப் பகுதியை முன் நகர்த்தி சிந்திக்கின்ற போது இச்சனசமூக நிலையத்தின் செயற்பாடுகளையும் அதன் பலாபலன்களையும் நாம் புரிந்து கொள்ளலாம். இச்சனசமூக நிலையத்தினை அதன் ஆரம்பகாலத்தில் நிர்வாக ரீதியாக வழிப்படுத்தி நெறிப்படுத்திய பெருமை இக்கிராமத்தின் முன்னோடியான திரு.மு.இரத்தினம் அவர்களைச் சாரும். இன்றுவரை அவர் இச்சனசமூக நிலையத்தின் செயற்பாடுகளுக்காக அரும்பாடுபட்டு வருகின்றார். இவரைப் போலவே இவரோடு இணைந்து இச்சன சமூக நிலையத்தின் பௌதிக வள ரீதியான வளர்ச்சிக்கு தோளோடு தோள் நின்று உழைத்த பெருமை திரு.கி.அருமைத்துரை அவர்களைச் சார்ந்தது. அதே போல இச்சன சமூக நிலையத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட கல்வி சார்ந்த செயற்பாடுகளைத் தலைமைதாங்கி ஆலோசனை வழங்கி வளர்த்த பெருமை திரு.வே.பரமானந்தம் அவர்களைச் சார்ந்தது.

முக்கோண ரீதியாக இம்மூவரும் செயற்பட்டு விவேகானந்தா சனசமூக நிலையம் தலை நிமிர்ந்து சாதனை படைப்பதற்காக இக்கிராம மக்களை ஒன்றிணைத்து வெற்றியும் கண்டுள்ளனர். கல்வி மட்டுமல்லாது கலை கலாச்சார ரீதியாகவும் இச்சன சமூக நிலையத்தின் செயற்பாடுகள் யாழ் மாவட்டரீதியில் சிறப்படைந்து காணப்படுகின்றன. வருடா வருடம் கல்வி, கலை, விளையாட்டு நிகழ்வுகளுக்கு களம் அமைத்து இச்சன சமூக நிலைய உறுப்பினர்களின் பிள்ளைகள் நெறிப்படுத்தப்படுகின்ற பெருமை விவேகானந்தா சன சமூக நிலையத்தையே சார்ந்தது.

ஐம்பது வருட காலங்கள் ஒரு சன சமூக நிலையம் தனது செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுப்பது என்பது சாதாரண காரியமல்ல. எனினும் விவேகானந்தா சன சமூக நிலையம் ஐம்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகளில் தனது பணிகளை நாடறியச் செய்துள்ளது என்றால் அது மிகையாகாது.

அறிவு சார்ந்த வளம் கொண்டவர்கள் எங்குள்ளார்களோ அவர்களைத் தேடித் கண்டறிந்து அவர்களின் ஊடாக சமூகத்திற்கு தேவையான அறிவு சார்ந்த விடயங்களை வழங்குவதில் இச்சனசமூக நிலைய நிர்வாகிகள் கைதேர்ந்தவர்கள். சமூகத்தை அரவணைக்கும் மிகச் சிறந்த செயற்பாடுகளை இவர்கள் ஆற்றி வருகின்றார்கள்.

"இதனை இதனால் இவன் முடிக்கு மென்றாய்ந்து
அதனை அவன் கண் விடல்"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு அமைய பணிகளை இனம் கண்டு ஒப்படைத்து அப்பணிகளை செவ்வனே நிறைவேற்றுவதில் இச்சன சமூக நிலைய நிர்வாகிகளும் வழிகாட்டிகளும் நல்ல மனம் கொண்ட உள்ளங்கள் ஆவர்கள். இவர்களைப் பாராட்டுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

தற்போது இச்சனசமூக நிலையத்தின் நிர்வாகிகளான தலைவர் அபினேஷ், செயலாளர் அஜந்தா, பொருளாளர் பிரதீபன் ஆகியோர் எனது மாணவர்கள் ஆவார்கள். இவர்கள் சிறந்த ஆளுமை கொண்டவர்கள். பொன்விழா ஆண்டிற்கான சிறப்பு மலர் ஒன்றை வெளியீடு செய்வது இவர்களின் விடா முயற்சியையும் சமூக சேவை நல் மனப்பாங்கையும் எடுத்துக் காட்டுகிறது. இவர்களின் இந்த முயற்சிக்கு எனது வாழ்த்துக்களையும், ஆசிகளையும் தெரிவித்துக் கொள்வதோடு இச் செயற்பாடுகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் வழங்கி வருகின்ற சன சமூக நிலைய முன்னோடிகள், மூத்தோர்கள் அனைவரையும் பாராட்டுகின்றேன்.

தொண்டமனாறு, கெருடாவில் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் புலமைப்பரிசில், க.பொ.த (சா/த), க.பொ.த(உ/த) வகுப்புக்களில் சாதனை படைக்கும் மாணவர்களுக்கு பிரதேச வேறுபாடுபாராது பெறுமதி மிக்க பரிசில்களை வழங்கி அவர்களை உற்சாகம் ஊட்டி கல்வியிலே மேலும் நாட்டம் உடையவர்களாக செய்வது இச் சன சமூக நிலையத்தின் மிகச் சிறந்த பணிகளில் ஒன்றாகும். இப் பணி மேலும் விரிவடைந்து விவேகானந்தா சன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகானந்தா சன சமூக நிலையம், நூற்றாண்டு கண்டு வீறுநடை போட்டு தமது கிராம மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான செயற்பாடுகளைத் திட்டமிட்டு ஒழுங்குபடுத்தி, நடைமுறைப்படுத்தி எதிர்காலத்தில் மேலும் பல சாதனையாளர்களை உருவாக்கவேண்டும் எனவும் இச்சந்தர்ப்பத்தில் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

பொன்விழா ஆண்டு நிகழ்விற்கான சிறப்பு அம்சமாக வெளியீடு செய்யப்படுகின்ற இம்மலரிற்கு ஆசியுரை வழங்குவதை நான் ஒரு பாக்கியமாகக் கருதுகின்றேன். விழாக் குழுவினருக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**திரு.கு.ரவீந்திரன்**
அதிபர்
யா/இமையாணன் அ.த.க.வித்தியாலயம்
வல்வெட்டித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

கெருடாவில் தெற்குக் கிராமம் விழுமியப் பண்புகளுக்கும், கலைகலாச்சாரப் பண்புகளுக்கும் மகுடமாகத் திகழும் ஓர் கிராமம் ஆகும். இக்கிராமத்திலே கொண்டலடி வைரவர் ஆலயத்தின் அருகிலே தலை நிமிர்ந்து நிற்கும் ஓர் பொன்னான நிலையம் பொன் விழாக் காணும் விவேகானந்தா சனசமூக நிலையம் ஆகும்.

சமூகத்தின் தேவைகளை அறிந்து சமூகத்தை ஒன்று திரட்டி அளப்பரிய சேவைகளை வழங்கி வரும் இந்த நிலையம் 50 ஆண்டு கால சேவைதனை வழங்கி நற்பண்புகளை உடைய பிரஜைகளை உருவாக்குவதில் விடா முயற்சியுடன் தனது சேவையைத் தொடர்ந்து வருகின்றது.

விவேகானந்தா சனசமூக நிலையம் அமைந்துள்ள சூழலிலே கற்கும் வயதில் பாடசாலை செல்லாமல் எவரும் இல்லை என்றே கூறலாம். இச் சூழலில் உள்ள மாணவர்கள் யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்திலும் யா/கெருடாவில் இ.த.க வித்தியாலயத்திலும் கல்வி கற்று வருகின்றனர். இப்பாடசாலைகளின் சிறப்பான செயற்பாடுகளுக்கு இக்கிராமத்தின் புத்தி ஜீவிகள் தோள் கொடுத்து வருவதும் கற்கும் வயதில் உள்ள அனைத்து மாணவர்களையும் பாடசாலைக்கு அனுப்பிக் கொண்டிருப்பதும் இச்சனசமூக நிலையத்தின் செயற்குழுவினதும் அதன் உறுப்பினர்களதும் நற்பண்புகளாகும்.

பொன்விழாக் காணும் இச் சனமூக நிலையம் தனது சூழலில் உள்ள மக்களை அரவணைத்து அருகில் அமைந்துள்ள வைரவர் ஆலயத்தில் வருடந்தோறும் சமயப் பணிகளை முன்னெடுத்து மக்கள் மத்தியிலும் மாணவர்கள் மத்தியிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுமியப் பண்புகளை வளர்ப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். அதுமட்டுமல்லாமல் முன்பள்ளியை அமைத்து சிறார்களின் கல்விக்கு வித்திட்டு வருகின்றனர். வருடந்தோறும் முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டியை முன்னெடுத்து சிறார்களின் உடல், உள விருத்திக்கு உதவுகின்றமை பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். மாணர்களின் கலை, கலாச்சாரப் பண்புகளை வளர்ப்பதற்காக பொருத்தமான வேளைகளில் கலை விழாக்களை முன்னெடுத்து வருகின்றனர். கலை விழாக்களின் தெடர்ச்சியாக தற்போது பொன்விழாவைக் கொண்டாடுகின்றனர். பொன் விழாவிற்கான ஓர் மலரினை வெளியீடு செய்வது இவர்களின் ஆக்கத்திறன் வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றது. இச்சனசமூக நிலையத்தின் 50 ஆண்டு கால வளர்ச்சி இம்மலரினை வெளியீடு செய்வதனூடாக புலப் படுத்தப்படுகின்றது.

இச்சனசமூக நிலையத்தின் முன்னோடிகளான திரு.மு.இரத்தினம் திரு.கி.அருமைத்துரை, திரு.வே.பரமானந்தம் ஆகியோர் இச்சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர்களில் முக்கியமானவர்களாவர். இவர்களின் வழிகாட்டல்களைப் பின்பற்றி தற்போதைய இளம் சமூகதாயத்தினர் தொடர்ந்து விவேகானந்தா சனசமூக நிலையத்தின் பல்வேறுபட்ட பணிகளை முன்னெடுத்து யாழ் மாவட்டத்தில் ஒரு முன்னணியான சனசமூக நிலையமாக மிளிரச் செய்ய முன்வரவேண்டுமெனவும் இச்சனசமூக நிலையம் மேலும் பல ஆண்டுகள் மக்களுக்காக சேவையாற்ற வேண்டுமெனவும் வாழ்த்துகிறேன்.

விவேகானந்தா சனசமூக நிலையத்தின் பொன்விழா மலரிற்கான ஆசிச்செய்தியை விழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**திரு.கி.இராஜதுரை**
SLPS, B.A, PGDE, MA, MED.
அதிபர்,
யா/வல்வை சிதம்பரக்கல்லூரி,
வல்வெட்டித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துரை

இவ்வருடம் வெளிவரும் விவேகானந்தா சனசமூக நிலையத்தின் பொன்விழா மலர் - 2014 சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு மகிழ்வடைகிறேன். தரமான ஆக்கங்களை இம்மலர் கொண்டு வருவது பாராட்டுக்குரியதாகும். இவ் ஆக்கங்களை வழங்கியோரும் பாராட்டுக்குரியவர்கள் இந்நிலையத்தின் அயராத பணியினால் பல மொட்டுக்கள் மலர்கின்றன. இதன் பயணம் அனைவருக்கும் பயன் நல்குமென்றும் மேலும் உயர்வு பெற்று பல விழாக்கள் காண இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

**திரு.க.உதயரூபன்**
அதிபர்
யா/கெருடாவில் இ.த.க.பாடசாலை
தொண்டைமானாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள் கெருடாவில் கிராமத்தில் அறிவொளி பரப்பும் நிலையமாக விவேகானந்தா சனசமூக நிலையம் அமைந்துள்ளது. 1964ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு இவ்வருடம் 50 வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதையிட்டு மிகவும் மனம் மகிழ்கிறேன்.

அறிவாற்றல் இல்லாத உடல்வலிமையும், உடல்வலிமை இல்லாத அறிவாற்றலும் பயனற்றவையாகும். இவை இரண்டையும் கெருடாவில் மக்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக கல்வி மன்றம், முன்பள்ளி, விளையாட்டுக் கழகம் என்பவற்றை இயக்கி வருகின்றனர். அத்துடன் சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்கம், நாடக மன்றம் என்பனவும் மக்களுக்குப் பயன்படும் வகையில் இயங்கி வருகின்றன.

இத்தகைய சிறப்புகளுடன் என்னிடம் கல்வி கற்ற மாணவர்கள் இன்று இந்த நிலையத்தை வழிநடாத்துகின்ற செயற்குழு உறுப்பினர்களாக இருந்து திறம்படச் சேவை செய்வதையிட்டு அகமகிழ்கின்றேன். இச்சனசமூகநிலையம் நூற்றாண்டுகள் நிலைத்து நின்று மக்களுக்கு மேலும் பல சேவைகளை ஆற்றவேண்டுமென இறையருள் வேண்டி எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

**R.ஸ்ரீநடராஜா**
அதிபர்
யா/தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை
மகாவித்தியாலயம்.
தொண்டமனாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துரை

"சனசமூகம் உயர சமுதாயம் உயரும்
சமுதாயம் உயர நாடு உயரும்"

என்ற கூற்றுக்கிணங்க இன்றைய நிலையங்களின் பங்கும் பணியும் முக்கியமாகக் காணப்படுகிறது. "நல்ல இணைஞர்கள் ஒரு நல்ல சமூதாயத்தின் தூண்கள்" என்ற சீனப் பழமொழிக்கேற்ப எமது பிரதேச சிறார்களை நல்லவர்களாகவும் நாட்டின் நற்பிரஜைகளாகவும் உருவாக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தை தன்னகத்தே கொண்டு அல்லும் பகலும் அர்ப்பணிப்போடு செயற்பட்டு இவ்விவேகானந்தா சனசமூக நிலையம் இன்று பொன்விழாவைக் கொண்டாடுகின்றது என்றால் அதற்கு ஆரம்ப கர்த்தாவாகத் திகழ்ந்தவர் திரு.மு.இரத்தினம் என்றால் அது மிகையாகாது.

மனிதருள் மறைந்து கிடக்கும் மகத்துவத்தை வெளிப்படுத்துவதே கல்வி என்ற கல்வியின் முக்கியத்துவத்தையும் ஒற்றுமையின் அவசியத்தையும் கொண்டு உருவாக்கப்பட்ட விவேகாந்தா சனசமூக நிலையம் சிறந்த சேவையாற்றி வருகிறது. இந் நிலையம் ஆரம்பித்த காலந் தொட்டு தனது நோக்கத்தின் பால் படிப்படியாக முன்னேறி வருவதை எமது கண்கூடாகக் காண முடிகிறது.

எமது பிரதேச மக்களில் இலை மறை போல் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்காட்டுவதற்கான ஒரு களமாகவும் இந்நிலையம் அமைந்துள்ளது. ஏனெனில் நான் முதன்முதலாக துணிச்சலோடு அவைதனிலே பலர் முன்னிலையில் பேசுவதற்கு எனக்கு அத்திவாரமிட்டதும் இச் சனசமூக நிலையமே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பதாவது நிறைவையொட்டி வெளிவரும் இம் மலர் சிறப்பாக வெளிவர வேண்டுமென அருகில் வீற்றிருக்கும் வைரவப்பெருமானை வேண்டிக் கொள்வதோடு. பொன்விழா நிகழ்வுகள் சிறப்பாக அமையவேண்டும் எனவும் இச் சனசமூக நிலையம் எதிர்காலத்தில் மேன்மேலும் சிறப்படைய வேண்டுமென வாழ்த்துவதோடு இம் மலர் பிறப்பதையிட்டு எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**வே.பரமானந்தம்**

**முன்னாள் பொதுமுகாமையாளர் பரு.ப.நோ.கூ.ச**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிச்செய்தி

சுவிஸ் நற்பணிமன்றம் சார்பாக
திரு.செ.கனகராஜா அவர்களின்
ஆசியுரை விவேகானந்தாவுக்கு.

ஆற்று நீர் சலசல என்று ஓடும் ஆலயபதியில் அமைந்துள்ளதுதான் கெருடாவில். அங்கு "வயலும் வயல் சார்ந்த இடமுமே அதிகமாகக் காணப்படுகிறது. இக்கிராமம் பல்வேறு வழிகளிலும் முன்னேற்றம் கண்டது. எங்கு பார்த்தாலும் கழகங்கள், சபைகள், சங்கங்கள், பாலர்பாடசாலைகள் என பன்முகப்படுத்தப்பட்ட சேவைகள்.

அன்று இவை யாவும் எம்மின மக்களுக்கு எட்டாக் கனியாகவே தென்பட்டது. தானங்களில் சிறந்த தானமாகப் போற்றப்படுவது கல்வியும், உயிரும். உயிரைக் காப்பாற்றுவது மிகவும் சிறந்த செயல். காப்பாற்றிய உயிருக்கு கல்வி போதிப்பது அதனிலும் சிறந்தது என்ற தத்துவக் கோட்பாட்டிற்கு வித்திட்டவரின் பெயரால் அமைந்ததுதான் இன்று பொன்விழா எடுக்கும் விவேகானந்தா சனசமூக நிலையம்.

அகவை ஐம்பதையும் கொண்டாடும் விவேகானந்தாவை நல்லாசியுடன் வாழ்த்துகிறோம். நாமும் வளர்க நீ என்றும் பலகாலம்

நீ பிறக்கும் போது ஏழையானால்
அது உன் தவறு அல்ல - ஆனால்
நீ இறக்கும் போது ஏழையானால்
அது உன் தவறே என்று கூறினார். பில்கேற்.

இதனையும் சிந்தனையில் சேர்த்து எம் கிராமத்திற்கு நாம் என்ன செய்தோம், செய்யப்போகின்றோம் என்று சிந்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றிற் புகழோடு தோன்றுக என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க இந்த நிலையத்தை தோற்றுவிக்க ஆரம்ப கர்த்தாவாக திகழ்ந்தவர் திரு.மு.இரத்தினம் ஐயா அவர்கள். இதனை யாரும் மறக்கவோ, மறுக்கவோ முடியாது. இவர் விவேகானந்தா சனசமூக நிலையத்தின் ஆரம்ப கர்த்தா மட்டுமல்லாது எம்போன்ற பலருக்கு ஆங்கிலக்கல்வியை சிறந்த முறையில் பயிற்றுவித்த பெருமையும் அவரைச்சாரும். இன்றும் எமக்கு அவர் போதித்த கல்வி அறிவு எம்மை வழிநடத்துகிறது என்றால் மிகையாகாது.

இவர் தனது நண்பரான சி.சிங்கராசாவையும் இணைத்து இருவரின் கடின உழைப்பாலும், அயரா முயற்சியினாலும் ஏனைய நலன் விரும்பி நண்பர்களினாலும் 16.06.1964 பதினாறாம்திகதி ஆனி மாதம் அறுபத்தினான்காம் ஆண்டு விவேகானந்தா சனசமூக நிலையம் நடை பயிலத் தொடங்கியது.

"வாசிப்பதால் மனிதன் பூரணம் அடைகிறான்"

அன்று நான் மூன்றாம் வகுப்பில் கல்வி கற்கும் சிறு மாணவன் எனக்கு இவ் விடையம் மனமகிழ்வையும், சொல்ல முடியாத ஆனந்தத்தையும் தந்தது. பாடசாலை முடிந்து முதல் ஒரு மணிநேர வாசிப்பை தூண்டிய பெருமையையும் விவேகானந்தாவுக்கே உண்டு.

இன்று இதை நினைத்தாலும் என்மனம் பெருமிதம் கொள்கிறது. பெருமகிழ்வு தந்த விவேகாந்தாவே நீ பெருமையுடன் வாழ்க பல்லாண்டு.

இந் நிலையமானது 70, 80 காலப்பகுதிகளில் சர்வோதயம், விளையாட்டுக்கழகம், நாடகமன்றம், மாதர்சங்கம், பாலர்கல்வி, சமாதான சபை போன்ற கிளைகளைப் பரப்பி வெற்றி கண்ட பெருமையும் உண்டு. இந்த வெற்றி போல் தொடர்ந்தும் நீ வீறுநடை போட வேண்டும் என ஆசிகூறி ஆனந்தம் அடைகின்றோம்.

இச் சனசமூக நிலையமானது எம் கிராமத்தின் பால் அக்கறையுள்ள சமூக சிந்தனையாளர்கள், கல்விமான்கள், சிறந்த மாணவர்கள் போன்றோரை உருவாக்குவதற்கு உறுதுணை ஆக இருந்து, செயல் ஆற்றியும் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கற்றோரை மதித்திடும் மற்றோரை ஊக்குவிக்கும்
பணியினுக்காய் பாசமுடன் விழா வெடுக்கும்
உன்னத முயற்சியில் நம்மவர் கலந்திடுவோம்
காலமெல்லாம் கரம் கொடுத்து
கச்சிதமாய் வழிநடத்த தோள்கொடுத்து
துணையாய் நிற்போம்.”

அறிவுடனும் ஆக்க பூர்வமாகவும் சிந்தியுங்கள். பாறையும் படிக்கட்டாக மாறுவதற்கு வழிபிறக்கும். வாழ்க விவேகானந்தா வளர்க எம் சேவை. பொன்விழாவோடு நிற்காது பெருவிழாவும் எடுக்க ஆசியுரை கூறி விடைபெறுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துரை

ஒவ்வொரு கிராமத்திலும் வாழ்கின்ற பிரதேச மக்களின் நலமான மேம்பாடுடைய வாழ்வியல் மாற்றத்திற்கு பொது நிறவனங்களின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாதது எனலாம்.

அந்த வகையில் கிராமம் தழுவிய ஆலயம் சனசமூக நிலையம் மற்றும் விளையாட்டுக் கழகம் போன்றவை முகம் காட்டி நிற்கும் கெருடாவில் தெற்கு விவேகானந்தா சனசமூக நிலையம் சார்ந்த முற்போக்கு சிந்தனையாளர்களின் உள்ளத்தினில் உதயமாகிய ச.ச.நிலையம் எனலாம்.

குறிப்பாக சமூக மேம்பாட்டிற்கு கல்விச் செல்வம் என்பது இன்றியமையாதது என்பதனை கருத்தினில் கொண்டிருந்த சமகாலத்தவரான திரு.மு.இரத்தினம் அவர்களின் நீண்ட நோக்குடைய பெருமுயற்சியின் வெளிப்பாட்டின் அத்திபாரமாக 16.05.1964ல் விவேகானந்தா ச.ச.நிலையம் உருவாக்கம் பெற்றது. இந்நிலைய தோற்றத்திற்கான நற்பணியில் உறுதுணையாக நின்று அயராது உழைத்தவர் திரு.சி.சிங்கம் என்பவர் என்பதனை இவ்வேளை குறிப்பிட்டாக வேண்டும்

முன்னோடியான திரு.மு.இரத்தினம் அவர்கள் தனது மாணவப்பராயத்தினை சிறப்புற நிறைவு செய்து கொண்டு தாய்மொழியுடன் ஆங்கிலம், மற்றும் கணிதம் எனும் பிராதன துறைகளிலும் சிறப்பு சித்தி பெற்று பிரத்தியேக கல்விசார் ஆசானாக விளங்கியவர். நாடகத்துறையினிலும் ஈடுபாடு கொண்டு எழுத்ததுலக ஆளுமையும் பெற்றிருந்தார்.

அவ்வேளையில் சமூக முன்னேற்றச் சிந்தனையின் ஒளிக்கீற்றுக்களாய் சர்வோதய நிறுவனத்துடன் வைத்துக்கொண்ட நெருக்கமான உறவின் பயனாக 1981ல் சிறார்களுக்கான முன்பள்ளி ஒன்றினை ஆரம்பிக்க வழிவகுத்தார். சேவையை கருத்தாக கண்டிருந்த திரு.மு.இரத்தினம் அவர்கள் மாலை நேர வகுப்புக்களாக ஐந்தாம் ஆண்டு தொடக்கம் ஆறு, ஏழு மற்றும் எட்டாம் ஆண்டுவரையிலான வகுப்புக்களை மாணவ மாணவியருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலவசமாக போதித்தும் வந்தார் விவேகானந்தா ச.ச.நிலையம் மேலெழுகைக்கான சிந்தனை விரிவுபட்டு யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்திலயம், யா/கெருடாவில் இந்து தமிழ் கலவன் பாடசாலை போன்ற அரச கல்வி நிறவனங்களில் கல்வி கற்கின்ற மாணவ மாணவிகளின் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தியவர்களையும் அவர்தம் பெற்றோரையும் 2011ம் ஆண்டிலிருந்து இற்றைவரை பருத்தித்துறை பலநேக்கு கூடுறவுச் சங்க பொதுமுகாமையாளர் திரு.வே.பரமானந்தம் அவர்களும் திரு.கி.அருமைத்துரை(J.P) அவர்களும் இணைந்து மாணவர்களையும் பெற்றோரையும் கௌரவிக்கும் நிகழ்வினை நடாத்தி வருவது முன்மாதிரியான செயற்பாடாக அமைந்து வருவது கண்கூடு.

விவேகானந்தா ச.சநிலையம் சார்ந்து வருடந்தோறும் பிரதேசம் தழுவிய விளையாட்டுப் போட்டிகளும் கலை நிகழ்வுகளும் முன்மாதிரியாக அவரின் தடத்தினிலே நடைபெறுவதற்கு திருவாளர்கள் கி.அருமைத்துரை மற்றும் வே.பரமானந்தம் ஆகியோரும் முன்மாதிரியான செயற்பாடுகளுக்கு முன்னின்று உழைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு மனிதனும் பிறந்ததிற்கான அடையாளமாக குறிப்பாக 18 - 45 வயது வரையினில் கிராமத்திற்கான காட்டிய பணிகயாகவும் மேலும் தம்மாலான பணிகளை செய்து வருவதும் பொது நிறவனங்களோடு தொடர்பினை ஏற்படுத்தி தன் துறைசார் அனுபவ பகிர்வினை பணிகளாக ஆற்றிவருவது ஒவ்வொருவரதும் கடமையாகும்.

படைப்பாளியான திரு.மு.இரத்தினம் அவர்கள் என் அறிமுகத்திற்கு எட்டிய வரை 2012ல் யா/தொண்டைமானாறு வீ.ம.வித்தியாலய நூற்றாண்டு விழா நிகழ்வின் ஓர் அங்கமான சிறுகதைப்போட்யில் "தனிமரம்" எனும் சிறுகதைக்கான சிறப்பு தேர்வினில் விருது பெற்றவர் எனலாம்.

மேலும் 2014ம் ஆண்டிற்கான புதிய நிர்வாக தெரிவு நடைபெற்று விவேகானந்தா.ச.ச.நிலையம் ஆரம்பித்த பெருமைதான் ஐம்பது ஆண்டுகால நிறைவினோடு பொன்விழா காண்புறுவதும் மலரொன்றினை வெளியிடுவதும் மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

எனவே சமகால இளைஞர் யவதிகளும் இணைந்து அவர்களின் கரங்களில் தாங்கி நிற்பதுமான விவேகானந்தா சனசமூக நிலையம் வளர்ச்சிப்படியின் மேன்மைக்கான இவ்விழா சிறப்பதோடு பவள விழாவும் எதிர்காலத்தில் சிறப்புற அமைய வேண்டுமென பணிவாக கேட்டுக்கொண்டு பொன்விழா சிறக்க மனமார வாழ்த்தி நிற்கின்றேன்.

**"கலைப்பரிதி" கே.ஆர் .திருத்துவராஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துப் பாமாலை

வாழ்த்துதும் வழ்த்துதும் வண்புவி மீதிலே
கெருடாவில் பதியில் தெய்வீகம் மிளிர
ஞானம் தரு ஞான வைரவருகே
கெருடாவில் பதி மக்களின் செல்வனாய்
பங்கயத் தாள்நோக பகலிரவாய் நிலைத்து
பரவுவோர்க்கு நல்லருள் புரிகின்றாய்
எங்களின் வைரவர் அருள்புரிய
எழில் பொங்கி அமர்ந்த நிலைய கூடமே
பாலர், இளைஞர் இன்னும் முதியோர்களான
கதியது உயிர்கள் வளம் பெற அமைந்து
ஒளிவிளக்காய் வந்துதித்தாய்
இந்நிலைய நின்பெருமை விளங்கிடவே
மாண்புடைய பெருங்கடலாய்
படிப்பதற்கு நூலறிவாய்
வடித்தெடுத்த அறநெறிகள் வாய்மை
நேர்மை, மனுநீதி வழிபிறந்த இடமன்றோ
பொருளுதவி பல புரிந்து
புணணியங்கள் புரிந்திட்ட நிலையமன்றோ
தந்தைதாயில்லா சிறுவர் நூறு
தலையாய பிள்ளைகள் தாபரித்து என்றும்
அனர்த்தங்கள் உண்டான போதும்
துகிலொடு ஊனுடை யாவும் வழங்கி
முந்திடக் கல்வியைக் கற்பித்த
விந்தையாய் விளங்கும் வித்தகச் செல்வனே
ஐம்பதாம் அகவை இதந்தரத் தொழுது
இறைவனை வேண்டி சனசமூகத்தை வாழ்த்துவோம்
கெருடாவில் மக்களின் செல்வனாய்
செய்தியை சிறப்பாய் வழங்கும் நூலகனாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான பண்டித கலா வித்தகனாய்
சமயப் பணியுஞ் சமூகப் பணியும்
தன்னலனாய்க் கருதி - என்றும்
ஆற்றிடும் உன் பணிகளை
இவ்வூர் மக்கள் ஒன்று கூடி
ஐம்பதாம் ஆண்டிலே உன் புகழ்ச்
சிறப்பினை உணர்த் திரண்டு வந்து
பொன் விழாவிலே உன்னை
கதாநாயகனாய் - போற்றி
ஐம்பதாம் அகவை இதந்தரத் தொழுது
விவேகானந்தா சனசமூக நிலையத்தை வாழ்த்துவோம்
அறங்கூர் அவையத்தறிஞர்கள் போற்றும்
திறங்கூர் சமூக நிலையமாம்
நலங் கூர் கெருடாவில் சமூக நிலையமாம்
நலங்கூர் கெருடாவில் சமூக நிலையமே வாழியவே

**ஆக்கம் கந்தசாமி - மயூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துரை

### ஆலமர விழுதுகளின் ஆதங்கம்

கெருடாவில் விவேகானந்தா சனசமூக நிலையம் 1964 இல் போட்ட விதையாகும். இன்று 2014 இல் பல கிளைகள் கொண்டு பொன்விழாக்காணும் விருட்சமாய் விரிந்து நிற்கின்றது. இவ்வாறு பெருவளர்ச்சி கண்ட விவேகானந்தா சனசமூக நிலையம் எனும் ஆலமரத்தில் இளைப்பாறிய பறவைகளில் நானும் ஒருத்தி.

பல இன்னல்களைச் சுமந்த அன்றைய காலகட்டத்தில் கூட இலவசமாக கல்வியைத் தந்ததும் இந்த நிலையம் தான். ஒரு பக்கம் ஆலயத்தையும், மறுபக்கம் பாலர் பாடசாலையையும் நடுவே விளையாட்டு மைதானத்தையும் கொண்ட இந்த நிலையம் அன்றிலிருந்து இன்று வரை வீறுநடை போடுகிறது. பல நாடகங்களையும் பட்டிமன்றங்களையும் இசை நிகழ்ச்சிகளையும் மேடைப் பேச்சுக்களையும் அரங்கேற்றிய பெருமையும் விவேகானந்தாவையே சேரும். இந்த நிலையம் என் போன்ற எவ்வளவோ மாணவர்களுக்கு முகவரியைத் தந்தது. அன்றைய காலகட்டத்தில் கூட "பூம்புகார்" எனும் நாடகத்திலும் புதுயுகம் படைத்தோம். இத்துடன் கல்வி எனும் அழியாச் சொத்தை இலவசமாக பெற்றதை யாரும் மறக்க முடியாது.

அன்று நாம் கற்ற கல்வி நிலையத்தில் இன்றும் எமது பிள்ளைகள் கற்கிறார்கள். எதிர்காலத்தில் இவர்களின் பிள்ளைகளும் இங்குதானே கற்கப்போகிறார்கள். இந்த நிலையம் இன்றுவரை பலருக்கும் பல உதவிகளைச் செய்து வருகிறது. அத்துடன் இன்றும் தலைநிமிர்ந்து நிற்கின்றதென்றால் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்போக்கு சிந்தனை கொண்ட உள்ளங்களால் மட்டும்தான் முடியும். இதன் வளர்ச்சியைக் கண்டு நாம் பிரமித்து நிற்கின்றோம். 30 வருடங்களுக்கு முன்பே விளையாட்டுப் போட்டி நடாத்துவதிலே விழாக்கோலம் பூண்டதும் எமது நிலையம்தான் என்பதில் பூரிப்பு அடைகின்றோம். எதிர்காலத்தில் நூற்றாண்டு காணும் நேரத்திலும் இந்த ஆலமரத்தை விழுதுகள் பல தாங்க வேண்டும்.

“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு”

என்பதற்கிணங்க இந்த நிலையத்திற்கு வாழ்நாள் முழுதும் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம். மீண்டும் இந்த நிலையத்திற்கு வித்திட்ட முற்போக்கு சிந்தனையாளருக்கு நன்றி கூறுவதுடன் நாமும் விழுதுகளாக தாங்கிக் கொள்வோம் என்பதில் சந்தேகம் இல்லை.

எனவே பொன்விழாக் காணும் இந்த நிலையம் என்றுமே வளர்ச்சி பெற வேண்டும். இதன் எதிர்காலம் சிறந்து விளங்கும் என்பது குன்றிலிட்ட தீபமாக தெரிகின்றது. மேலும் விவேகானந்தா சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்கு இறைவன் அருள் கிடைக்கும் என வேண்டி விடை பெறுகிறேன்.

**திருமதி. மனோ சச்சிதானந்தம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவேகானந்தா 200ம் ஆண்டு புதிய கட்டிட திறப்புவிழாவின்போது





ஸ்தாபகர் சி.சிங்கராசா அவர்களை
கௌரவித்தபோது





விருந்தினர்களான உள்ளூராட்சி ஆணையாளர்,
ஈ.பி.டி.பி வடமராட்சி அமைப்பாளர் ஆகியோரை வரவேற்றபோது





விவேகானந்தர் ஜெயந்திதினத்தின்போது
அமரர் சுவாமி சித்ரூபானந்தா அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துப்பா

இயற்கை செழிப்பின் வனப்பு
வளம் பொங்கி வடியும்
அழகின் யாசிப்பு
இப்படியான கிராமத்தின் மிளிர்வு
பொன்விழாக்காணும் பொக்கிசம்
பூரண நிலவுபோல் பொங்கிப்
பிரகாசிக்கட்டும் அதன் சேவை
வியர்வை நீரால் உடல் கழுவும்
உழவனின் அறிவுப் பசிக்கும்
உணவழித்த தாய் அல்லவா! நீயும்
விவேகானந்தா என்ற விருட்சத்தில்
அமர்ந்து அழகாய் வாசிப்போர்
ஏராளம் ஏராளம்
தாரகையாய் ஒளி வீசும் உனக்கு
அகவை இன்று ஐம்பதா (50)!
நம்பவே முடியவில்லை
என்னுயிர் கிராமத்தின் வளம் குன்றா
விளக்கே வளர்க உன்பணி

கண்ணயராது இதற்காகப் பாடுபட்ட
அனைவருக்கும் என்னன்றியும் பாராட்டும்
அணையா பெரும் விளக்காக
ஒளிர் விட்டுப் பொன் சுவாலை வீசட்டும்
தாமரைத் தடாகத்தை சேரும்
அன்னப் பட்சிபோல உன்னை
நாடுவர் வாசிப்பின் ஆர்வலர்கள்
நெஞ்சம் நிறைத்து வாழ்த்துகிறேன்
உன்னை வாழ்க நீ நெடுங்காலம்
நன்றி

**திருமதி கனகராஜா விமலா**
கௌஜி, வினு
சுவிற்சலாந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துரை

விவேகானந்தா சனசமூக நிலையத்தின் 50வது ஆண்டு நிறைவில் நான் ஒரு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

உதவியை ஒருவருக்குச் செய்யும் பொழுது அந்த உதவி திரும்பக் கிடைக்குமா? கிடைக்காதா? என்று யோசித்து முடிவெடுப்பவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். அந்த வகையில் சிந்திக்கும் பொழுது எனக்கு ஒருவரின் நினைப்புத்தான் முதலில் வருவதுண்டு. அந்தப் பெருமைக்குருயவர் அ.அமிர்தராணி அவர்கள் தான் என்றால் அது மிகையாகாது.

நாங்கள் விவேகானந்தா சனசமூக நிலையத்தை மீள் நிர்மாணம் செய்ய இருந்த 2001ம் ஆண்டு நானும் ஒரு நிர்வாக உறுப்பினராக இருந்தேன். எங்களுக்கு காணி சம்பந்தமாக ஒரு பிரசிசனை இருந்தது. முன்பிருந்த கட்டடம் ஒரு சொரியல் காணியில் இருந்தது. அதனாலல் காணிக்காரர்கள் இது என்னுடைய இடம் என்று மாறிமாறிப்பிரச்சினை எடுத்தார்கள். அப்போது உ.பாலசுப்பிரமணியக் குருக்கள் இப்பொழுது புதிய கட்டடம் இருக்கின்ற காணியைத்தர உடன்பட்டார். அதற்கு உடனடியாகப் பணம் கட்ட வேண்டி இருந்தது. அது பற்றி நாங்கள் சிந்தித்த போது திருமதி அருந்தவராசா அமிர்தராணி அந்தப் பணத்தை எமக்குத் தந்து உதவினார்.

“காலத்தால் செய்த உதவி ஞாலத்தின்
மானப் பெரிது”

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க அவர் அந்த நிலையத்திற்குச் செய்த உதவி இந்த உலகத்தை விடப் பெரிது என்று கூறலாம். அவர் அந்த உதவியைத் திரும்பத் தரவேண்டும் என்று கூட எதிர்பார்க்கவில்லை. இருந்தாலும் எங்களுக்கு பின்னர் பலவாறு கிடைத்த நிதியிலிருந்து அவருடைய பணத்தை திரும்பச் செலுத்தினோம். அவர் அது திரும்பப் பெறவேண்டும் என்று எதிர்பார்த்திருக்கவில்லை என்பதை அவரின் இனிய உரையாடலில் இருந்து தெரிந்து கொண்டோம். எனவே அவர் எமது நிலையத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவில் என்றும் இருக்க வேண்டியவர் என்பதை எவரும் மறந்து விட மாட்டோம்.

அது மட்டுமல்ல விவேகானந்தா முன்பள்ளி அமைப்பதற்கு நெக்டெக் சிறுவனம் நிதி உதவி வழங்கியது. இவ்வேளை காணி பிரச்சினையாக இருந்தது. பலரிடமும் தொடர்பு கொண்டோம். யாரும் காணி தரமுன்வரவில்லை. அப்பொழுது மு.இரத்தினம், மா.குணம் ஆகியோருடன் பொ.அருந்தவராசா தனது 1 கண்ட தோட்டத்தை அப்படியே முன்பள்ளிக்கு வழங்கினார். இந்தக் குடும்பத்தினர் என்றும் போற்றப்படவேண்டியவர்கள். இவர்களோடு முன்பள்ளிக்கு காணி வழங்கிய மு.இரத்தினம், மா.குணம் ஆகியோரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

விவேகானந்தா சனசமூக நிலையம் 50 வது நிறைவு விழாவைக் கொண்டாடவிருக்கிறது. இது வெறும் கேளிக்கை நிகழ்வாக இருந்து விடாது எதிர்கால சந்ததியினர் இதற்கு யார் யார் அயராது உழைத்தவர்கள் என்பதை ஞாபகப்படுத்தி ஒவ்வொருவரும் தாம் இந்த நிலையத்தில் என்ன செய்ய வேண்டும் என்று சிந்தித்து செயலாற்றி மென்மேலும் இந்நிலையம் வளர்ந்து நூற்றாண்டு விழா வரை செல்ல தங்களால் முடிந்த உதவியைச் செய்யத் தவறக் கூடாது என்று கூறி நான் இந்த விழாவைக் கண்டு கழிக்க முடியாமல் பிரான்சில் இருக்கிறேனே என்ற ஆதங்கம் ஒரு புறம் நானும் இதற்கு உதவ எல்லாம் வல்ல கொண்டாலடி ஞான வைரவரின் அருள் கிடைத்ததை எண்ணி மகிழ்ந்து என் மனமார்ந்த பொன்விழா வாழ்த்தைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

**வ.சந்திரலிங்கம்**
France\



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவேகானந்தா சனசமூக நிலையத்தின் தோற்றமும் வளர்ச்சியும்



ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் நல்ல சிந்தனைகள் தோன்றுவதும் மாற்றத்தை ஏற்படுத்துவதும் பாடசாலைக் கல்வியே. நான் தொண்டைமானாறு இந்து ஆங்கில பாடசாலையில் G.C.E. O/L சித்தியடைந்து உயர்தரம் கற்பதற்காக அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரிக்குச் சென்று அங்கு கலைப்பரிவு 1ம் ஆண்டில் கற்றுக் கொண்டிருந்த போது மாணவர் மன்றங்களில் மிகவும் ஆர்வம் குறைந்தவனாக இருந்தேன்.

எனது மாணவ நண்பர்கள் என்னை ஊக்குவித்து மாணவர் மன்றத்தில் இணைத்தார்கள். இங்கே தமிழ் மன்றம், ஆங்கில மன்றம், விஞ்ஞான மன்றம் என மூன்று மன்றங்கள் இருந்தன. நான் கலைப்பிரிவில் கற்றதனால் தமிழ் மன்றத்திற்குப் போகுமாறு எனது வகுப்பாசிரியர் அனுப்பி வைத்தார். தமிழ் மன்றத்தின் கூட்டத்தில் எனது பெயரைத் தலைவராகப் நியமித்து விட்டார்கள். மன்றங்களுக்குச் செல்வதற்குப் பயந்து இருந்த நான் தயங்கித் தயங்கி மேடைக்குச் சென்றேன். அங்கு சென்றிருந்ததும் முதல் நிகழ்வாக “புதுமுகம் அறிமுகம்” என்ற நிகழ்வு இடம்பெற்றது. அதில் புதிய மாணவர்களைக் கேள்வி கேட்டு கொண்டிருந்தார்கள். குறிப்பாக மாணவிகளை தொந்தரவு செய்து கொண்டிருந்தார்கள். தலைவராக இருந்த நான் விழிப்படைந்தேன். இப்படி எல்லாம் கேள்வி கேட்கக் கூடாது என்று தடைவிதித்தேன். அதன் பயனாக புதுமுகம் அறிமுகம் மிகவும் நாகரீகமாக இடம்பெற்றது. இந்த மன்றத்தோடு நான் தொடங்கிய மாணவ வாழ்க்கை துறைசார்ந்த அறிஞர்களைக் கொண்டு வந்து அங்கே பேச வைக்கும் அளவிற்கு உயர்ந்தது. பலாலி ஆசிரியகலாசாலை அதிபர், அரசியல் தலைவர்கள், தொழில் அதிபர்கள் என ஒருவரின் விசேட உரை எமது மன்றத்தில் இருந்தது. அவர்களின் உரை என்னை எனது சமூகத்தின் பால் ஈர்த்தது. அதன் விளைவுதான் எனது கிராமத்தில் ஒரு வாசிகசாலையை உருவாக்கி கல்வியில் முன்னேற்றம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை என்னுள் தோற்றுவித்தது.

இந்த யோசனையை எனது கிராமத்தில் இருந்த நண்பர்களுடன் பகிர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டேன். இந்த யோசனைக்கு இணங்கி என்னோடு ஒத்துழைத்து வந்தவர்தான் நண்பர் சி.சிங்கராசா அவர்கள். நாங்கள் இருவரும் எடுத்த முயற்சியின் பயனாகத் தோன்றியதுதான் விவேகானந்தா சனசமூக நிலையம். ஆரம்பத்தில் நாம் இருவரும் சேர்ந்து ஒரு சேமிப்புநிதியின் மூலம் இதற்கான நிதியை ஏற்படுத்தினோம். மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட சிங்கராசா அவர்களும் நானும் எங்கள் கிராமத்தின் எதிர்காலக் கல்வி விருத்திக்கு இந்த நிலையம் ஒரு அத்திவாரமாக அமையும் என்ற தூர நோக்கோடு செயற்பட்டோம். அவ்வாறே இந்நிலையம் 1964ம் ஆண்டு ஆனி மாதம் 16ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இதன் காத்திரம் உணர்ந்த எமது உறவுகள் எம்மோடு இணைந்து கொண்டு இதன் படிமுறை வளர்ச்சிக்கு தங்களாலான உதவியை நல்கினர்.

இந்த நிலையத்தின் மூலம் வாசிப்பே இல்லாத பலர் வாசிக்கத் தொடங்கினார்கள். கூட்டங்களில் கலந்து கொண்டார்கள். தேவை இல்லாத கேள்விகள் கேட்பதற்கு அன்று யாரும் இருக்கவில்லை. ஒவ்வொரு வருடமும் புதிய நிர்வாகத் தெரிவின்போது ஒரு புதிய தலைவரைத் தெரிவு செய்வோம். அங்கு நன்கு கற்றவர் என்று யாரையும் முன்னிலைப்படுத்தவும் இல்லை. கல்லாதவர்கள் என ஒதுக்கி வைக்கவும் இல்லை. எல்லோரும் தலைவர்கள் ஆனார்கள்.

திரு.சி.குணத்திலிங்கம் அவர்களின் முயற்சியின் பயனாக விவேகானந்தா சனசமூக நிலையத்தின் அடுத்த அங்கமாக விளையாட்டுக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. 1965ம் ஆண்டு விவேகானந்தா வி.கழகம் உருவானது. இதன் மூலம் அதிகமானவர்கள் இதனோடு இணைந்து கொண்டார்கள். இரண்டு வருடத்தில் அது சிறந்த விளையாட்டுக் கழகமாக மிளரத் தொடங்கியது.

அதனைத் தொடர்ந்து 1968ம் ஆண்டு விவேகானந்தா நாடக மன்றம் உருவானது. அதில் முதன் முதலாக "உயர்ந்த உள்ளம்" என்ற நாடகம் உருவாகி நல்ல ஆதரவைப் பெற்று அது 6 தடவைகள் மேடை ஏறியது. அதில் பல தலைமுறை நடிகர்கள் அந்த நாடகத்தை நடித்தார்கள் என்பது அதன் பெருமையை எடுத்தியம்பியது. அதனைத் தொடர்ந்து "அவளும் பெண்தான்" என்ற சமூக நாடகமும் "போலிச்சாமியார்" என்ற நகைச்சுவை நாடகமும் "கைதியின் காதலி" என்ற சரித்திர நடகமும் அதனைத் தொடர்ந்து "மாறாத வடிவங்கள்" என்ற சமூகநாடகமும் "சிதறிய முத்துக்கள்" என்ற புராண நாடகமும் மேடை ஏறின. இவ்வாறு நாடக மன்றம் வளர்ச்சியடைந்த வேளை நாட்டுச் சூழல் காரணமாக நாடகங்கள் புதிதாக தோன்றவில்லை. இருந்தாலும் முந்தைய நாடகங்கள் மேடை ஏறின எனலாம்.

அடுத்ததாக முன்பள்ளி ஒன்றை உருவாக்க வேண்டும் என்று நாங்கள் சிந்தித்துக் கொண்டிருந்த வேளை புங்குடுதீவில் அமைந்திருந்த சர்வோதயம் என்ற அமைப்பு எங்களையும் இணைத்துக் கொண்டது. அதன் பயனாக 1981ல் முதன் முதலாக முன்பள்ளி ஒன்று சர்வோதய முன்பள்ளி என ஆரம்பிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்மூலம் சர்வோதயத்தில் இணைந்து பல சமூகத் தொண்டுகளை எமது சனசமூக நிலையம் கெருடாவில் மக்களுக்கு வழங்கியது.

அடுத்து கல்வி மன்றம் ஒன்று அமைக்க வேண்டும் என்று நாம் சிந்திக்கின்ற பொழுது அதே 1981ல் விவேகானந்தா கல்வி மன்றத்தை ஆரம்பித்தோம். அதில் 1ம் ஆண்டிலிருந்து G.C.E O/L வரை இலவசமாக நடாத்தினோம். இதன் மூலம் கெருடாவிலில் உள்ள பிள்ளைகள் மட்டுமல்ல தொண்டைமானாறுவரை உள்ள மாணவர்களுக்கும் அதன் சேவை விரிந்து சென்று பயன் கொடுத்தது

1998ல் சர்வோதய அமைப்பின் மூலம் திரு.சங்கரப்பிள்ளை அவர்கள் வழங்கிய நிதியின் உதவியுடனும் மக்களின் பங்களிப்பு மூலமும் சர்வோதய முன்பள்ளி புதிய கட்டிடம் அமைக்கப்பட்டது. இதற்கு காணி வழங்கிய பா.குணம் பாராட்டப்பட வேண்டியவர்.

1980 ல் சமூக ஐக்கிய சீர்திருத்தச் சங்கம் ஆரப்பிக்கப்பட்டது. இச்சங்கத்தின் மூலம் மது ஒழிப்பு, நிலைய உறுப்பினர்களிடையே ஏற்படும் சிறு சிறு பிணக்குகளைப் பொலீஸ் நிலையம் செல்லவிடாது தீர்த்து வைத்தல், அத்துடன் சமூக சீர்திருத்த விடயங்களாக கல்வி நிலையத்திற்கு எதிரான செயற்பாடுகளை நீக்கி, சிறந்த முறையில் கல்வி கற்பிப்பதற்கு உதவுதல் மற்றும் பழைய மூட நம்பிக்கைகளை மாற்றுதல் போன்ற விடயங்களை இச்சங்கமே செயற்படுத்தி வந்தது.

அடுத்து 1987ல் எமது மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் ஒரு விவேகானந்தா சிக்கனக்கடன் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் மூலம் 2000 ரூபா தொடக்கம் 10 ஆயிரம் ரூபா வரை கடன் வழங்கி கெருடாவில் மக்களின் தொழில் வளர்ச்சியிலும் வாழ்வாதாரத்திலும் பங்கெடுத்து சேவையாற்றி வருகிறது.

1989ம் ஆண்டு எமது விவேகானந்தா சனசமூக நிலையத்தின் வெள்ளிவிழா ஆண்டாகும். இந்த விழாவை பெரிதாக கொண்டாட முடியாத நிலை அப்பொழுது இருந்தது. அதனால் அந்த ஆண்டை நினைவுகூரும் நோக்கமாக நிலையத்தின் மூலம் ஒரு கையெழுத்துப் பத்திரிகையைத் தொடங்கினோம். இந்தக் கையெழுத்துப் பத்திரிகையின் பெயர் அறிவொளி. அப்பத்திரிகை மூலம் விஞ்ஞானக் கட்டுரைகள், தன்னம்பிக்கைக் கட்டுரைகள், கல்வி விழிப்புணர்வுக் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் போன்றன வெளியிடப்பட்டன. இவை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

2001ம் ஆண்டு சிறிய கட்டடமாக இருந்த விவேகானந்தா சனசமூக நிலையம் மீளமைக்கப்பட்டது. கி.அருமைத்துரை, வே.பரமானந்தம், சி.உலகராசா, வ.சந்திரலிங்கம் ஆகியோரின் அயராத உழைப்பின்மூலம் சமூகசேவைகள் அமைச்சின் நிதி உதவியுடன் விவேகானந்தா சனசமூக நிலையத்தின் மனிதவளம் மூலமும் இங்கு தோற்றமளிக்கும் புதிய கட்டிடம் அமைக்கப்பட்டது. இதற்கு கெருடாவிலுள்ள அனைத்து மக்களின் ஒத்துழைப்பும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05.10.2001ம் ஆண்டு விவேகானந்தா சனசமூக நிலையத்தின் மூலம் நூல் நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. இந்நூல் நிலையத்தை த.தே.கூ. பாராளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் அவர்கள் திறந்து வைத்தார். இந்நூல் நிலையம் மாணவர்களுக்கு கல்வி வழிகாட்டியாக இருந்து பெரிதும் சேவையாற்றிக் கொண்டிருக்கிறது.

2008ம் ஆண்டு முன்பள்ளி புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டது. இதில் கெருடாவிலின் சகல மக்களின் உதவியுடனும் நெக்டெக் நிறுவனத்தின் நிதி உதவியுடனும் இப்புதிய கட்டடம் அமைக்கப்பட்டது. இந்நிலையம் முன்பள்ளி செயற்பாடுகளுக்காகவே அமைக்கப்பட்டது. இத்துடன் கல்வி நடவடிக்கைகளுக்கு போதிய இடவசதியின்மை இதன் மூலம் நீக்கப்பட்டு மாலைநேர கல்வி வகுப்புக்களும் நடைபெறுவதற்கு இது இன்று உதவியாக இருக்கின்றது. இந்த முன்பள்ளி கட்டுவதற்கு நிலம் வழங்கிய பொ.அருந்தவராசா, மு.இரத்தினம், மா.குணம் ஆகியோர் பாராட்டத்தக்கவர்கள். இக்கட்டிட அமைப்பின்போது பதவிவழி நிர்வாக உறுப்பினர்களாக பின்வருவோர் செயற்பட்டனர்.

தலைவர் : வ.ஞானலிங்கம், செயலாளர்: தே.பரமானந்தம்,
பொருளாளர்: கி.அருமைத்துரை இவர்களும் பாராட்டத்தக்கவர்கள்.

இவ்வாறு இதன் வளர்ச்சி மேலும் வலுப்பெற்று பெருவிருட்சமாக இந்த நிலையமும் இதன் ஏனைய உபநிறுவனங்களும் மேலும் வளர்ந்து கெருடாவில் மக்களுக்கு சேவையாற்றி நூற்றாண்டு விழா காணவேண்டுமென வாழ்த்தி நிறைவு செய்கிறேன்.

**மு.இரத்தினம்**
**முன்னாள பொது முகாமையாளர்**
**தெ.ப.பொ.உ.வி.கூ.சங்கம் – பருத்தித்துறை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவேகானந்தா ச.ச.நிலையத்தின் 50 ஆண்டு வழித்தடத்தில்

ஒரு கிராமத்தின் வளர்ச்சியையும் பாரம்பரியத்தினையும் அடையாளப்படுத்தி நிற்கும் ஒரு வலுவான சமூக மட்ட நிறுவனம் சனசமூக நிலையமாகும். ஒவ்வொரு சமூகத்தின் எழுச்சிக்கும் பின்புலமாக சிந்தனை ஆற்றல் மிக்க செயற்றிறன் மிக்க மூத்தோர்கள் இருந்திருக்கிறார்கள். இவ்வாறு அவர்களால் உதயமான ஒரு நிறுவனம்தான் கெருடாவில் விவேகானந்தா சனசமூக நிலையம்.

வரலாறுகள் ஆவணப்படுத்தப்படும் போதுதான் எதிர்கால சந்ததிக்கு படிப்பினைகள் கிடைக்கின்றன. கடந்த காலத்து வாழ்வின் கரடுமுரடுகள் மாத்திரமன்றி செழுமைகளும் நிஜமாகப் பதிவு செய்யப்படும்போதுதான் சமூக வாழ்வு அர்த்தமாக்கப்படுகின்றது. எமது சனசமூக நிலையம் ஐம்பதாவது ஆண்டினைக் கொண்டாடும் இவ்வேளை கடந்து வந்த காலங்களை நினைத்துப் பார்த்தல் சந்ததியின் முக்கிய தேவையாகும்.

1997ம் ஆண்டுவரை நிகழ்ந்த விவேகானந்தா ச.ச.நிலையத்தின் வரலாற்று நிகழ்வுகளை எமது நிலையம் பருத்தித்துறை பிரதேச சபையில் பதிவு செய்த விடயங்களை இங்கு தங்களது பார்வைக்கு தருகிறோம்.

1. சனசமூக நிலையத்தின் பெயர் :- விவேகானந்தா சனசமூக நிலையம்.
2. சனசமூக நிலையத்தின் விலாசம் : கெருடாவில் தெற்கு, தொண்டமனாறு
3. பிரதேச சபையும் உபஅலுவலகம் :- புலோலி
4. கிராம சேவையாளர் பிரிவு : கெருடாவில்

| | ஆரம்பகாலம் | இன்று |
|---|---|---|
| தலைவர் | :- திரு.வ.வெள்ளையன் | திரு.சி.அருந்தவராசா |
| உபதலைவர் | :- திரு.சு.செகராசா | திரு.மா.கந்தசாமி |
| செயலாளர் | :- திரு.மு.இரத்தினம் | திரு.வி.விஜயரத்தினம் |
| உபசெயலாளர் | :- திரு.செ.முத்துலிங்கம் | திரு.வ.ஞானலிங்கம் |
| பொருளாளர் | :- திரு.சி.சோமசுந்தரம் | திரு.சி.ஜெயராசா |
| | திரு.சி.வேலய்யா | திரு.சி.சௌந்தரராசா |
| | திரு.க.கிருஸ்ணபிள்ளை | திரு.மு.பற்குணசிங்கம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| திரு.மா.சிதம்பரன் | திரு.சி.செல்வராசா |
| திரு.ஆ.சிவலிங்கம் | திரு.கா.அரசரத்தினம் |
| திரு.சி.குணத்திலிங்கம் | திரு.க.செல்வன் |

| | | |
|---|---|---|
| கணக்காய்வாளர் : | திரு.மு.குணரத்தினம் | திரு.வே.பரமானந்தம் |
| போசகர் | திரு.சி.சிங்கன் | திரு.ஆ.சிவலிங்கம் |
| விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் | | திரு.வே.சச்சிதானந்தம் |
| கல்வி நிலையப் பொறுப்பாளர் | | திருமதி ப.லதா |

கல்விச் சிந்தனையில் ஆற்றலுள்ள முன்னோடிகளான திரு.மு.இரத்தினம், திரு.சி.சிங்கம், திரு.வ.வெள்ளையன் ஆகியோரின் அயரா உழைப்பினாலும் விடா முயற்சியினாலும் கிராம மக்களின் பூரண ஆதரவுடன் 1964 ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி விவேகானந்தா சனசமூக நிலையம் உருவாக்கப்பட்டது.

கல்வியின் முக்கியத்துவத்தையும், ஒற்றுமையின் அவசியத்தையும் உலகறியச் செய்த பெரியோராகத் திகழ்ந்த சுவாமி விவேகானந்தரின் பெயரை நிலையத்துக்கு சூட்டி, அவரது உயர்ந்த எண்ணங்களையும் கருத்துக்களையும் மக்கள் மனதில் பதித்து அப்பெயரினையுடைய ஒரு நிறுவனமாக விவேகானந்த சனசமூக நிலையம் சேவையாற்றி வருகின்றது.

சனசமூக நிலையம் அமைந்திருக்கும் காணியை அன்பளிப்பாக நிலையத்திற்குக் கொடுத்த திரு.மு.இரத்தினம் அவர்களின் பொதுச்சேவை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும். அது மட்டுமன்றி ஆரம்ப காலத்திலிருந்து இன்று வரை நிலையத்தின் தலைவராகவும், செயலாளராகவும் பல தடவைகள் இருந்து சேவையாற்றியதுடன் இன்று வரை நிலையத்தின் ஆலோசகராகவும் திகழ்ந்து வருகின்றார். கல்விச்சேவை, சமூக நீர்திருத்தச் சிந்தனைகள், நாடகத்துறை போன்ற சகல துறைகளிலும் சகலகலாவல்லவனாகத் திகழ்ந்து வருகின்றார் என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

நிலையம் ஆரம்பித்த நேரத்தில் கிராம மக்கள் இயன்ற பொருளுதவியும், நிதியுதவியும் வழங்கியதுடன் சிரமதான அடிப்படையில் ஒற்றுமையாகச் செயற்பட்டு கட்டிடத்தைச் சீமெந்தினால்கட்டி எழுப்பினர். நிலையத்திற்கு முன்பக்கமாக இருந்த இடத்தினை துப்பரவு செய்து விவேகானந்தா விளையாட்டுக் கழக மைதானமாக உருவாக்கினர். நிலையத்துக்கு வடக்குப் புறமாக பிரபல்யம் வாய்ந்த வீரபத்திரர் ஆலயம் அமைந்துள்ளது. வேப்பரமரத்தின் அடியில் மிகவும் சிறியதாக இருந்த ஆலயத்தை நிலைய உறுப்பினர்களும், கிராம மக்களும் சேர்ந்து ஆலய வளர்ச்சியில் ஆர்வம் உள்ள திரு.ம.சின்னத்தம்பி திரு.த.வேலன் ஆகியோரின் விடாமுயற்சியுடன் இணைந்து கட்டியெழுப்பியதுடன் மடப்பள்ளி, கிணறு எனபவற்றையும் அமைத்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனசமூக நிலைய வளர்ச்சியின் வெளிப்பாடாக நிலையத்திற்குப் புறமபாக அமைந்துள்ள பாலர் பாடசாலைக் கட்டிடம் காட்சி அளிக்கின்றது. இதற்கான காணியை திரு.மா.குணம் அவர்கள் நன்கொடையாக நிலையத்திற்கு வழங்கினார். இக்கட்டிடத்திற்கான ஆரம்ப நிதியை திரு.சி.தனபாலசிங்கம் அவர்கள் வழங்கி இருந்தார். இத்துடன் அச்சமயம் நிலையத் தலைவராக இருந்த திரு.வ.வெள்ளையன் அவர்களும் திரு.செ.கனகராசா, திரு.வே.பரமானந்தம் ஆகியோர் இரவு பகலாகச் செயற்பட்டு ஊர் மக்களின் ஒத்தழைப்புடன் இக்கட்டிடத்தை கட்டியெழுப்பினர்.

இப்பாடசாலையில் வருடந்தோறும் சுமார் 35 பிள்ளைகள் கல்வி பயின்று வருகின்றனர். இவர்கள் பாடசாலையில் சேரும்போது கெட்டிக்காரர்களாகவும், திறமைசாலிகளாகவும் திகழ்ந்து வருகின்றனர். திருமதி ர.சி புவனேஸ்வரியும், செல்வி இந்திரன் தயாளினியும் மிகத்திறமையுடனும், உற்சாகத்துடனும் சேவை செய்து வருகின்றனர். 1981ம் ஆண்டு பாடசாலை கட்டப்பட்ட நேரத்தில் திருமதி.பரமானந்தம் அருந்தவமலர், திருமதி செல்வராசா குணதேவி, திருமதி அமிர்தராசா பிறேமாவதி ஆகியோர் மிகுந்த உற்சாகத்துடனும் உறுதியுடனும் சேவையாற்றிய காலப்பகுதியை சனசமூக நிலையத்தின் பொற்காலம் என குறிப்பிடுவது பொருத்தமாகும். இவர்களுக்கு உதவியாக மாதர் சங்கத் தலைவியாக திருமதி.செகராசா தவமணி, பொருளாளராக திருமதி வெள்ளையன் தங்கக்கிளியும் இரவுபகல் பாராது ஆற்றிய சேவையும் பாராட்டப்படவேண்டியதாகும். இக்காலப்பகுதியில் திரு.வே.பரமானந்தம், திரு.மு.இரத்தினம், திரு.செ.கனகராசா, திரு.வெ.பிரேமச்சந்திரன் ஆகியோர் ஆண்டு 5 - 10 வரையான மாணவர்களிற்கு இலவசமாக கல்வி புகட்டியதன் மூலம் சிறந்த பெறுபேறுகளை மாணவர்கள் பெற்றுக்கொள்ள ஆக்கமும், ஊக்கமும் அளித்தனர் அவர்களைத் தொடர்ந்து பழைய மாணவிகளான செல்வி.செ.சிவனேஸ்வரி செல்வி வே.விஜயமலர், செல்வி க.கல்பனா, திருமதி.ரவி புவனேஸ்வரி ஆகியோர் இச்சேவையை இன்றும் மிகுந்த உற்சாகத்துடன் செய்து வருகின்றனர்.

கல்வி பயிலும் மாணவர்களிடையே சங்கீதம், நடனம் என்பன பயிற்றுவிக்கப்பட்டு நிலைய விழாக்களில் சிறப்பு சிகழ்ச்சிகளாக இடம்பெற்று வருகின்றன. நிலையத்தினால் நாடகம் மன்றம் உருவாக்கப்பட்டு, உயர்ந்த உள்ளம் அவளும் பெண்தான், கள்ளச்சாமியார் போன்ற சமூக நாடகங்கள் அரங்கேற்றப்பட்டு மக்கள் மனதில் அகலாத இடத்தை பிடிப்பதற்கு வழிவகுக்கப்பட்டது.

நாடக மன்றத்தில் திரு.மு.இரத்தினம் அவர்கள் சிறப்பாசிரியராகவும், திரு.இ.ஆழ்வாப்பிள்ளை, திரு.அ.செகராசா ஆகியோர் நாடக இயக்குனர்களாகவும் செயற்பட்டனர். திரு.சி.சோமசுந்தரம், திரு.கு.குணரத்தினம், திரு.சு.மாசிலாமணி, திரு.வே.சிவானந்தம், திரு.சி.வேலையா ஆகியோர் சிறந்த நடிகர்களாகவும் திகழ்ந்து பாராட்டப்பட்டனர். காத்தவராயன் போன்ற மரபு வழிக் கூத்துக்களில் சிறந்த இசைக் கலைஞர்களாக வே.தில்லையம்பலம், தியாகராசா ஆகியோர் விளங்கினர்.

விவேகானந்தா விளையாட்டுக்கழகம் கரப்பந்தாட்ட போட்டியில் உள்ளூர் மட்டத்தில் தனக்கென தனியான இடத்தைப் பிடித்து விளையாட்டு இரசிகர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமோக ஆதரவைப் பெற்று வருவதுடன், வெளி இடங்களுக்கும் சென்று சிறப்பான பரிசில்களையும் பெற்று வருகின்றது. விளையாட்டுக் கழகத் தலைவர் திரு.கி.அருமைத்துரை அவர்களின் அயராத முயற்சியினால் 1984ம் ஆண்டு நிலையத்தின் ஆண்டு நிறைவு விழாவில் மாபெரும் விளையாட்டுப் போட்டி நடாத்தப்பட்டது. கெருடாவில் கிராம மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து இப்போட்டியை மிகவும் சிறப்பாக நடாத்தி முடித்தனர். விளையாட்டின் மூலம் சகல மக்களையும் ஒற்றுமையாக ஒன்றிணைப்பதில் நிலையத் தலைவர் திரு.வ.வெள்ளையன் அவர்களும் ஐக்கிய அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு.சி.மகாலிக்கம் அவர்களும் மும்முரமாக செயற்பட்டனர்.

1997ம் ஆண்டு தொடக்கம் 2014 வரை விவேகானந்தா சனசமூக நிலையத்தில் நிகழ்ச்த நிகழ்வுகள் பின்வருமாறு.

2001ம் அண்டு புதிய ச.ச.நிலையக் கட்டடம் அமைக்கப்பட்டது. இதில் சமூக சேவைகள் அமைச்சின் நிதியுடன் கெருடாவில் விவேகானந்தா உறுப்பினர்களின் நிதியும், மனித வலுவும் சேர்ந்து இந்நிலையம் உருவாக்கப்பட்டது. இதனை முன்னெடுத்து வழி நடாத்தியோர் வே.பரமானந்தம். கி.அருமைத்துரை ஆகியோர் ஆகும்.

2008ல் புதிய முன்பள்ளிக் கட்டடம் அமைக்கப்பட்டது. இதற்கு நெக்டெப் நிறுவனம் நிதியுதவி வழங்கியது. இந்த நிதியுடன் நிலைய அங்கத்தவர்களின் பங்களிப்பும் சேர்ந்து இப்புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது. இதற்குரிய காணியை பொ.அருந்தவராசா, மு.இரத்தினம், மா.குணம் ஆகியோர் வழங்கினர். இதன்மூலம் இக்கட்டடத்தில் முன்பள்ளி மற்றும் மாலைநேர வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

**விவேகானந்தா சனசமூக நிலையமும் கெருடாவில் ஞான வைரவர் ஆலயமும்.**
1970ம் ஆண்டிலிருந்து விவேகானந்தா சனசமூக நிலைய நிர்வாகத்தின் கீழ் கோயில் இயங்கி வந்தது. இந்த ஆலயத்தின் வருடாந்த திருவிழா நிகழ்வுகளை விவேகானந்தா ச.ச. நிலையம் நெறிப்படுத்தி நடாத்தி வந்துள்ளது. இந்த திருவிழா நிகழ்வுகளில் பஜனை சமய சம்பந்தமான கதாப்பிரசங்கங்கள், பட்டிமன்றங்கள் நிலையத்தின் மாணவிகள் மூலம் நடன நிகழ்வுகள் போன்ற நிகழ்வுகளை நடாத்தி வந்தது. அத்துடன் இந்த ஆலயத்திற்கு பூசகரை அமர்த்தி நித்திய பூசையை நடாத்தி வந்தது. பூசகரின் சம்பளத்தை வி.ச.ச.நிலையம் தனது நிதியிலிருந்து வழங்கி வந்தது. பின்னர் ஆலயம் தனி நிர்வாகமாக இயங்கத் தொடங்கியது.

**மலர்க் குழு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவொளி கையெழுத்துப் பத்திரிகையிலிருந்து

## Optimism

If you belive you can you can. if you belive you cannot, you cannot , Think negatively and you will get a negative result because by your thoughts you create a negative atmosphere which is hospitable to nagative result. On the contrary think positively and you create a positive atmosphere which makes positive result a certainly.

To cultivate positive thinking speak hopefully about every thing then feed your mind with good nourishing and whole some thoughts. keep good company of friends who are optimistic. Read scriptures which will cast away your negative thoughts.Lastly, pray a great deal and count the blessing that God has given you. Thus youa can over come negative thoughts of failure and cultivate positive thoughts of success.

**தமிழாக்கம்**

**திட நம்பிக்கை**

நீ முடியும் என்று நம்பினால் உன்னால் முடியும். நீ முடியாது என்று நம்பினால் உன்னால் முடியாது. எதிர்மறையாகச் சிந்தித்தால் எதிர்மறையான பலனையே பெறுவாய். ஏனென்றால் உன்னுடைய நினைவுகள் பாதகமான சூழலைத் தோற்றுவிக்கும். அதற்கு மாறாக நீ சாத்தியமான நினைவுகளை உருவாக்கினால் உண்மையாகவே சாதகமான சூழலை ஏற்படுத்திச் சிறந்த பலனைப் பெறமுடியும்.

சாதகமான நினைவுகளைப் பெறுவதற்கு நம்பிக்கையுடன் எதிலும் பேசவேண்டும். பின்பு மனதைச் செம்மைப்படுத்தி வளர்த்து நல்ல முழுமையான நினைவுகளை ஏற்படுத்த வேண்டும். தன்னம்பிக்கையுடய நல்ல நண்பர்களை உருவாக்கி அவர்களுடன் சேர வேண்டும். தெய்வீகமான புனித நூல்களை வாசித்தால் அவை உங்களுடைய எதிர்மாறான நினைவுகளைத் தூக்கி வீசும். இறுதியாக அவர் உனக்குச் சிறந்த ஆசீர்வதாதத்தை தந்திருக்கிறார் என்று நீ கடவுளை வணங்க வேண்டும்.

இவ்வாறு தோல்வியைத் தருகின்ற எதிர்மறையான நினைவுகளிலிருந்து விடுபட்டு வெற்றியைத் தருகின்ற சாதகமான நினைவுகளைப் பெற முடியும்.

**ஆக்கம் :- மு.இரத்தினம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெற்றி பெற முயற்சிப்போம்**

ஒரு மனிதனின் வெற்றிக்கு மூன்று படிகள் உண்டு. குறிக்கோள், உழைப்பு, நம்பிக்கை ஆகியவை காரணமாக அமைகின்றன. இவற்றை அடைவது மனிதனின் மனப்பக்குவத்திற்தான் அடங்கியுள்ளது. வெற்றியை விரும்பாதவர்கள் இல்லை. இந்த இலக்கை அடைய வேண்டுமானால் உழைப்பு தேவை. அந்த உழைப்பிற்கு நல்ல மூலதனம் தேவை. சிறிய மூலதனம் பெரிய உழைப்பிற்கு வழி வகுக்கும். அதற்கு நம்பிக்கை தேவை. ஆழ்ந்த அறிவு, தூய சிந்தனை நல்லொழுக்கம், இறை பற்றுதல், நல்லவர்களுடன் இணைதல் போன்ற நற்பண்புகளே ஒருவனை வெற்றிக்குக் கொண்டு செல்லும். இவ்வாறு வெற்றியடையும் இளைஞர்கள் நாளைய சமுதாயத்தின் முன்னோடிகளாக மதிக்கப்படுவர். வீண் அரட்டை அடித்தலுக்குப் பதிலாக நூல் நிலையப் புத்தகங்களை வாசித்து நல்ல அனுபவ அறிவுகளைப் பெற வேண்டும். பிள்ளைகள் பெற்றோரின் எண்ணங்களுக்கு ஏற்றவாறு இசைந்து நடந்து அவர்களை திருப்திப்படுத்த வேண்டும். இவ்வாறான நற்பண்புகளைக் கொண்டு குறிக்கோளுடன் எவனொருத்தன் வாழ்கின்றானோ அவன் வெற்றிப்பாதைக்கு செல்வான் என்பது உறுதி

**ஏலக்காயின் மருத்துவ குணங்கள்**

ஏலக்காய் என்பது இஞ்சி செடி வகையைச் சேர்ந்தது. பச்சை நிறக் காய்களைக் கொண்டது. ஏலக்காய் பச்சை நிறத்திலும் பழுப்பு நிறத்திலும் இருக்கும். ஏலக்காய் நறுமணப் பொருளாக மட்டுமல்லாமல் பல மருத்துவக் குணங்களையும் கொண்டதாகும்.

மன் இறுக்கத்தைக் குறைத்து உடல் புத்துணர்ச்சி பெற ஏலக்காய் பயன்படுகின்றது, பல் மற்றும் வாய் தொடர்பான பல பிரச்சினைகளுக்கு ஏலக்காய் நல்ல தீர்வாக அமையும், குரல்வளை மற்றும் தோல் தொடர்பான நோய்களைத் தீர்க்கும் ஆற்றல் ஏலக்காய்க்கு உண்டு. மலட்டுத் தன்மையை போக்குவதற்கும் ஏலக்காய் பயன்படுகின்றது.

**ஆக்கம் : சு.ராமன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கெருடையம்பதியின் பொன்விழாக் காணும் விவேகானந்தா அறிவாலயம்



"எங்கே ஒரு நூலகம் திறக்கப்படுகின்றதோ அங்கே ஒரு சிறைச்சாலை மூடப்படுகின்றது" என்ற சுவாமி விவேகானந்தரின் கூற்றுக்கிணங்க அவரின் நாமத்தையே தனதாக்கிக் கொண்டு விவேகமுடன் விவேகானந்தா சன சமூக நிலையம் 50ம் ஆண்டில் காலடி வைப்பதை நினைக்கும் போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது.

"வாசிப்பதால் மனிதன் பூரணமாடைகின்றான்" என்ற முதுமொழிக்கிணங்க அரை மனிதர்களை முழு மனிதர்கள் ஆக்குவது நூலகங்களே. அந்த வகையில் 50 ஆண்டுகளிற்கு முன் கெருடாவிலில் வாழ்ந்த படித்த இளைஞர்கள் தமது ஊரிலே ஒரு சன சமூக நிலையம் உருவாக்கப்பட வேண்டும். அதன் ஊடாக தமது சமூக மக்களின் அறிவை வளர்க்க வேண்டும் என்ற சிந்தனையின் ஊற்றாக பிரசவமான குழந்தையே விவேகானந்தா சனசமூக நிலையம் என்று கூறின் மிகையாகாது.

"அறியாமை என்ற இருளை அகற்றி மெஞ்ஞான ஒளி புகட்டி தமது கிராமத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனும் அறிவைப் பெற வழிகாட்டிய பெருமை இச்சன சமூக நிலையத்தையே சாரும்.

இன்று பொன்விழாக்காணும் இச்சனசமூக நிலையம் ஸ்தாபிக்கப்படுவதற்கு அத்திவாரமிட்ட பெருமைக்குரியவர்களாக மு.இரத்தினம், சி.சிங்கராசா போன்றவர்களையே சாரும். "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற கூற்றினை சிறந்த இலக்காகக் கொண்டு தாம் பிறந்த இடமான கெருடாவிலில் விவேகானந்தா சனசமூக நிலையத்திற்கு ஆரம்ப கர்த்தாக்களாக விளங்கியவர்கள். இச்சன சமூக நிலையத்தினூடாக பல பணிகளை மேற்கொண்டு வருகின்றமை இவ்விடத்திலே கூறுவது பொருத்தமுடையதாகும் அந்த வகையிலே மதிப்புக்குரிய திரு.மு.இரத்தினம் அவர்களிடம் நானும் சென்று கல்வி கற்றவன் என்ற வகையில் நானும் பெருமிதம் அடைகின்றேன்.

"எத்தனையோ நூலகங்கள் கிராமத்திற்கு கிராமம் நகரத்திற்கு நகரம் தோன்றுகின்றது. ஆனால் அது சில வருடங்களில் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகின்றது. ஆனால் விவேகானந்தா சனசமூக நலையம் அவ்வாறு இல்லாமல் எப்போதுமே தமது சமூகத்தின் அறிவு வளர்ச்சியையும் சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமலர்ச்சியையும் விடியலையும் பற்றிச் சிந்தித்து தமது கிராமமக்களிற்கு நூல் நிலையமாக மட்டுமன்றி பல சமூக சமய, கல்விப் பணிகளையும் ஆற்றி வருவதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இச் சனசமூக நிலையமானது சர்வோதய இயக்கத்துடன் இணைந்து முன்பள்ளியொன்றை அமைத்து அதற்கு ஆசிரியர்களையும் நியமித்து, அன்று தொட்டு இன்றுவரை முன்பள்ளி மாணவர்களுக்கான கல்விப்பணியைத் திறம்பட நடாத்தி வருவதுடன் விளையாட்டுப் போட்டிகள், கலை விழாக்கள் போன்ற நிகழ்வுகளை நடாத்தி வருகின்றது. அது மட்டுமா? ஐம்பது வருடங்களாக நூலகமாக மட்டும் இயங்காமல் பல்வேறு கல்விப்பணிகளையும் ஆற்றி வருகின்றது. தான் உதயமான காலம் தொட்டு இலவச மாலைநேர வகுப்புக்களையும் நடாத்தி, மின்சார வசதியில்லத காலங்களில் கை லாம்புகளில் இரவு வகுப்புக்களையும் நடாத்தி தமது ஊர் மாணவர்களைக் கல்வியிலும் ஏனைய துறைகளிலும் சிறந்து விளங்க வழிகாட்டிய பெருமையும் இச் சன சமூக நிலையத்தையே சாரும்.

அது மட்டுமல்லாமல் கெருடாவில் கொண்டலடி வைரவர் ஆலயத்துடன் இணைந்து தமது ஊரில் பல ஆத்மீக சமயப் பணிகளையும் இச் சனசமூக நிலையம் ஆற்றி வருகின்றது. படித்த மக்கள் அன்றி பாமரமக்களும் பயன்படக்கூடிய வகையில் தனது பத்திரிகைப் பணியையும் ஆற்றி வருவதும் குறிபிடத்தக்க விடயம் ஆகும்.

இன்று கெருடாவில் கிராமத்தில் கல்வியில் சிறந்து உயர்ந்த பதவியில் இருக்கின்ற எல்லா இளைஞர்கள், யுவதிகளுக்கும் கல்விச்சேவையை நல்கிய இவ்விவேகானந்தா சனசமூக நிலையத்தினூடாக உதித்தவரே, எமது பலநோக்குக் கூட்டுறறவுச் சங்க பொது முகாமையாளர் ஓய்வு பெற்ற கே.வி.பரமானந்தம் என்பதும் சிறப்புக்குரிய அம்சமாகும்.

இத்தகைய பல்வகைச் சிறப்பைக் கொண்டு இன்று பொன்விழாக்காணும் விவேகானந்தா சன சமூக நிலையம் மேன்மேலும் பல சிறப்புக்களையும் பெற்று நூறாவது ஆண்டில் காலடி வைக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சுபம்

**திரு.கி.சிவப்பிரகாசம்**
**(ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளரும்**
**சமாதான நீதவானும்)**
**செல்வச் சந்நிதி கோவிலடி,**
**தொண்டைமானாறு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமுதாயமும் பெண்கல்வியும்



இன்றைய காலகட்டத்தில் பெண் கல்வியானது முக்கியம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகின்றது. பெண்கள் கல்வி கற்றால்தான் ஒரு சமுதாயம் முன்னேற முடியும் என்ற கருத்து எங்கும் நிலவி வருகின்றது. அந்த வகையில் நோக்குவோமாயின் பெண்கள் இன்று சகல துறைகளிலும் கற்று சாதனை புரிந்து வருகின்றார்கள்.

சங்ககாலம் தொட்டு பெண்களுக்கான கல்வி உரிமை மறுக்கப்பட்டே வந்துள்ளது. வீட்டில் சமைப்பதற்கும் ஏனையவர்களுக்குப் பணிவிடை செய்வதற்கும் தான் பெண்கள் என்ற நிலை காணப்பட்டது. ஆனால் இன்று பெண்கள் இதனை யெல்லாம் தகர்த்தெறிந்து முன்னேறி வருகின்றார்கள். எனினும் பெண்களுக்கு கல்வி வசதிகள் போதிய அளவில் இருக்கின்ற போதிலும் பெண்கள் இன்றைய காலகட்டத்தில் கூட பாதுகாப்பற்றவர்களாகவும் பாலியல் வல்லுறவுக்குட் படுத்தப்படுபவர்களாகவும் இருப்பது வேதனைக்குரிய விடயமாக அமைகின்றது.

ஒரு குடும்பத்தை நோக்கினால் அதனை சீரான முறையில் நடாத்தி செல்வதற்கு குடும்பத்தலைவியான கல்வி கற்ற ஒரு தாயின் பொறுப்பிலேயே அது தங்கியுள்ளது. ஒரு பிள்ளையைப் பத்து மாதம் சுமந்து பெற்று தாலாட்டி பாலூட்டி, சோறூட்டி வளர்த்து அதனைச் சமுதாயத்திற்கு நல்ல பிள்ளையாக சேர்க்கும் பொறுப்பு அத்தாயினதே.

அன்னை வளர்ப்பிலிருந்து அந்தக்குழந்தை பாடசாலைக்குத் தமது ஆரம்பக் கல்வியைத் தொடரச்செல்கின்றது. அங்கே ஆரம்பக்கல்விக்குரிய ஆசிரியர்களாக பெண் ஆசிரியர்களே கூடுதலாகக் கல்வி கற்பிப்பதை நாம் எல்லோரும் கண்கூடாகக் காண்கின்றோம். அத்திவாரம் பலமாக இருந்தால் தான் கட்டிடம் நிலைத்து இருக்கும். எனவே கல்வியின் அத்திவாரம் ஆரம்பக் கல்வியே இதனைக் கற்பிப்பதற்குக் கூடுதலாகப் பொருத்தமானவர்கள் பெண்களே.

இன்று நிர்வாகத் திறனை எடுத்துக் கொண்டால் ஒரு வீட்டை நிர்வகிப்பது மட்டுமன்றி நாட்டையே பெண்கள் நிர்வகித்துக்கொண்டிருப்பதை இங்கே சுட்டிக் காட்டலாம். ஜனாதிபதியாக, பிரதம மந்திரியாக, பாடசாலை அதிபர்களாக, திணைக்களத் தலைவர்களாக நிர்வாகம் செய்வதை கூறிக் கொள்ளலாம். சமகால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகளோடு ஒப்பு நோக்குகையில் இலங்கையில் ஆணாதிக்கம் மிகக் குறைவு எனலாம்.

பெண்கள் எல்லாத் துறைகளிலும் மேலோங்கி நிற்பது பெருமைக்குரியதாக இருந்தாலும் பெண்கள் தந்தைக்கு கணவனுக்கு சகோதரனுக்கு மதிப்புக் கொடுப்பவளாகவும், கட்டுப்பட்டவர்களாகவும் இருக்கும் பொழுது தான் அவள் மேலும் மிளிர முடியும். அவ்வாறு இல்லாமல் பெண்கள் தாங்கள் போகும் போக்கில் கல்வி கற்று விட்டோம் என்ற மமதையில் செல்வார்களாயின் குடும்ப ஒற்றுமை பாதிக்கப்பட்டு குடும்பம் உடைந்து தனித்தனியாக வாழும் நிலை ஏற்படும்.

எனவே பெண்கள் என்னதான் சிறந்த கல்வியைக் கற்றிருந்தாலும் கணவனுக்கு கட்டுப்பட்டவர்களாக இருப்பதே சிறப்பாகும். கீழ்ப்படிதல் என்பது அடிமைத்தனமல்ல என்பதை புரிந்து கொண்டு கல்வியில் மிளிர்ந்து சிறந்த பிரஜைகளை உருவாக்க முன்வர வேண்டும் .

எனவே பெண்பிள்ளைகள் படித்து முன்னேறி தனது குடும்பத்தையும் தனது சமூகத்தையும் இந்த நாட்டையும் முன்னேற்ற வேண்டும். இதுவே பெண்களின் எதிர்கால இலக்காக இருக்க வேண்டும் .

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடவேண்டும் அம்மா
பங்கை அக்கை நலம் பார்த்தல்லவோ இப்பாரினில் அறங்கள் வளரும் அம்மா"
கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

**திருமதி ஜெகதாம்பிகை பரணீதரன்** (ஆசிரியை)
BA(Hons)
யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

## முயற்சியும் பயிற்சியும்

சிறந்த மூளைசாலிப் பிள்ளைகளைத் தேர்ந்தெடுக்கும் தேர்வு ஒன்று ஜேர்மனியில் உள்ள பாடசாலைகளில் இடம்பெற்றது. இதில் பல பாடசாலைகளில் உள்ள மாணவர்களின் திறமைகளை அவர்களின் செயற்பாடுகளிலிருந்து ஆராய்ந்த போது பின்வரும் முடிவு எடுக்கப்பட்டது.

ஒரு மூளைசாலியான பிள்ளை பெற்றோர்களிலிருந்து வருகிறதா பரம்பரையிலிருந்து வருகிறதா சிறந்த பாடசாலையில் இருந்து வருகிறதா சிறந்த ஆசிரியரிலிருந்து வருகிறதா என்று ஆய்வு நடத்தப்பட்டது. இவற்றில் ஒன்றுமே அதற்குக் காரணியல்ல என்றும் ஒரு சதவீத முயற்சியுடன் தொண்ணூற்றொன்பது சதவீத பயிற்சியுமே சிறந்த மூளைசாலிகளை உருவாக்குகின்றது என்று முடிவு எடுக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவொளி கையெழுத்துப் பத்திரிகையிலிருந்து...

## கூட்டுறவுத் தந்தை றொபேட் ஓவன்



"உலகின் முதலாவது ஜனநாயக சோசலிசவாதி, உலகின் முதலாவது தொழிற்சங்கவாதி, உலகின் முதலாவது கல்வி முன்னோடி, உலகின் முதலாவது தொழிலாளர் தோழன், கூட்டுறவியக்கத்தின் தந்தை" என்றெல்லாம் பிற்கால பொருளாதார மேதைகளான திக்காடோ, மோல்தஸ் போன்றோரால் போற்றப்படுகின்றார் றொபேட் ஓவன்.

றொபேட் ஓவனின் கருத்துக்கள் யாவும் புரட்சிகரமானவை, புனிதமானவை, தன்னலமற்றவை, உயரிய சிந்தனைகளுடையவை.

"கூட்டுறவே நாட்டுயர்வு" என்பதற்கேற்ப கூட்டுறவு ஒன்றினால் மட்டும் தான் உலகம் போற்றும் பல சாதனைகளை உருவாக்க முடியும் என்று அன்றே உணர்ந்த றொபேட் ஓவன் கூட்டுறவின் உயர்ந்த கோட்பாடுகளை முன்வைத்தார்.

"தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு முதலாளிகளையும், அரசாங்கத்தையும் எதிர்பார்க்காது சுய உதவி, பரஸ்பர உதவி என்ற அடித்தளத்தில் ஒரு கூட்டுறவுச் சங்கத்தை நிறுவி முதலாளித்துவச் சுரண்டல்களையும் முதலாளித்துவ அச்சுறுத்தல்களையும் முற்றாக நீக்கி மிக இலகுவில் தொழிலாளர்கள் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம்" என்ற அவரது கருத்துக்கள் தலைசிறந்தவையாகும்.

றொபேட் ஓவன் கூட்டுறவுச் சிந்தனைகளை முன்வைத்ததோடு மட்டும் நின்று விடவில்லை. அவற்றைச் செயற்படுத்துவதற்காக தனது சொந்தப் பணத்தில் இங்கிலாந்திலும், அயர்லாந்திலும் கூட்டுறவுக் குடியிருப்புக்களையும், கூட்டுறவுச் சங்கங்களையும் உருவாக்கினார்.

கூட்டுறவுச் சிந்தனைகளை முன்வைத்து கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கிய, கூட்டுறவுக் கொள்கைகள் உருவாக வழிசமைத்த றொபேட் ஓவனை கூட்டுறவின் தந்தைஎன்று சொல்லாமல் வேறு எப்படிச் சொல்வது?

ஏழைக்குடும்பத்தில் பிறந்து வறுமையின் கொடுமை தாங்காது சாதாரண தொழிலாளியாக வேலை செய்த றொபேட் ஓவன், தனது விடா முயற்சியினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகப் பெரிய தொழிலதிபரான போதும், தான் நடந்து வந்த பாதையை மறக்காது தொழிலாளர்களின் விடிவுக்காக தன்னையே அர்ப்பணித்தார் என்றால், அவர் தொழிலாளர்களின் தோழன் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

தொழிற்சங்க இயக்கத்தை முதன் முதலில் உருவாக்கித் தொழிலாளர்களின் உரிமைகளைப் பெறுவதற்காக வேலை நிறுத்தம், மறியல் போராட்டம், ஆர்ப்பாட்டம், ஊர்வலம், பேச்சுவார்த்தை போன்றவற்றை நடத்தினார். சட்டத்தின் பிரகாரம் அவரது தொழிற்சங்க நடவடிக்கைகள் யாவும் தோல்வியுற்ற போதும் றொபேட் ஓவன் உலகின் முதலாவது தொழிற்சங்கவாதி என்பதை இன்றும், என்றும் உலகம் மறக்காது.

"சூழ்நிலைதான் மனிதனை உருவாக்குகிறது. கெட்ட சூழ்நிலை நல்ல மனிதனையும் உருவாக்குகிறது" என்ற தனது கருத்துக்கள் மூலம் தொழிற்சாலைச் சீர்கேடுகளை சீர்திருத்த முன்வந்த றொபேட் ஓவன் கூட்டுறவின் தந்தை மட்டுமல்ல, சமூக சீர்திருத்தவாதி என்பதும் தெட்டத் தெளிவாகின்றது.

"மனிதனுள் மறைந்து கிடக்கும் மகத்துவத்தை வெளிப்படுத்துவதே கல்வி" என்ற சுவாமி விவேகானந்தரின் வாய்மொழிக்கேற்ப கல்வியின் மகத்துவத்தையும் றொபேட் ஓவன் உணரத்தவறவில்லை, சிறுவர்களை வேலையால் நீக்கி கல்வி போதித்த மாமனிதர் அவர்.

உலகில் தொழிலாளர்களுக்கு முதியோர் கல்வியும், சிறுவர்களுக்கு பொதுக்கல்வியும் போதித்த முதலாவது நபர் என்ற பெருமை நம் கூட்டுறவுத் தந்தையையே சாரும், இதனால்த்தானன்றோ கல்வியின் முன்னோடி எனப் போற்றப்படுகின்றார்.

கூட்டுறவியக்கத்தின் தோற்றத்திற்கும். வளர்ச்சிக்கும் மட்டுமல்லாது, தொழிலாளர்களின் புனர்வாழ்வுக்காகவும், தொழிலாளர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் அரும் பெரும் தொண்டாற்றிய றொபேட் ஓவன், காலத்தின் சூழ்நிலைகளின் தாக்கங்களினால் தனது கூட்டுறவுச் சிந்தனைகளை பூரணமாகச் செயற்படுத்தி வெற்றி பெறத் தவறி விட்டார், என்பது தான் உண்மையாகும்.

தனது புரட்சிகரமான முயற்சிகள் யாவும் தோல்வியுற்றதைக் கண்டு மனம் வருந்திய றொபேட் ஓவன் "நான் அடுத்த நூற்றாண்டுகளில் பிறக்கவேண்டியவன். நான் காலத்தால் முந்திப் பிறந்து விட்டேன். எனது புரட்சிகரமான மனித நேயச் சிந்தனைகள் யாவும் தவிடு பொடியாக்கப்பட்டு விட்டன. ஆனால் எனது வாழ்க்கை பயனற்றதாகி விடவில்லை, மனிதனை வளம்படுத்தக் கூடிய சிந்தனைகளை நான் முன்வைத்துள்ளேன். முக்கியமான உண்மைகள் பலவற்றை உலக மக்களுக்கு எடுத்துக் கூறியுள்ளேன். அவை என்றோ ஒரு நாள் இவ்வுலகில் நிச்சயமாக கொழுந்து விட்டுப் பிரகாசிக்கும்" என்று தனது மரணப்படுக்கையில் கூறிய வார்த்தைகள் மனதை உருவாக்குபவையாக இருந்தாலும். இன்றும் உலகில் கொழுந்து விட்டுப் பிரகாசித்துக் கொண்டேயிருக்கின்றன என்பதை யாராலும் மறுக்கவோ, அன்றி மறைக்கவோ முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லியம் கிங், றொச்டேல் முன்னோடிகள் றொபேட் ஓவனின் சிந்தனைகளை இன்று மாபெரும் இயக்கங்களாக்கி விட்டனர். கூட்டுறவு இயக்கம் தெழிற்சங்க இயக்கம், சீர்திருத்த இயக்கம் என்பன இன்று உலகளாவிய இயக்கங்களாக மலர்ந்து விட்டன,

அது மட்டுமன்றி ஆங்கில மொழியில் கூட்டுறவு பற்றிய நூல் ஒன்றை முதன் முதலில் வெளியிட்ட இலங்கையின் கூட்டுறவுத் தந்தை எனப் போற்றப்படுகின்ற பெரியார் வீரசிங்கம் அவர்களையும் இங்கு குறிப்பிட வேண்டியது மிக அவசியமானதாகும்.

இவ்வாறெல்லாம் றொபேட் ஓவனின் கனவு நனவான போது அவர் உயிருடன் இல்லை என்பதுதான் வேதனைக்குரிய விடயமாகும்,

றொபேட் ஓவன் என்றொரு மாமனிதர் தோன்றியிருக்காவிட்டால் இன்று நாம் நம் வாழ்வையே வளப்படுத்தும் புனிதமான கூட்டுறவு என்ற சொல்லைத்தான் கேட்டிருக்க முடியுமா? இல்லை உலகெங்கும் காட்சியளிக்கும் லாபநோக்கமின்றிச் சேவை நோக்கமுடைய கூட்டுறவுச் சங்கங்களைத் தான் பார்த்திருக்க முடியுமா?

எனவே "ஒவ்வொருவருக்கும் அனைவருக்கும், அனைவரும் ஒவ்வொருவருக்கும்" என்ற கூட்டுறவு அம்சத்தினை உலகறியச் செய்த கூட்டுறவுத் தந்தையான நம் றொபேட் ஓவன் அவர்கள் மறைந்தாலும் அவரது கருத்துக்கள் இன்னும் மறையவில்லை.

வாழ்க நம் கூட்டுறவுத்தந்தை

வளர்க அவரது கூட்டுறவு விழுமியங்கள்

**வே.பரமானந்தம்**

முன்னாள் பொது முகாமையாளர்

ப.நோ.கூ.சங்கம் – பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன யுகத்தில் விஞ்ஞானம் மனித வாழ்க்கையில் ஏற்படுத்திய மாற்றங்கள்



மனித வாழ்க்கையில் எங்கும் விஞ்ஞானம் எதிலும் விஞ்ஞானம் என்றவாறு இன்றைய நவீனயுகம் விஞ்ஞான மயமாகவே மிளிர்வதைக் காண்கின்றோம். விஞ்ஞானம் இன்று மனித வாழ்க்கையுடன் பிரிக்க முடியாத வகையில் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து செல்வதை யாவரும் கண்கூடாகக் காண்கின்றோம்.

ஆரம்பகாலங்களில் இலைகுழை ஆடைகளுடன் காடுகளில் அலைந்து திரிந்த மனிதன் நாகரிகமுற்று பண்பாடுகளைக் கற்றுக் கொள்வதற்கு விஞ்ஞானமே வழிவகுத்தது என்று கூறவேண்டும். அதாவது தோமஸ் அல்வா எடிசன் கண்டுபிடித்த மின்சாரக்குமிழ் மக்களை இருளிலிருந்து விலக்கி ஒளிமயமான உலகுக்குள் இட்டுச் சென்றது. எனவே இரவைப்பகலாக்கியது விஞ்ஞானம் என்று கூறின் மிகையாகாது.

அதே போன்று விஞ்ஞான வளர்ச்சியின் பயனாக மருத்துவத்துறையில் இன்று மகத்தான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பது பெருமைக்குரிய விடயமாகும். அதாவது லூயிபாஸ்ரருடைய கிருமி தொடர்பான ஆய்வு மேரிகியூரி அம்மையாரின் ரேடியம் தொடர்பான ஆய்வு என்பன மனிதனை வருத்திய கொடிய தொற்று நோய்களிலிருந்து பாதுகாக்க வழிசமைத்தமை உலகிற்கோர் வரப்பிரசாதமாகும்.

அதுமட்டுமன்றி நவீன கண்டுபிடிப்பு விரிவாக்கலினால் இருதய மாற்றுச்சிகிச்சை, சிறுநீரகம் மாற்றுதல், பரிசோதனைக் குழாய் மூலம் கருவை உருவாக்கல், மரபணுசோதனை முறை என்பன மருத்துவத்தில் வியக்க வைக்கும் செயற்பாடுகளாக அமைந்தமைக்கு விஞ்ஞானமே வித்திட்டது என்று கூறுவது குன்றின் மேலிட்ட தீபம் போன்றதாகும்.

இவ்வாறாக விஞ்ஞான வளர்ச்சியினால் ஏற்பட்ட தொழில்நுட்பமானது மனித மேம்பாட்டிற்கு பெரிதும் உறுதுணைபுரிகின்றது என்றே கூறவேண்டும். இத்தொழில் நுட்பக் கண்டுபிடிப்புக்களானது மனித வாழ்வில் வேலை வாய்ப்பினை அதிகரித்ததுடன் நேரவிரயத்தைத் தவிர்ப்பதற்கும் அதிக பயனைப்பெற்று மேன்மையடைய வைத்தது எனலாம்.

இத்தொழில் நுட்ப வளர்ச்சியின் பயனாக தொலைபேசி, தொலைக்காட்சி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலி, கணனி, இணையம் போன்ற பல்வேறு சாதனங்களை உருவாக்கி சாதனை படைத்துள்ளது. இவ் விஞ்ஞானம் என்று கூறுதல் மிகப் பொருத்தமான ஒன்றாகும். அதாவது தூர தேசத்தில் இடம்பெறும் செய்திகள் நிகழ்வுகளை வீட்டில் இருந்தவாறே உடனுக்குடன் அறிய அரிய பெரும் வாய்ப்பினை அள்ளி வழங்கியுள்ளது இவ் நவீன விஞ்ஞானயுகம். இவ்நவீன யுகமானது மனித வாழ்க்கையில் பெரியதொரு மாற்றத்தை உண்டு பண்ணி உலகையே உள்ளங்கைக்குள் உள்ளடக்கி மிகவும் இலகுவாகவே எந்தக் காரியத்தையும் செய்து முடிக்குமளவிற்கு இன்றைய நவீன தொடர்புச் சாதனங்கள் மனிதனை ஆட்கொண்டு ஆனந்தத்தில் ஆழ்த்தி விட்டன என்ற கூறுவதே பொருத்தமானதாகும்.

இவைமட்டுமன்றி புதியதோர் உலகினைக் காண விண்வெளியில் உலாவரவும் செயற்கைக் கோள்களை விண்ணில் பவனிவரச் செய்யவும் இவ்விஞ்ஞானம் வழிவகுத்துள்ளது.

இவ்வாறாக விஞ்ஞானத்தின் வியத்தகு முன்னேற்றம் மக்கள் சமூகத்திற்கு பல்வேறுபட்ட பயன்களைத் தருகின்ற போதிலும் அதனால் ஏற்படுகின்ற தீய விளைவுகளும் அதிகரித்துச் செல்வதை நாம் காணக்கூடியதாக உள்ளது. எவ்வாறெனில் அணுசக்தியானது ஆக்கப்பணிகளுக்குப் பயன்படுவதற்குப் பதிலாகப் பெரிதும் அழிவுப் பணிகளுக்கே பயன்படுத்தப்படுகின்றது.

அதே போன்று தொலைபேசி, கணினி, இணையம் எனும் தொடர்புச் சாதனங்களால் மனித வாழ்க்கையில் பல நன்மைகள் கிடைக்கின்ற போதிலும் தீய விளைவுகளும் பாரிய அளவில் தலைதூக்குகின்றது என்பதை எவராலும் மறுக்கவோ அன்றி மறைக்கவோ முடியாது.

இச்சாதனங்களின் பயன்பாடு சிறுவர்கள் மத்தியிலும் அதிகரித்துக் காணப்படுவதால் மாணவர்களின் கல்வி மழுங்கிகடிக்கப்படுகிறது. கலாச்சாரம் சீரழிக்கப்படுகின்றது. இதனால் மனித வாழ்க்கை சீர்குலைக்கப்படுகின்றது. சமூக விழுமியங்கள் அற்றுப் போகின்றன. இதனால் பண்பாடற்ற வழிதவறிய சீர்கேடான சமுதாயமாக இன்றைய மனித வாழ்வு திண்டாடப்பட்டுக்கொண்டிருப்பதை நாம் அனைவரும் மிகவும் வேதனையுடன் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

எனவே நவீனயுகத்தில் விஞ்ஞான வளர்ச்சியானது பல பயன்களைத் தந்து வீறுநடைபோடுகின்ற அதேவேளை சில தீயவிளைவுகளையும் ஏற்படுத்தி சமூக வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கினறது என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

ஆகவே விஞ்ஞான வளர்சியினால் எய்தக்கூடிய அனைத்து நன்மைகளையும் பெற்று எம்மை இழிவுநிலைக்கு இட்டுச் செல்லும் தீய சக்திகளை அகற்றி மனித வாழ்வில் மேம்பாடடைந்து சமூக விழுமியங்களைக் கடைப்பிடித்து மிகவும் பண்பு நிறைந்த சமுதாயத்தை உருவாக்குவோமாக.

**ஆக்கம் - ஜெ.சிவனேஸ்வரி**

(ஆசிரியை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றோம்

எமது தாய் நிறுவனமாக இயங்கிவரும் விவேகானந்தா சனசமூக நிலையம் 2014ல் பொன்விழாக் காண இருக்கிறது. இதனோடு இணைந்து விவேகானந்தா சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கம் இப்பொன்விழாவை மிகவும் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறோம்.

இந்த வகையில் இக்கிராமிய மக்களுடைய வாழ்வு வளம்பெற சமூக வாழ்வாதாரம் மேம்பட 1987ம் ஆண்டு விவேகானந்தா சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கம் விவேகனாந்தா சனசமூக நிலையத்தினால் ஸ்தாபிக்கப்பட்டது. பருத்தித்துறை பிராந்தியத்தில் இதன் துரித செயற்பாடுகளின் மூலம் ஒரு முதலாம் படிச் சங்கமாகத் திகழ்ந்து வருகின்றது. இக்காலகட்டத்தில் இச்சங்கம் பல்வேறுபட்ட கடன் திட்டங்களை அங்கத்துவர்கள் மத்தியில் அறிமுகப்படுத்தி, கிராம மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு உதவுவதோடு அவர்களின் சிக்கனம், சேமிப்பு, ஐக்கியம், ஜனநாகயப்பண்பு, தலைமைத்துவம் போன்றவற்றை அபிவிருத்தி செய்து வருவதும் ஒரு சிறப்பான அம்சமாகும்.

இச்சங்கம் கிராம மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக பல வகையான கடன் திட்டங்களையும் முன்வைத்து நடைமுறையில் கொண்டு வந்துள்ளது. இதில் சாதாரண கடன், சுயமுயற்சிக் கட்ன், விவசாயக்கடன், விதவைகள் கடன், மிகவறிய மக்கள் கடன், இளைஞர் கடன், உயர்கல்விக்கடன் போன்ற வட்டி குறைந்த கடன் திட்டங்களையும் வழங்கி வருகின்றது. இது மட்டுமல்லாமல் ஆரம்ப காலத்தில் எமது கடந்தகால செயற்பாடுகளில் ஒன்றான மரண சகாயத்திட்டத்தினையும் நடைமுறைப்படுத்தி அங்கத்தவர் குடும்பத்தில் மரணம் சம்பவிக்கும்போது உடனடித் தேவைக்காக மரண சகாய நிதியையும் வழங்கி வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இக்கிராம விவசாயிகளின் நன்மை கருதி உறுப்பினர்கள் பயன்பெறக்கூடியதாக கிருமி நாசினி தெளிகருவியையும் இலவசமாக வழங்கி உதவிபுரிந்துள்ளமையும் இச்சங்கத்தின் ஒரு சிறப்பான செயற்பாடாகும். ஆரம்ப காலத்தில பாலர் கல்விக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்மா வழங்கும் உதவித்திட்டத்தினையும் சங்கம் முன்னெடுத்து வந்துள்ளது. இது மட்டுமல்லாமல் பாலர் கல்வி ஆசிரியர் இருவருக்கு ஊதியமும் வழங்கி கல்வி மேம்பாட்டிற்கு பெரிதும் உறுதுணையாக இருந்து வந்துள்ளது. ஒரு காலகட்டத்தில் சனசமூக நிலையத்திற்கு பத்திரிகைக்கான நிதியினையும் வழங்கி நிலைய செயற்பாட்டிற்கும் உந்து சக்தியாக இச்சங்கம் இருந்து வந்துள்ளது.

50 ஆண்டு நிறைவு விழாவில் எம்மக்களோடு இணைந்து சேமித்து பயன்பெற்று உய்வோமாக!

"கூட்டுறவே நாட்டுயர்வு"

**கெருடாவில்**
**விவேகானந்தா சி.க.கூ.சங்கம்**


கண்டிப்பாய் இரு
ஆனால் கோபப்படாதே!
சிக்கனமாய் இரு
ஆனால் கஞ்சனாய் இராதே!
வீரனாய் இரு
ஆனால் போக்கிரியாய் இராதே
சுறுசுறுப்பாய் இரு
ஆனால் பதட்டப்படாதே!
தர்மம் செய்
ஆனால் ஆண்டி ஆகிவிடாதே!
பொருளைத் தேடு
ஆனால் பேராசைப்படாதே
பணிவாய் இரு,
ஆனால் கோழையாய் இராதே.
அன்பு காட்டு
ஆனால் அடிமையாய் இராதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பள்ளிக்கு காணி அன்பளிப்புச் செய்தோர்
திரு.மு.இரத்தினம், திரு.மா.குணம், திரு.பொ.அருந்தவராசா





நிலையத்துக்குரிய காணியினை சகாயவிலையில் வழங்கியுதவியவர்
திரு.உ.பாலசுப்பிரமணியக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவேகானந்தா புதியகட்டிட திறப்புவிழா
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூகோள வெப்பமாதல்



இன்று பூமியில் பூகோள வெப்பமாதல் பாரிய பிரச்சினையாக உள்ளது. இதன் காரணமாக பூமியானது பாரிய அனர்த்தங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக வளிமண்டலத்தில் காபன் அதிகரிப்பு ஓசோன் படையில் துவாரம் பச்சைவீட்டு வாயுக்களின் செறிவு என்பன இவ் வெப்பமாதலை தூண்டுகிறது.

குளோரோ புளோரோ காபன் (CFC) நீராவி $CH_4$, $Co_2$, $N_2$ போன்ற வாயுக்கள் வெப்பத்தை உறிஞ்சி வைத்திருக்கக்கூடிய வாயுக்கள் ஆகும். இவை பச்சை வீட்டு விளைவு வாயுக்கள் எனப்படும். இவ்வாறு இவ்வாயுக்களினால் உறிஞ்சப்படும் வெப்பம் காரணமாக பூகோளம், மற்றும் வளிமண்டலம் சூடாகிறது. இது பூகோள வெப்பமாதல் எனப்படும்.

மேலும் CFC, குளோரோ புளோரோ காபன் வாயுவானது, ஓசோன் படையுடன் தாக்கமடைந்து $O3$ ஐ விரிவடையச் செய்து ஓசோனில் துவாரங்களை ஏற்படுத்தியுள்ளது. இதனால் பிற ஊதாக்கதிர்கள் பூமிக்குள் வளிமண்டலத்துள் வந்து வளிமண்டல சராசரி வெப்பநிலையை அதிகரித்துச் செல்கிறது.

இவ்வாறு பூமியின் வெப்பம் ஏற்கனவே இருந்ததைவிட கூடிக்கொண்டு செல்கிறது. பூமியின் சுழற்சி வேகத்திலும் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக அறியப்பட்டுள்ளது. பூமியின் வெப்பமடைதல் காரணமாக காலநிலையானது மாற்றமடைந்துள்ளது. அதாவது வறட்சி, காலம் தவறியபருவமழைகள், வெளளப்பெருக்கு, பனிக்கட்டி உருகுதல், கடல் மட்டம் உயர்வு போன்ற மாற்றங்கள் நிகழ்கிறது.

பூகோள வெப்பமடைதல், காலநிலை மாற்றம் காரணமாக விவசாயம் சுகாதாரம் மற்றும் ஏனைய விடயங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

2013ல் ஏற்பட்ட வடகீழ்ப்பருவப்பயிற்சி மழை அதிகரிப்பு, வெள்ளப்பெருக்கு காரணமாக இலங்கை இந்தியாவில் பயிர்நிலங்கள் பேரழிவைச் சந்தித்துள்ளன. இலங்கையில் 2014 இலும் வறட்சி காரணமாக விவசாயம் பாதிப்படைந்து விரக்தியை ஏற்படுத்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் யாழ்ப்பாணத்தில் வறட்சி காரணமாக குடிநீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இரணைமடுக் குளத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு குடிநீர் விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அதே நேரம் எதிர்காலத்தில் வன்னியில் விவசாயத்திற்கு நீர்ப்பற்றக்குறை ஏற்படும் என்பதை காரணம் காட்டி வன்னி விவசாயிகள் மறுத்துவருகின்றனர்.

பூகோள வெப்பமடைதல் காரணமாக புதிய பதிய நோய்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக சார்ஸ் மேர்ஸ் போன்ற சுவாசநோய்கள் ஏற்படுகின்றன. புதிய வகையான பக்ரீரியாக்களின் வைரஸ் தோற்றம் இதற்கு காரணமாகும். மேலும சூழல் மாசடைதல் அதிகரித்துள்ளது. ஓசோனில் ஏற்பட்டுள்ள துவாரம் ஊடாக வரும் புற ஊதாக்கதிர்கள் காரணமாக தோல்புற்று நோய் கட்காசப் பாதிப்புக்கள் என்பன ஏற்பட்டுள்ளன.

மேலும் இவ் ஊதாக்கதிர்கள் பயிர்த்தாவரங்களின் ஒளித்தொகுப்பில் தலையிடுவதன் மூலம் அவற்றின் விளைச்சலைக் குறைக்கின்றன. மேலும் மண்வளம் குன்றி வருகிறது. அதிக வெப்பம் காரணமாக மண் நீரானது ஆவியாகி மேலே செல்ல நீரின் உப்புக்கள் நிலத்துள் படிந்து மண் உவர்த்தன்மை அதிகரிக்கிறது. இவை பயிர்ச்செய்கையை பாதித்து உணவுப் பஞ்சத்தை ஏற்படுத்தி உடல் நலக்கேட்டை உருக்குகிறது.

பூகோள வெப்பமாதலின் காரணமாக பாலை பரவுதல் செயற்பாடு அதிகரித்து வருகிறது. பாலைவனங்களை அண்டிய பிரதேசங்களிலும் காலநிலை மாற்றம் காரணமாக அவை பாலைவனமாக மாறிவருகிறது. இது பாலை பரவுதல் எனப்படும். இத்தன்மையை ஆபிரிக்காவின் சாகல் பிரதேசத்தில் அதிகம் காணலாம். மேலும் பற்றக்கோனியா, கோபிபாலைவனம்,அரேபியா பாலைவனம் போன்றவற்றைச் சூழ்ந்த பிரதேசங்களிலும் பாலை பரவுதல் இடம் பெற்று வருகிறது. எதிர்காலத்தில் இதன் வீதம் இன்னும் அதிகரிக்கலாம்.

பூகோள வெப்பமாதலினால் வெப்ப நோய்களினால் இறப்புக்கள் அதிகரிக்கும் காலநிலை சீரற்ற இடங்களில் இருந்து மக்கள் இடம்பெயர்வர். இது தேசிய சர்வதேச குடித்தொகையில் மாற்றத்தை ஏற்படுத்தும். குடிப்பெயர்வு காரணமாக நோய்கள் வேகமாக பரவும், கடல்மட்டம் உயர்வடைவதன் காரணமாக மாலை தீவு மக்கள் அவுஸ்ரேலியாவில் குடியேற்றுவதற்கு திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும் இப்பூகோள வெப்பமாதல் காட்டுத்தீ, அமில மழை, வளிமண்டல அமுக்க வேறுமாடு காரணமாக புயல், சூறாவளி, சுனாமி மற்றும் பூயின் உள்வெப்பம் அதிகரித்து எரிமலை வெடிப்பு நில நடுக்கம் போன்ற இயற்கை அனர்த்தங்களை அதிகரிக்கும் இதனால் எதிர்காலத்தில் மனிதன் ஆரோக்கியமாக வாழமுடியாத சூழல் ஏற்படும்.

பூகோள வெப்பமாதலைக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இன்று குளிர்சாதனப்பெட்டிகளில் CFC வாயுவுக்குப்பதில் நச்சற்ற பாலிஸ்டைரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயு பயன்பத்தப்படுகிறது. அணுமின் என்பதற்கு பதிலாக காற்றலைமின், கடலலைமின், நீர்மின் உற்பத்திகள் செயற்படுத்தப்படுகிறது. தமிழகத்தின் குலசேகரப்பட்டினத்தில் கடலலைகளிலிருந்து மின் உற்பத்தி செய்யப்படுகிறது. அணுக்கதிர் வீச்சானது பூகோள வெப்பத்தை கூட்டும் என்பதாலும் ஆபத்தானது என்பதாலும் அணு தொழில்நுட்பங்களை கைவிட சர்வதேசம் முன்வந்துள்ளது. 1972 ஸ்ரொக்கோம் மாநாட்டில் பூவிவெப்பமடைதல் பிரச்சனைகள் ஆராயப்பட்டது. 1986ல் வியன்னா மாநாடு $O_3$ ஓட்டை CFC உற்பத்திக் குறைப்பு பற்றி ஆராய்ந்தது. 1997ல் யப்பானில் நடாத்தப்பட்ட டோக்கியோ மாநாட்டில் பச்சைவீட்டு விளைவு பற்றி ஆராயப்பட்டது.

பூமி வெப்பமடைவதைத் தடுப்பற்கு சிறந்த வழி காடுகளைப் பாதுகாத்தலும் செயற்கை காடுகளை உருவாக்கலும் ஆகும். இதற்காக அரசாங்கம் வன, வள பாதுகாப்புச்சட்டங்களை உருவாக்கியள்ளது. 1907ல் வனவளச் சட்டமும், 1924ல் தாவரப்பாதுகாப்புச் சட்டமும், 1951ல் மரம் வெட்டுதலைத் தடுக்கும் சட்டமும், 1988ல் தேசிய வனாந்தர பாதுகாப்புச்சட்டமும் நடைமுறைக்கு வந்தது. காடுகளை அதிகரிப்பதன் மூலம் ஒட்சிசன் செறிவை $O_2$ ஐ கூட்ட முடியும். அதேநேரம் $CO_2$ வாயு தாவரங்களின் ஒளித்தொகுப்புக்கு பயன்படுத்தப்பட்டு, வெப்பத்தை உறிஞ்சி வைத்திருக்கக் கூடிய காபன் செறிவை குறைக்க முடியும்.

ரஷ்ய விஞ்ஞானிகள் வளிமண்டலத்தில் ஒரு குறிப்பிட்ட நீள அளவுள்ள(Wave Length) லேஸர் கதிரியக்க ஒளியைப்பரப்பி பிராணவாயுவால் உட்கொள்ளப்படுகிறது. (Oxygen Molculas asserb the rays) இதன் விளைவால் பிராணவாயு உயர்செயல் திறன்போன்ற (Hyper activity) சூரிய ஒளியின் மூலம் அணுக்களாகப் பிரிக்கப்பட்டு, அவற்றை பிராணவாயுவுடன் சேர்க்கும்போது நிரப்புகிறது. ஓசோன் கலைந்து பிரிவதைவிட உற்பத்தியாவது பன்மடங்கு விரைவில் ஏற்படுவதாக கண்டுபிடித்துள்ளளனர். உலகின் அபாயங்களில் பேரச்சம் தரும்நிலை முழுவதுமாக நிக்கப்படும் நிலை எண்ணி மகிழத்தக்கது.

இவ்வாறு பூகோள வெப்பமாதலைத் தடுக்க சர்வதேதசமும், விஞ்ஞானிகளும் எடுத்து வரும் முயற்சிகளில் நாமும் தோள் கொடுப்போமாக!

**ச.சபேசன்**

மாணவன் கலைப்பீடம்

யர்ப்பாணமப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவேகானந்தா முன்பள்ளி

விவேகானந்தா முன்பள்ளி சர்வோதயத்தின் உதவியுடன் 1981ம் ஆண்டு நிறுவப்பட்டது. இதற்கு கற்பிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களும் சிறுதொகைப்பணம் சர்வோதயத்தினால் வழங்கப்பட்டது. அத்துடன் ஆசிரியர்களுக்கு புங்குடுதீவு சர்வோதயம் பயிற்சி அளித்தது. பல வகையிலும் புங்குடுதீவு சர்வோதயம் கல்விப்பணிகளோடு பல சமூக வளர்ச்சிப் பணிகளிலும் ஊக்குவிப்புச் செய்தது. அத்துடன் விவசாய முயற்சியை முன்னெடுப்பதற்கு கல்மடு என்னும் இடத்தில் தோட்ட நிலம் வழங்கி பல வழிகளிலும் உதவி புரிந்தது. அதனை விவேகானந்தா சனசமூக நிலையம் நினைவு கூர்ந்து பாராட்டுகிறது. அதுமட்டுமல்ல பினனர் சி.தனபாலசிங்கம் அவர்கள் சர்வோதயம் முன்பள்ளியை சீமெந்தினால் கட்டுவதற்கு நிதிவழங்கி உதவி செய்தது குறிப்பிடத்தக்கது.

முன்பள்ளி ஆசிரியர்களின் விபரம் அவர்களைக் கௌரவித்து நினைவுபடுத்தும் முகமாக இங்கே தரப்படுகின்றது.

1. செ.குணதேவி
2. அ.பிறேமாவதி
3. ப.அருந்தவமலர்
4. ர.புவனேஸ்வரி
5. ச.கவிதா
6. ஜெ.அசிகா
7. ஜெ.யோகேஸ்வரி
8. அனுஷா
9. வ.அனுதா
10. இ.வனஜா
11. அ.அஜந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சமூக ஐக்கிய சீர்திருத்தச் சங்கம்

விவேகானந்தா சனசமூக நிலையத்தின் ஒரு உதவி நிறுவனமாக கெருடாவில் சமூக ஐக்கிய சீர்திருத்தச் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டு விவேகானந்தா சனசமூக நிலையத்துடன் இணைந்து செயலாற்றியது. இந்தச்சங்கம் 1980 காலங்களில் அமைக்கப்பட்டது. இதன் மூலம் எமது மக்களின் மத்தியில் ஏற்பட்ட சிறுசிறு சச்சரவுகளை பொலீஸ் நிலையத்திற்கு செல்லவிடாமல் சமரசமாகப் பேசித்தீர்ப்பது மற்றும் போதை எதிர்ப்பு நடவடிக்கை மூலம் மதுப் பழக்கத்தை ஒழித்தல், மற்றும் மயானம் வரை அமைதியைப் பேணுதல் தேவார ஆராதனையுடன் மயானம்வரை பிரேதத்திதினை எடுத்துச் செல்லுதல், மயானத்தில் சங்க உறுப்பினர்களே நின்று அடக்கம் செய்தல் போன்ற சீர்திருத்தச் செயல்களைச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

**சமூக ஐக்கிய சீர்திருத்த உறுப்பினர்கள் விபரம் பின்வருமாறு**

1. சி.மகாலிங்கம் - தலைவர்
2. செ.கனகராசா - செயலாளர்
3. கு.சந்திரசேகரம் - பொருளாளர்

உறுப்பினர்கள்

1. வே.சிவானந்தம்
2. சீ.தியாகராசா
3. ஆ.இந்திரசித்து
4. செ.முத்துலிங்கம்
5. சி.சோதிலிங்கம்
6. வ.வெள்ளையன்
7. சி.முத்துலிங்கம்
8. வே.சச்சிதானந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விவேகானந்தா கல்வி மன்றம்**

விவேகானந்தா சனசமூக நிலையம் 1981ம் ஆண்டு கல்வி நிலையம் ஒன்றை ஆரம்பித்தது. இக்கல்வி நிலையத்தின் ஊடாக 1ம் ஆண்டு தொடக்கம் G.C.E சாதாரண தரம் வரை க்லவி வகுப்புக்கள் நடைபெற்றன. 8ம் ஆண்டு தொடக்கம் G.C.E சாதாரண தரம் வரை இரவு வகுப்புக்களாக மாலை 6மணி தொடக்கம் இரவு 9மணிவரை நடைபெற்றது. இக்காலங்களில் கல்வி கற்பிக்கப்பட்டது. அவ்வாறே மாணவர்களும் நன்கு கல்வி கற்றுப்பயன் பெற்றார்கள். இங்கே கல்வி கற்றவர்கள் இப்பொழுது அரசாங்கப் பதவிகளில் இருக்கிறார்கள் என்றால் மிகையாகாது. இக்கல்வி நிலையம் நடைபெறும் காலங்களில் வீடியோ படக்காட்சிகள் மூலம் இருந்த தொந்தரவு சமூக ஐக்கிய சீர்திருத்தச் சங்கத்தின் மூலம் அகற்றப்பட்டு கல்வி சிறந்து விளங்கியது. பின்னர் போர்க்கால சூழலினால் ஆசிரியர்களும் மாணவர்களும் இடம் பெயர்ந்து சென்றதனால் கல்வி வகுப்புக்கள் தடைப்பட்டன. மீண்டும் வந்து மக்கள் மீளக்குடியேறும் பொழுதெல்லாம் விவேகானந்தா கல்வி மன்றம் மீண்டும் தனது பணியைத் தொடர்ந்து செய்து வந்தது.

2014ம் ஆண்டு பங்குனி மாதம் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசித்து வரும் எமது பழைய மாணவர்களின் உதவியுடன் “கெருடாவில் நற்பணி மன்றம்” என்ற பெயரில் கல்வி வகுப்புகள் தொடர்ந்து தரம் 1 தொடக்கம் 7 வரை நடைபெற்று வருகிறது. கெருடாவில் நற்பணி மன்றத்தை எமது விவேகானந்தா சனசமூக நிலையம் வரவேற்பதுடன் அவர்களின் பணியைப் பாராட்டுகின்றது. இந்த வகுப்புக்கள் மேலும் வளர்ச்சியடைந்து G.C.E சாதாரண தரம் வரை நடாத்தப்பட வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அவ்வாறு நடைபெற விவேகானந்தா சனசமூக நிலையம் பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்பதில் சந்தேகமில்லை.

1981 காலத்திலிருந்து ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்களின் பெயர்களை கௌரவித்து பாராட்டும் நோக்குடன் இந்தப் பொன்விழா மலரில் குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

விவேகானந்தா கல்வி மன்றத்தில் 1981ம் ஆண்டிலிருந்து கல்வி கற்பித்தோரின் பெயர் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. மு.இரத்தினம் | 2. வே.பரமானந்தம் | 3. செ.கனகராசா |
| 4. வெ.பிறேமச்சந்திரன் | 5. ஜெ.சிவனேஸ்வரி | 6. ர.புவனேஸ்வரி |
| 7. சி.விஜயமலர் | 8. ப.ஜெகதாம்பிகை | 9. ஜெ.அசிகா |
| 10. ஜெ.யோகேஸ்வரி | 11. ச.மனோன்மலர் | 12. வி.கல்பனா |
| 13. லோ.காமினி | 14. இ.வனஜா | 15. அ.அஜந்தா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவிஸ் நற்பணி மன்ற நிர்வாக இயக்குனர் திரு.செ.கனகராஜா

## சுவிஸ் பணிமனை சுவிஸ்லாந்து

**நிர்வாகக்குழு**

திரு.வே.சதானந்தம்
திரு.சி.யோகராஜா
திரு.சி.சிறீகரன்
திரு.மு.சாந்தகுமார்
திரு.சி.சிறிஸ்காந்தராஜா
திரு.வெ.ஞானசேகரம் (நோர்வே)
திரு.தி.ரூபன் (லண்டன்)
திரு.ம.அகிலன் (லண்டன்)
திரு.கு.ஜெயசீலன்
திரு.சி.நாகரட்ணம்
திரு.தே.சாந்தகுமார்
திரு.வெ.உதயகுமார்
திரு.சி.இந்திரா
திருமதி.சி.நந்தினி சாந்தகுமார்
திரு.நி.ராஜேஸ் (பிரான்ஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கையெழுத்துப் பத்திரிகை

விவேகானந்தா சனசமூக நிலையத்தின் 25வது வருட பூர்த்தியை முன்னிட்டு இந்நிலையத்தின் அறிவொளி கையெழுத்துப் பத்திரிகை வெளியிடப்பட்டது.

1989ம் ஆண்டு அறிவொளிப் பத்திரிகை வெளியிடுவதென்று நிர்வாகம் முடிவெடுத்து மக்களின் வாசிப்பு ஆற்றலைத் தூண்டும் நோக்கத்துடனும் அறிவை வளர்க்கும் நோக்கத்துடனும் அறிவொளி கையெழுத்துப் பத்திரிகை மாதந்தோறும் வெளியிடப்பட்டது.

இப்பத்திரிகையின் ஆசிரியை திருமதி ஜெ.சிவனேஸ்வரி அவர்கள் ஆவார்.

இப்பத்திரிகைக்கு ஆக்கங்களை வெளியிட்டோர் விபரம் பின்வருமாறு.

1. ர.புவனேஸ்வரி
2. சி.விஜயமலர்
3. ஜெ.சிவனேஸ்வரி
4. மு.இரத்தினம்
5. சு.குணேஸ்வரன்
6. வே.பரமானந்தம்

கையெழுத்துப் பத்திரிகை மூலம் மாணவர்களின் ஆற்றலை வெளியிடுவதற்குக் களம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. அத்துடன் வாசகர்கள் உள்ளூர் கிராமத்து எழுத்தாளர்களின் ஆக்கங்களை விரும்பி வாசித்துப் பயன் பெற்றார்கள். இப்பத்திரிகை மூலம் கலை, விஞ்ஞானம், பொதுஅறிவு, சிறுகதை, பத்திரிகையில் வாசித்த நல்ல விடயங்களின் தொகுப்பு என்பன வெளிவந்தன. இவ்வாறு விவேகானந்தா சனசமூக நிலையம் அறிவு வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விவேகானந்தா நாடக மன்றம்**

விவேகானந்தா நாடக மன்றம் விவேகானந்தா சனசமூக நிலையத்தினால் 1968ல் ஆரம்பிக்கப்பட்டது. விவேகானந்தா சனசமூக நிலைய எல்லைப் பரப்பினுள் வசிக்கும் மக்களை கல்வி மற்றும் கலை கலாசார விடயங்களில் விழிப்படையச் செய்யும் நோக்குடன் நாடகங்கள் எழுதப்பட்டன. இந்த விழிப்புணர்வு நாடகங்கள் கெருடாவில் மக்களை ஓர்ளவு விழிப்படையச் செய்துள்ளது எனலாம். இருந்தாலும் அதிகமான மக்கள் இந்த நாடகங்களை வெறும் பொழுது போக்கு அம்சமாகவே நோக்கினார்கள். விவேகானந்தா நாடக மன்றம் வெறும் பொழுது போக்கு அம்சமாக மட்டும் நாடகங்களை உருவாக்கவில்லை. கல்வி மற்றும் சமூக விழிப்பு, பொருளாதார மேம்பாடு போன்ற விடயங்களில் விழிப்படையச் செய்ய வேண்டும் என்பதற்காகவே உருவாக்கப்பட்டன. இம்மன்றத்தின் முதலாவது நாடகமாக "உயர்ந்த உள்ளம்" உருவாக்கப்பட்டது. இதன்மூலம் கல்வி அறிவு இல்லாத மக்கள் தங்கள் கடிதங்களை கூட வாசிக்க முடியாமல் இருந்தார்கள். அவர்கள் கல்வியில் வளர்ச்சி பெற வேண்டும் என்று அந்த நாடகப் பாத்திரங்கள் மூலம் எடுத்தியம்பப்பட்டுள்ளது. அத்துடன் நின்று விடாமல் ஒழுக்கமில்லாக் கல்வி எந்தப் பயனும் தனக்கோ தன் சமூகத்திற்கோ தராது என்ற கருத்தை வேலாயுதம் என்ற பாத்திரத்தின் மூலம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இந்நாடகத்தின் மூலம் கல்வி விழிப்புணர்வு ஓரளவு ஏற்பட்டுள்ளது எனலாம். இருந்தாலும் இந்நிலையத்தின் உச்ச இலக்கை இந்தக் கிராம மக்கள் அடையவில்லை என்றே கூறலாம். இந்த நாடகத்தை உருவாக்கியோர் விபரம் பின்வருமாறு.

நாடகத்தின் பெயர் - உயர்ந்த உள்ளம்
நாடக ஆசிரியர் - மு.இரத்தினம்
நாடக இணை இயக்குனர்கள் - இ.ஆழ்வாப்பிள்ளை, சு.செகராசா

நடிகர்கள் விபரம்

1. இ.ஆழ்வாப்பிள்ளை - மாணிக்கம், பின்னர் மு.குணரத்தினம்
2. வ.வெள்ளையன் - மீனாட்சி, பின்னர் சி.வேலையா
3. சு.மாசிலாமணி - கோபால்
4. சி.சோமசுந்தரம் - வேலாயுதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. வே.நடராசா - சகுந்தலா
6. ஆ.சண்முகம் - நிர்மலா

**2வது நாடகம் "அவளும் பெண்தான்" சமூக நாடகம்**

இந்த நாடகத்தின் மூலம் கிராம மட்டத்தில் உள்ள அறியாமையின் விளைவாக ஒரு உயிர் காவு கொள்ளப்படுகின்றது. தவறான நோக்கத்துடன் பார்க்கும் எந்த விடயமும் தவறாகவே தோன்றும். நல்ல எண்ணத்தோடு பார்க்கும் எதுவும் நல்லதாகவே தோன்றும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் நாடகம் கமலா என்ற பாத்திரத்தின் மூலம் விழிப்புணர்வு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

06. நாடக ஆசிரியர் - மு.இரத்தினம்
இயக்குனர் - சு.செகராசா

06. நடிகர்கள்

1. சி.அருந்தவராசா - மனோகரன்
2. சி.வேலையா - செங்கமலம் (மனோகரின் தாய்)
3. செ.கனகராசா - கமலா பின்னர் வே.சச்சிதானந்தம்
4. வே.அரசரத்தினம் - வைத்தியர்
5. வே.பரமானந்தம் - மரண விசாரணை அதிகாரி

**போலிச்சாமியர் (நகைச்சுவை நாடகம்)**

சாமிவேடம் பூண்டு அறியாமையை வளர்ப்பவர்களிடம் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்பதற்காக இந்த நாடகம் உருவாக்கப்பட்டது.

நாடக ஆசிரியர் - மு.இரத்தினம்
இயக்குனர் -சு.செகராசா

நடிகர்கள்

1. வே.சச்சிதானந்தம் - போலிச்சாமி
2. சி.வேலையா - நோயாளி
3. வ.வெள்ளையன், வே.பரமானந்தம் - உதவியாளர்கள்

**கைதியின் காதலி (சரித்திர நாடகம்)**

நாடக ஆசிரியர் - மு.இரத்தினம்
இயக்குனர் - சி.சோமசுந்தரம்
நடிகர்கள்

1. சி.சோமசுந்தரம்
2. செ.கனகராசா
3. சி.அருந்தவராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. வே.நடராசா
5. வே.சிவானந்தம்
6. ஆ.பாலசிங்கம்

**மாறாத வடிவங்கள் (சமூக நாடகம்)**

நாடக ஆசிரியர் - மு.இரத்தினம்
இயக்குனர் - வே.சிவானந்தம்

நடிகர்கள்

1. வே.சிவானந்தம்
2. இ.நிதிராசா
3. சி.வேலையா
4. கு.சந்திரசேகரம்
5. சி.விஜயரத்தினம்
6. க.காந்தரூபன்
7. த.ரகு

**சிதறிய முத்துக்கள்**

நாடக ஆசிரியர் - வே.பரமானந்தம்

நடிகர்கள்

கண்ணகி - வெள்ளைக்குட்டி - மனோன்மலர்
வெள்ளையன் - லலிதாவதி
கோவலன் - சிதம்பரம் - லதா
அரசன் - கந்தசாமி - புவனேஸ்வரி
அரசி - செல்வன் - விஜயமலர்
மாதவி - குணத்திலிங்கம் - ஸ்ரீதேவி
மாதவி அம்மா - இளையகுட்டி - அழகேஸ்வரி
பொற்கொல்லர் - அருமைராசா - சாந்தினி
காவலாளி - சிங்காரம் - மகேந்திரராணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களிடம் அருகிவரும் வாசிப்பை வளர்க்க அனைவரும் ஒன்றுபடுவோம்.



கெருடாவில் விவேகானந்தா ச.ச.நிலையம் தனது 50 வது பொன் விழாவில் இன்றும் தனது பல்வேறு சேவையினை வழங்கி கொண்டாடும் இவ்வேளையில் இந்நிலையமும் அருகி வரும் வாசிப்பு பழக்கத்தை மாணவரிடத்தே விழிப்புணர்வை ஏற்படுத்தி வாசிப்பால் உயர்ந்த உலகை உருவாக்கும் ஒரு நிறுவனமாக இன்றும் செயற்படுவதை எண்ணும் இதன் சேவை மேலும் சிறக்க வேண்டும் எனவும் கூறியும் இக்கட்டுரையை தொடர்கின்றேன்...

மானிடத்தை நெறிப்படுத்தி மனிதவாழ்வை வலுவுடையதாக மாற்றுவது கல்வி இக்கல்விக்கு அடிநாதமாக அமைவது எண்ணும் எழுத்தும். இவ்வெண்ணையும் எழுத்தையும் உறுதிப்படுத்தி உன்னதமாக்குவது வாசிப்பு. இச்செயற்பாடு ஆரம்பக்கல்வியில் ஊற்றெடுத்து மனித வாழ்வின் இறுதி வரை நிலைத்து நிற்பது யாவரும் அறிந்த உண்மை. இதனாலேயே வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகின்றது என்ற கருத்து இன்றுவரை அழியாச் சின்னமாக நிலைத்திருக்கின்றது. வாசிக்கத் தெரிந்தவனே புதிய சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடியவனாகவும் உலகின் புது யுகத்திற்கு வழிகாட்டியாகவும் மாறும் உலகில் மாற்றத்தை ஏற்படுத்தும் சிற்பியாகவும் திகழ்கின்றான் என்பதே வரலாற்றில் கண்ட உண்மையாகும்.

"நல்ல புத்தகம் நல்ல நண்பன். வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகின்றது. எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் என்னைப் பயன்படுத்துங்கள், போன்ற பல சுலோகங்கள் பாடசாலைகளிலும் நூலகங்களிலும் சனசமூக நிலையங்களினதும் சுவர்களில் எழுதப்பட்டிருந்த போதிலும் இவையெல்லாம் இன்றைய நவீன யுகத்தில் காட்சிப் பொருளாக காட்சியளிக்கின்றனவே தவிர மாணவர் சமூகத்தை செயற்படுத்தும் வடிவத்திற்கான வாய்ப்பினை வழங்கவில்லையென்ற உண்மை மறுக்க முடியாததொன்றாகும். அதனால் கடந்த பல ஆண்டுகளுக்கு மேலாக வாசிப்பு புறக்கணிக்கப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட குறிப்புரைக்கல்வியும் மறைக்கல்வியும் எழுச்சி பெறத் தொடங்கின. இதனால் தேடல் செயற்பாடுகள் மாணவர்களிடத்தே மங்கத் தொடங்கி வாசிப்புத்திறன் வீழ்ச்சி நிலையில் செல்லத் தொடங்கியிருக்கின்றன. இந்நிலையில் மீண்டும் வாசிப்பு திறனை விருத்தி செய்ய அனைவரும் தம்மை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர்கள் பிள்ளைகளின் வாசிப்பின் மீது அதீத அக்கறை காட்ட வேண்டும். கட்டம் கட்டமாக பிள்ளைகளுடன் சேர்ந்து தாமும் வாசித்தலும் வழிகாட்டலும் வரவேற்கத்தக்கதாகும். சொற்களை எழுதியோ, சொல்லிக் கொடுத்தோ அச்சு ஊடகத்தாள்களைப் பயன்படுத்தியோ பிள்ளைகளை உற்சாகப்படுத்தலாம். தண்டனை வழங்குவதைத் தவிர்த்து அன்பு வழியைப் பின்வற்ற வேண்டும்.

தற்காலத்தில் பத்திரிகைகளிலும் சுவரொட்டிகளிலும் கவர்ச்சிகரமான பல விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டும், ஒட்டப்பட்டும் காணப்படுவதனால் வாசிப்பதற்கு ஓர் ஊடகமாக அவற்றைப் பிள்ளைகளுக்குப் பயன்படுத்த பெற்றோர்கள் முன்வரவேண்டும்.

புதிய செயற்பாடுகளைப் பிள்ளைகளுக்கும் புகுத்துவதன் மூலம் பாடப்புத்தகத்தில் ஏற்பட்ட வெறுப்பை விருத்தியுடையதாக மாற்றும் என்பது அனுபவம் தந்த உண்மை. இந்த ஆரோக்கியமான சூழல் பிள்ளைகளின் வாசிப்புத்திறனை விருத்தியடையச் செய்யும். வாசிப்புத்திறன் விருத்தியடைந்தால் பேச்சுத்திறன். விருத்தியடையும். இவற்றால் கேட்டல் திறன் விருத்தியடைந்தால் பேச்சுத்திறன் விருத்தியடையும். இவற்றால் கேட்டல் திறன் விருத்தியடையும் இத் திறன்களினூடாக கிரகித்தல் திறன் ஊற்றெடுக்க ஆரம்பிக்கும். அதன் பின் கற்பனைத் திறன்களின் ஆற்றல் மிளிரத் தொடங்கும். தொடர்ந்து எழுத்துத் திறனில் தடம் பதிக்கலாம். சுருங்கக் கூறின் ஏற்ற தொனியுடன் கதைகள் சிறுவர் பாடல் என்பவற்றையும் பெற்றோர்கள் மற்றோர்கள் கருத்துப் பரிமாற்றம் செய்கின்ற போது தேடலுக்கான வாசிப்பிற்கான ஆர்வத்தைப் பிள்ளைகள் வலுப்படுத்தத் தொடங்கும் என்பதே அனுபவம் தந்த பாடம். இங்கு சிறந்த களம் அமைத்துக் கொடுப்பது பெற்றோர்களின் தார்மீக கடப்பாடாகும்.

பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டில் ஆர்வத்தைத் தூண்டிவிடுவதில் முன்பள்ளி ஆசிரியர்களின் பங்களிப்பு முக்கியமானது. மகிழ்ச்சியுடன் கூடிய கற்றல் செயற்பாட்டினை முன்பள்ளிகள் பிள்ளைளுக்கு வழங்க வேண்டும். அன்றி எழுத்துப் பழக்குதல் முதலான இன்னோரன்ன செயற்பாடுகளில் முன்பள்ளிகள் ஈடுபடக்கூடா தென்பதே கல்வியியலாளர்களதும் உளவியலாளர்களின் கருத்தாகும் கற்றலுக்கு ஓர் அத்திவாரமேயன்றி கட்டிடம் அல்ல என்பதே பெற்றோர்களும் மற்றோர்களும் அறிந்து பிள்ளைகளுக்கு எழுதப்பழக்கவில்லை வாசிக்கப் பழக்கவில்லை என குறை கூறுவதைத் தவிர்க்க வேண்டும். இதற்கு அடுத்த நிலையில் ஆரம்பக் கல்வியைப் போதிக்கின்ற ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு எழுதவும் ஏற்ற தெளிவுடனும் உச்சரிப்புடனும் வாசிக்க வாய்ப்பினை வழங்க வேண்டியது முக்கிய கடப்பாடாகும்.

இதன் மூலம் முன்பள்ளியில் தாம் பெற்ற அனுபவங்களை முதன்மைப்படுத்தி பிள்ளை வாசிக்கத் தொடங்கும். காலவோட்டத்தில் பாடப்புத்தகங்களுக்கு மேலாக கவர்ச்சியாகத் தயாரிக்கப்பட்ட சொல்லட்டைகள் உபகரணங்கள் என்பவற்றைப் பயன்படுத்தி மாணவர்கள் வாசிப்பின் வீச்சை விரிவுபடுத்தி எதிர்காலத்தில் சிறந்த சமுதாய உருவாக்கத்திற்கு அத்திவார மிட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழியைப் பேசுகின்ற அனைவருக்கும் தமிழில் உயிரோட்டமுள்ள வாசிப்பு அவசியமானதும் தேவையானதும் அத்தியாவசியமானதுமாகும். ஆகவே வாசிப்பு பயிற்சியை வழங்கும் பொறுப்பை தமிழாசிரியரிடம் மட்டும் சிறைவாசம் செய்யாமல் எல்லா ஆசிரியர்களும் தமிழுக்குச் செய்யும் தொண்டாக ஏற்று வாசிப்பை விருத்தி செய்ய முழுமனதோடு முன்வரவேண்டும். அத்தோடு மாணவர்களின் மனதைக்கவரும் ரசனை மிக்க புத்தகங்களை வாசிக்க வழியேற்படுத்திக் கொடுக்க வேண்டும். வாசிப்பின் ஊக்கு விப்புச் செயற்பாட்டிற்கு மற்றுமோர் படிக்கல்லாக அமைவது பாடசாலை நூலகம். இது மாணவர்களுக்கு பல்வேறு வகையான ஓர் சிறந்த தளமாகச் செயற்படவேண்டியது அவசியமாகும்.

நூலகத்தில் பொறுப்பாசிரியர் மாணவர்களின் தேடலுக்கு வாய்ப்ளிப்பவராக இருக்கும் அதே வேளையில் வாசிப்புத் திறனாகவும் விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்டவராகவும் செயற்படவேண்டும். அத்தோடு நூலகம் பல்வேறு தரத்துக்குரிய நூல்களையும் குறிப்பாக அறிவைப்புகட்டும் கதைக் களஞ்சியங்கள் சித்திரக் கதைப் புத்தகங்கள் சஞ்சிகைகள் தினசரி வாராந்தப் பத்திரிகைகள் என்பவற்றைத் தாங்கியவையாகவும் ஏனைய வசதிகளையும் கொண்டிருக்க வேண்டும். நிறைவாக பாடசாலையின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் கட்டியம் கூறியிருப்பது வாசிப்பு இதனை வளர்ப்பதற்கு சமுதாயத்தின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும்.

மாணவர்களின் மனநிலையில் மாற்றத்தை ஒருவாக்கி தாமாகவே எதையும் வாசித்து விளங்கிக் கொள்ளும் ஒரு பூரணத்துவமான நிலையினை அடையும் வரை வாசிப்பின் ஆர்வத்தைத் தூண்ட வேண்டும். ஆரம்பப்பிரிவில் பாடசாலையில் வகுப்பு மூலம் பெற்றோர்களுக்கு விழிப்பூட்டல் கருத்தரங்குகள் உலக வாசிப்பு வாசிப்புத்தினங்களில் வாசிப்பின் அவசியத்தை உணர்த்தும் போட்டிகளை நடாத்துதல் இவ்வாறு பல வழிகளில் மாணவர்களிடத்தே விழிப்புணர்வை உருவாக்கி வாசிப்பு வழக்கத்தை மீண்டும் கட்டியெழுப்பி வாசிப்பால் உயர்ந்த உலகு உதயமாக அனைவரும் ஒரு குடையின் கீழ் ஒன்றுபடுவோமாக.

**திரு.மா.சுசீந்திரன்**
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமரம் (சிறுகதை)

மின் விசிறிகள் சுற்ற குளுக்கோஸ் ஏற ஆஸ்பத்திரிக்கட்டிலில் தான் இருப்பதையும் பக்கத்து உறவினர்கள். நண்பர்கள் கட்டிலைச் சுற்றி நிற்பதையும் உணர்ந்த மாலதி ரீச்சர் ஆச்சிரியத்துடன் பார்த்தாள். நான் ஏன் ஆஸ்பத்திரிக் கட்டிலில் இருக்கின்றேன் எனக்கு என் நடந்தது என்று சிந்திக்கத் தொடங்கினாள்.

தனிமையின் மனவிரக்தியில் தம்பி தங்கராசா தோட்டத்திற்கு அடிக்க வைத்திருந்த நச்சு மருந்தை தான் எவருக்கும் தெரியாமல் குடித்ததையும் அதனை அறிந்த அக்கம் பக்கத்தார் அவளை மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்த்ததையும் அதனால் தான் உயிர் பிழைத்ததையும் நினைவு படுத்தினாள். என்னதான் உயிர் பிழைத்துக் கொண்டாலும் நான் ஏன் உயிர் பிழைத்தேன் என்று எண்ணி வருத்தப்பட்டுக் கொண்டாள் மாலதி.

மாலதியைப் பார்க்க வந்த உறவினர்கள் எல்லாம் பார்வை நேரம் முடிவடைந்து விட்டது, பார்வையாளர்கள் வெளியே போகலாம் என்ற ஆஸ்பத்திரி ஊழியரின் சத்தம் கேட்டு வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

இப்பொழுது மாலதி மட்டும் கட்டிலில் தனிமையாக இருந்தாள். நான் ஏன் இப்படி நடந்து கொண்டேன் என்று எண்ணி தன்னைத்தானே நொந்து கொண்டாள். நான் ஆசிரியையாக இருந்து கொண்டு இந்த தற்கொலை முடிவை எடுத்திருக்கக்கூடாது. இது மற்றவர்களுக்கு தவறான முன் உதாரணமாக இருக்குமே என்று மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தாள். அப்படி சிந்திக்கும் போது தனது இளமைக் கால நினைவுகளுக்கு திரும்பினாள்.

மாலதியின் தாய், தந்தையருக்கு மூன்று பெண் பிள்ளைகளும் இரண்டு ஆண் பிள்ளைகளும் பிறந்தார்கள். இவர்களுடன் மூத்தவளாய் பிறந்தவள் தான் மாலதி. விவசாயக் குடும்பத்தில் பிறந்ததாலும் மூத்த பிள்ளையாய் இருந்ததாலும் குடும்பப் பொறுப்பு இவளின் தலையில் கட்டப்பட்டது. விரும்பியோ விரும்பாமலோ இவள் இந்தப்பொறுப்பை ஏற்க வேண்டியதாயிற்று. சமைக்க வேண்டும், தோட்டத்தில் வேலை செய்பவர்களுக்கு சாப்பாடு கொண்டு சென்று கொடுக்க வேண்டும். தம்பி தங்கைமார்களைப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டும் என்று பல பொறுப்புக்கள்.

மாலதியின் தாய் சொர்ணம் 36 வயதாக இருக்கும் பொழுது கான்சர் வருத்தித்தில் இறந்து விட்டார். இதனால் மாலதி குடும்பத்திற்கு தலைமை தாங்க வேண்டியதாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமையில் மாலதி படிப்பில் மிகவும் கெட்டிக்காரியாக இருந்தாள். இவளுடைய வீட்டிற்கு மிக அண்மையில் இருந்த இந்து ஆங்கில பாடசாலையில்தான் இவள் படித்தாள். அந்தக் காலத்திலிருந்த ஒரே ஒரு ஆங்கில பாடசாலை இதுதான். பல இடங்களிலிருந்து எல்லாம் மாணவர்கள் இங்கு வந்து படித்து நல்ல பெறுபேறு பெற்றிருக்கிறார்கள். அதுபோல மாலதியும் இந்தப்பாடசாலையில் படித்து S.S.C பாஸ்பண்ணினாள். மேற்படிப்புப் படிக்க குடும்ப சூழல் இடங்கொடுக்காததால் படிப்பை நிறுத்தி தந்தையாருக்கு உதவியாக இருந்து குடும்பத்தை கவனித்து வந்தாள்.

இவளுடைய தந்தை கந்தசாமி நல்ல விவசாயி. இவர் தானுண்டு விவசாயம் உண்டு என்று வாழ்ந்து வந்தார். இவருடைய எல்லாப் பொறுப்புக்களையும் மகளே கவனித்து குடும்பத்தை ஒரு நல்ல கௌரவமான குடும்பமாக நடத்தி வந்தாள்.

மாலதி தன் படிப்போடு ஒரு அசிரியையாக தெரிவு செய்யப்பட்டு தனது சொந்த ஊரில் ஒரு ஆரம்பப்பாடசாலையில் கல்வி கற்பித்துக் கொண்டு தனது குடும்பத்தையும் கவனித்து கொண்டு இருந்தாள்.

இரண்டு தங்கைமார்களையும் படிப்பித்து உயர்ந்த பதவியில் அமர்த்த வேண்டும் என்று ஆசைப்பட்டு இரண்டாவது புவனத்தை டாக்டர் ஆக்க வேண்டும் என்று பெரிய பாடசாலைக்கு அனுப்பி படிப்பித்தாள். இளையவள் சாந்தியை வழக்கறிஞராக ஆக்க வேண்டும் என்று படிப்பித்தாள். அது போல இரண்டுபேரும் டாக்டராகவும் வழக்கறிஞராகவும் ஆனார்கள்.

தான் திருமணம் செய்தால் குடும்பத்தை நடாத்த முடியாது என்று திருமணம் செய்கின்ற எண்ணத்தையே கைவிட்டு விட்டாள் மாலதி. அதனால் தனது இரண்டு சகோதரிகளுக்கும் திருமணம் செய்து வைக்க யோசித்தாள். இதற்கு உத்தியோக மாப்பிள்ளைகளுக்குச் சீதனம் கொடுப்பதற்காக தனது பங்காக இருந்த தோட்ட நிலத்தையும் விற்று இருவருக்கும் திருமணம் செய்து வைத்தாள்.

எவ்வளவுதான் நல்ல பள்ளிக்கூடங்கள் சுற்றிவர இருந்தாலும் மாலதியின் தம்பிமார்கள் தங்கராசா, செல்வராசா ஆகிய இருவரும் படிக்க விரும்பவில்லை. அவர்கள் 8ம் வகுப்புடன் தங்கள் படிப்பை முடித்துக் கொண்டு தோட்டத்தில் முழுமையாக இறங்கி விட்டார்கள். அவர்களின் ஊரில் உள்ள நிலவளம் அவர்களை கல்வியைப்பற்றி சிந்திக்க விடவில்லை. விவசாயமே உலகம் என்று அவர்கள் இருந்து விட்டார்கள். இது மாலதிக்கு மனவருத்தமாகத்தான் இருந்தது.

நோய்வாய்ப்பட்டிருந்த தந்தை கந்தசாமியும் இறந்து விட்டார். மாலதி தனிமரமாக நின்றாள். இப்பொழுதுதான் மாலதி தான் ஒரு அநாதையாகி விட்டேன் என்று உணர்கிறாள். சகோதரங்கள்தான் தன் உயிர் என்று எண்ணியிருந்த மாலதிக்கு அவர்களின் பாராமுகப் போக்கு பாரிய வெறுப்பைக் கொடுத்தது. யாரும் அவருடன் கடிதத் தொடர்போ தொலைபேசித் தொடர்போ கொள்வதில்லை. இது இவளுக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல் இருந்தது.

இதே வேளை இரண்டு ஆண் சகோதரர்களும் அவளின் அனுமதி இன்றி திருமணம் செய்து கொண்டார்கள். இந்த நிலையில்தான் மன வெறுப்படைந்து மாலதி தற்கொலை முயற்சிக்கு வந்திருந்தாள்.

இளமை நினைவுகளிலிருந்து விடுபட்டு சுய நினைவுக்கு திரும்பிய மாலதி ஒரு உண்மையை உணர்ந்து கொண்டாள். திருமணம் என்பது ஒருவரின் வாழ்க்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் அவசியமானது. பிற்காலத்திற்கு கணவனின் அன்பும் பிள்ளைகளின் ஆதரவும் அவசியம் தேவை என்பதை அவள் புரிந்து கொண்டாள். இருந்தாலும் எல்லாம் காலம் கடந்த யோசனைதான். காலம் கடந்தவை எல்லாம் பயனற்றவை என்பதும் அவளுக்கு தெரிந்த உண்மைதான்.

எல்லோரும் தன்னை தனிமரமாக விடுவார்கள் என்று அவள் கனவிலும் நினைக்க வில்லை. எதிர்பார்த்தது நடக்காதது அவளுக்கு பலத்த ஏமாற்றம் தான். இருந்தாலும் தன் மனதைத் திடமாக்கிக் கொண்டு மனிதர்கள் எப்பொழுதும் சுயநலம் கொண்டவர்கள் தான், நான் ஒருத்தி மட்டும் குடும்பம், சகோதரம் என்ற அசட்டு நம்பிக்கையில் இருந்து விட்டேன் என்ற விழிப்புணர்வோடு ஏதாவதொரு வயோதிபர் விடுதியில் சேர்வதுதான் சரியான முடிவு என தீர்மானம் எடுத்து ஒரு வயோதிபர் விடுதியை நோக்கி நடந்தாள்.

**ஆக்கம் மு.இரத்தினம்**

## சிந்தனைக்கு சில விருந்து

☆அறிவு என்பது நம்மை உயர்ந்த இடத்திற்கு ஏற்றுவதற்காக அமைக்கப்பட்ட வன்மையான சிறகு.

☆இலட்சியம் இல்லாத மனிதன் திசைகருவியற்ற கப்பலைப் போன்றவன்.

☆கால இடைவெளி பொல்லாதது. பொய்ச்சிரிப்பு சிரித்துக் கொண்டு நோயாளிக்கு ஊசிபோடும் வைத்தியனைப்போல்.

☆வாழ்க்கை என்பது குறைவான தகவல்களை வைத்துக் கொண்டு சரியான முடிவுகளை எடுக்கும் கலையரங்கம்.

☆நேற்று என்பது அனுபவம் இன்று என்பது நிகழ்வு நாளை என்பது நம்பிக்கை.

☆பிறர் எதை எமக்குச் செய்யவேண்டுமென எண்ணுகின்றோமோ அதையே நாம் பிறருக்குச் செய்யும்போதே வாழ்வின் உண்மைத்தத்துவத்தை உணரமுடியும்.

☆முதலில் எமது தகுதியைப் புரிந்து கொள்ளவேண்டும். பின் உரிமையை அதற்கேற்ப கேட்கவேண்டும்.

☆புகழ் ஒருவனின் பேச்சு செயல் என்பவற்றால் அவனைத் தேடிவருவது. ஓடி ஓடி சுயவிளம்பரத்தால் தேடுவது புகழே அல்ல. காலப்போக்கில் நீண்ட அவமானத்தையே அது தரும்.

☆உன் விருப்பப்படி இறைவன் உன்னை வழிநடத்தப்போவதில்லை எனவே கிடைப்பதை ஏற்று வாழப்பழகிக் கொள்.

☆ அன்பின் வடிவமும் உயர்வான எண்ணங்களுமே பெண்ணின் வாழ்க்கையில் உயர்வை ஏற்படுத்தும்.

☆பெண் என்பவள் எதனையுமே அன்பினால் சாதிக்கும் இயல்பைக் கொண்டவள். சகிப்புத்தன்மையும் இரக்கத்தன்மையும் கொண்டவளே பெண். ஒரு குடும்பத்தலைவியாக விளங்கும் பெண் குத்துவிளக்குப் போன்றவள். அன்பினாலேயே குடும்ப ஒளியை ஏற்றவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அன்பும் அறனும் உடைத்தாயின் இல் வாழ்க்கை பண்பும் பயனும் அது**

இது மட்டுமா அன்பினால் உருவானதே வாழ்க்கை. இதனைத் திருவள்ளுவர் அன்புடமை எனும் அதிகாரத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். இதற்கமைய அன்பின் மறுவடிவமே பெண் என்றுதான் சொல்லப்படுகின்றது.


இதை விடுத்து உலகிலுள்ள எந்த உயிரினங்களுக்கும் இல்லாத அந்த அருள்தான் எண்ணம். பெண் என்பவள் ஓர் சக்தி. அவளது எண்ணம் என்றைக்கோ ஓர் நாள் நிச்சயம் நிறைவேறக்கூடியது. எண்ணம் மனித வாழ்க்கையை உருவாக்கும் கருவியாகும். நாம் எண்ணும் ஒவ்வொரு நல் எண்ணமும் உள்ளத்தில் ஒவ்வொரு நல் நினைவும், வாழ்க்கையை வளமுடன் வாழ்வதற்கு வழிகாட்டும் ஒளி விளக்காகும். பெண்களிடம் இந்த விளக்கு பிரகாசமாக சுடர்விடும்போது அது அவளுக்கு மட்டுமல்ல அவளது குடும்பத்திற்கே வழிகாட்டுகின்றது. எண்ணம், சொல், செயல் எல்லாம் நல்லவையாக இருக்கவேண்டும். அப்போதுதான் நல்ல வாழ்க்கை அமையும். அதுதான் மனம்போல மாங்கல்யம் என்பார்கள். பெண்களுடைய எண்ணம் சர்வசாதரணமாக இருக்காமல் உறுதியான வேட்கை நிரம்பியதாக இருக்கவேண்டும். இந்த வேட்கை நம்முடைய மூளையின் நரம்புகளை தட்டிவிட்டு துடிப்புடன் இருக்க வழி அமைக்கின்றது. மூளையின் நரம்புகள் வேலையின்றி உற்சாகம் இழந்திருந்தால் சிறந்த எண்ணம் எப்படித் தோன்றமுடியும். பெண்களின் எண்ணம் அவளது வாழ்வைச்சுற்றி சிறிய வட்டத்தினைப் போட்டு சென்றடைய வேண்டும். நல்ல எண்ணங்கள் என்றைக்குமே வீணாவது இல்லை. பெண்கள் எல்லோருமே குடும்பம் என்ற சிறிய வட்டத்திற்குள் மட்டுமே நின்று விடுவார்களானால் இந்த உலகம் இத்தனை பெண் அறிவாளிகளை பெண் எழுத்தாளர்களை பெண்போராளிகளை, ஆராய்ச்சியாளர்களை, விஞ்ஞானிகளை சமூக சேவகிகளை, அரசியல்வாதிகளைப் பெற்றிருக்க முடியாது. வெற்றி - தோல்வி இரண்டுமே எண்ணத்தைப் பொறுத்தே அமைகின்றன. எண்ணித்துணிவதும் துணிந்த பின் ஏற்படும் துயரங்களைக் கண்டு துவளாமல் இருப்பதும் ஒரு காரியத்தில் வெற்றி பெறுவதற்குரிய வழியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்வியின் முதல் படிதான் வெற்றியாகும். பெண்கள் எந்த சாதனைப் பாதைக்குச் செல்லத் துணிந்தாலும். பல்வேறு சவால்களை எதிர்நோக்கியே ஆகவேண்டும். அது எமது சமூக அமைப்பு சவால்களுக்கு பயந்து முடங்கி விடுவது அவள் திறமைகளை மண்ணில் புதைப்பதாகி விடும். "காய்க்கின்ற மரமே கல்லடி படும்" என்பதாய் உலக வரலாற்றுகளிலேயே சாதனை படைத்த பெண்களின் வாழ்க்கையை புரட்டிப்பார்த்தால் அவர்களின் துன்ப துயரங்களும் படிந்த போராட்டமாகவே அமைந்தாலும் அவர்கள் உறுதியான இலட்சிய வேட்கை உயர்ந்த எண்ணம் வெற்றிக்கு வழி அமைத்தது. ஆகவே பெண்களே உங்கள் எண்ணங்கள், செயல்கள் உயர்வானதாக அமையட்டும் அன்பின் திருவுருமாக மாறட்டும். அது உங்களை மட்டுமல்ல குடும்பத்தை, சமூகத்தை, நாட்டை உயர்நிலைக்கு இட்டுச் செல்லும் என்பதை உங்கள் மனதில் உறுதி செய்ய மறந்துவிடாதீர்கள். அன்பு பண்பு, நல்ல எண்ணம் எப்போதும் பெண்களின் வாழ்விலே உயர்வான வாழ்வைத் தேடித்தரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என்பதாகும்.

**ஆக்கம் செல்வி இ.வனஜா**



## வ.வெள்ளையன்

**ஐக்கிய சீர்திருத்தச் சங்கத்தின் தலைவராக இருந்தவரும்**

**விவேகானந்தா சனசமூக நிலையத்தின் மூத்த உறுப்பினரும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய சிறுவர்களின் அவல நிலை

மூன்று தசாப்தங்களின் பின் நமது நாடு சுதந்திரக் காற்றை சுவாசிக்கின்றது என்று பலர் பெருமை கொள்ளலாம். இக்காலம் எமது தேசத்து சிறுவர், வாலிபர், பெண்கள் சுதந்திர பறவைகளாக சிறகடித்து எங்கு சென்றாலும் செல்லலாம் என்று இறுமாப்பு கொள்ளும் தருணம் இது எனலாம். பற்பல அபிவிருத்திகள் மடமடவென செயலாற்றப்படும் தற்காலம் இது என்று நாட்டின் தலைவர்களும் அறிஞர்களும், சான்றோர்களும், பாமரமக்களும் எண்ணிக் கொண்டிருக்கும் எமது தேச சுதந்திர காற்று கொண்டு வந்துள்ள சுதந்திரம் என்ன என்று தெரியுமா?

1) சிறுவர் உரிமை மீறல்

2) சிறுவர் துஸ்பிரயோகம்

3) பாலியல் துஸ்பிரயோகம்

எனும் அவலம் எம்தேசத்தில் சுதந்திர காற்றின் மூலம் துரிதமாக முன்னேறிக் கொண்டு செல்கிறது என்பது வேதனைக்குரிய விடயம்.

சிறுவர் உரிமை என்பது கட்டாய கல்வி, பாதுகாப்பு, தேவைகள் சந்தித்தல் என்பதே ஆகும். இன்று எம் தேசத்தில் பல்லாயிரமான சிறுவர்கள் கல்வி இடை நிறுத்தம் செய்யப்படுவதற்கும், ஒழுக்க சீர்கேட்டுக்கும் அவர்களின் பாதுகாப்பில் அக்கறை காட்டாமலும் அவர்களின் அத்தியாவசிய தேவைகள் நிறைவேற்றப்படாமலும் இருப்பது குறிப்பிடத்தக்கது. இன்று எம்தேசத்தில் ஐக்கிய நாடுகள் சமவாயம் உறுதி செய்துள்ள புள்ளி விபரப்படி 20% மாணவர்கள் எழுத்து, எழுத வாசிக்க தெரியாதவர்களாகவும் இதன் விளைவால் ஒழுக்க சீர்கேடு நிறைந்தவர்களாகவும் காணப்படுவதன் காரணம், பெற்றோர்களின் கவனிப்பின்மையும் அக்கறை அற்ற தன்மையும் அலட்சிய போக்குமாகும். இவ்வாறான விளைவின் அபாயம் என்ன என்பதினை நாம் ஆராய்ந்து பார்க்கும் போது இன்று எம் தேசத்தின் அனைத்து பகுதிகளிலும் எம் சிறுவர்கள் மிகவும் கொடூரமான விதத்தில் பாலியல் துஷ்பிரயோகத்தினுள் கொண்டு செல்லப்படுகின்றார்கள்.

இவர்களை நாம் பாதுகாக்க வேண்டிய கட்டாய பொறுப்பு எமக்கே என்று சிறுவர் உரிமைகள் சமவாயம், சர்வதேச சிறுவர் பாதுகாப்பு நிதியம் தெளிவான சட்ட அமுலாக்கங்களை கொண்டு வந்துள்ளது.

சிறுவர்கள் நாட்டின் சொத்துக்கள் என்று கூறப்படுகிறது. எம் நாட்டின் சட்ட அமுலாக்கங்களில் இந்த சிறுவர்களை கவனிக்க வேண்டிய பொறுப்பு குடும்பம், சமூகம், நாடு போன்றவற்றின் தலையாய கடமையாகும். எனவே சிறுவர்களை சிறந்த முறையில் பேணி பாதுகாத்து அவர்களுடைய கல்வி, கலாசாரம், ஒழுக்க விழுமியங்கள் என்பவற்றை மேம்படுத்தி நாளைய நாட்டின் நற்பிரஜைகளாக திகழ வைப்பது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

**ஆக்கம் :- திருமதி.ஜெயக்குமார் அசிகா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்தா ச.ச.நிலையத்தின் அங்கங்கள்




சர்வோதயா ஆசிரியர்கள்



2001ம் ஆண்டு நிர்வாகம்



முன்னைய விளையாட்டு கழகம்



நாடகமன்றம்



கல்விமன்ற ஆசிரியர்கள்



முன்பள்ளி ஆசிரியர்கள்



2014ம் ஆண்டு நிர்வாகிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவேகானந்தா முன்பள்ளி விளையாட்டுக்கள்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய விளையாட்டுக் கழக வீரர்கள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெல்ல நீரிழிவு (சலரோகம்)



தற்போது தொற்றாநோய்களின் (Non Communicable Diesease) பாதிப்பு இலங்கையிலும் அதிகரித்து வருவதனால் அந்நோய்களைப்பற்றிய விழிப்புணர்வை எம்மக்கள் மத்தியில் ஏற்படுத்துவது எமது கடமையாகும். பிரதானமான தொற்றா நோய்களாகிய, வெல்லநீரிழிவு, உயர் குருதியமுக்கம் போன்றவற்றின் தாக்கம் எமது பகுதிகளிலும் இப்போது அதிகமாகவுள்ளது.

வெல்லநீரிழிவு நோயைக் (Diabetes Mellitus) கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு, மருந்துகளை ஒழுங்காக உட்கொள்வது மட்டுமன்றி வாழ்க்கை முறையிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். வெல்ல நீரிழிவு நோயின் பாதிப்புகளைத் தெரிந்து கொண்டு அதற்கேற்ப கட்டுப்பாடாக இருப்போமானால் நோயின் தாக்கத்திலிருந்து விலகிக் கொள்ள முடியும்.

நாம் உட்கொள்ளுகின்ற மாப்பொருள் உணவானது சமிபாடடைந்து இறுதியில் குளுக்கோசாக மாற்றப்படுகின்றது. சிறுகுடலிலே குளுக்கோசானது அகத்துறிஞ்சப்பட்டு குருதியிலே சேர்க்கப்படுகின்றது. குளுக்கோஸ் எமது உடலுக்குத் தேவையான சக்தியை வழங்குகின்றது. குருதியிலுள்ள குளுக்கோஸ் குருதியின் ஊடாக. கலங்களுக்குள் நுழைவதற்கு இன்சுலின் தேவைப்படுகின்றது. இன்சுலின் இல்லாவிட்டால் கலங்களுக்குள் குளுக்கோஸ் சென்றடைய மாட்டாது. இதனால் உடலில் சோர்வு, உடல் வலுவின்மை, அடிக்கடி பசி ஏற்படுதல் ஆகிய அறிகுறிகள் ஏற்படும். கலங்களுக்குள் குளுக்கோஸ் சென்றடையும் தன்மை குறைவடைகின்ற போது குருதியில் குளுக்கோஸ் மட்டம் உயர்வடைகின்றது. ஒவ்வொரு மனிதனிலும் குருதியில் குறிப்பிட்ட அளவு குளுக்கோஸ் காணப்படுகின்றது. குருதியில் குளுக்கோசின் அளவு வழமைக்கு மாறாக உயர்வடைகின்ற நிலைமையே நீரிழிவு எனக் கூறப்படும்.

குருதியில் குளுக்கோசின் அளவு

FBS (Fasting blood suger) = 60 - 110Mg/DL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(10 மணித்தியாலங்கள் உணவு உட்கொள்ளாமல் இருந்த பின்னர் பரீட்சிக்கப்பட்ட குருதியின் குளுக்கோசின் அளவு (PPBS - 80 - 140Mg /DL)

(உணவு உட்கொண்டு 2 மணித்தியாலங்களின் பின்னர் பரீட்சிக்கப்பட்ட குருதியின் குளுக்கோசின் அளவு)

குருதியில் குளுக்கோசின் மட்டம். அதிகரிப்பதனால் உடலில் ஏற்படக்கூடிய அறிகுறிகள்

1. அதிக தாகம் ஏற்படுதல்
2. அதிகளவு சிறுநீர் வெளியேறுதல்
3. தலைச்சுற்று ஏற்படுதல்
4. அதிக பசி ஏற்படுதல்
5. தோலில் தொற்றுகள் ஏற்படுதல்

நீரிழிவு நோயில் மூன்று வகைகள் காணப்படுகின்றன

வகை 1 (Type - 1)

இன்சுலின் சுரக்கும் தன்மையில் குறைவு அல்லது. சுரக்காத நிலை வகை 1 ஆகும். பெரும்பாலும் சிறுவர்களுக்கு அல்லது இளையோருக்கே இந்நிலை ஏற்படும்.

வகை II (Type II

இன்சுலின் காணப்பட்டபோதிலும் கலங்கள் அவற்றைப் பயன்படுத்தா தன்மையாகும். உணவுக்கட்டுப்பாடு மருந்துகள் மூலம் இதற்குச் சிகிச்சை பெற முடியும். சில சந்தர்ப்பங்களில் இன்சுலின் ஊசியைப் பயன்படுத்த வேண்டிய தேவையும் ஏற்படுகின்றது.

03. கர்ப்பகாலத்தில் ஏற்படுகின்ற நீரிழிவு கர்ப்ப காலத்தில் குருதியிலுள்ள குளுக்கோசின் மட்டம் அதிகரிக்கக் கூடும் (Gestatinal Diabetes)

நீரிழிவு நோயானது குணப்படுத்த முடியாத நோயாகும். எனினும் குருதியிலுள்ள குளுக்கோசின் அளவைக் கட்டுப்பாட்டில் பேணுவதன் மூலம் நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும்.

நீரிழிவு நோயினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள்

1. கண்பார்வை குறைவடைதல்
2. நெஞ்சுவலி - மாரடைப்பு ஏற்படுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பாரிசவாதம்

4. சிறுநீரக செயலிழப்பு

5. கை கால்களில் விறைப்பு - உணர்ச்சியற்ற தன்மை

6. ஆண்மைக் குறைபாடு ஏற்படல்

7. கிருமித்தொற்று ஏற்படும் வாய்ப்பு அதிகம்

இவ்வாறான பாதிப்புகள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு பின்வரும் வழிமுறைகளைக் கையாள வேண்டும்.

குருதியில் சிறந்த குளுக்கோஸ் மட்டத்தை பேணுதல்

உணவுக் கட்டுப்பாடு மற்றும் உடற்பயிற்சி, உயரத்திற் கேற்ற உடல் நிறையைப் பேணுதல்

உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டிருப்பின் குருதியமுக்கத்தை சிறந்த மட்டத்தில் பேணுதல்

குருதியிலுள்ள கொலஸ்ட்ரோல் மட்டத்தைப் பேணுதல்

உணவுக்கட்டுப்பாட்டுடன் மருந்துக் குளிசைகளை உட்கொள்ளுதல் அல்லது உணவுக் கட்டுப்பாட்டுடன் இன்சுலின் ஊசி மருந்து ஏற்றுதல் சிறந்த மனநிலையைப் பேணுதல்.

குருதியில் குளுக்கோஸ் குறையும் போது ஏற்படும் அறிகுறிகள்

அதிக பசி ஏற்படுதல்
அதிக வியர்வை
தலைச்சுற்று
களைப்பு
அதிகரித்த இதயத்துடிப்பு
மங்கலான பார்வை

அதிக பசி எடுக்கும் போது. குருதியில் குளுக்கோஸ் குறைபாடு ஏற்படுவதற்கான ஏதேனும் அறிகுறி காணப்படுமாயின் உடனடியாக சிறிது குளுக்கோஸ் அல்லது சர்க்கரை கலந்த பானம் உட்கொள்ளவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீரிழிவு நோயார்களின் உணவு முறைகள்**

நீரிழிவு நோயாளர் காபோவைதரேற்று மாச்சத்து நிறைந்த உணவு வகைகளை குறைத்து புரதச்சத்து, நார்ப்பொருள் அடங்கிய உணவு வகைகளை உண்ணவேண்டும். கொழுப்புக்கள் அடங்கிய உணவு வகைகளையும் இயன்றளவு குறைக்க வேண்டும்.

**புரத உணவு**

கடலை, பருப்பு, பயறு, சோயா, சிறிய மீன், கோழி இறைச்சி, முட்டை வெள்ளைக்கரு ஆடை நீக்கிய பால்

**நார்ப்பொருள் அடங்கிய உணவு வகைகள்**

இலை வகை, கீரை வகை, பூசணி, போஞ்சி, பயிற்றை, பாகல், சுரைக்காய், கத்தரி, அவரை, வெள்ளரி, முருங்கை, கோவா, வெண்டி, வாழைப்பூ, நீற்றுப்பூசணி, பீர்க்கங்காய், முள்ளங்கி, தக்காளி, புடோல், லீக்ஸ், கரட், உள்ளி, இஞ்சி, வெங்காயம் மேற்குறிப்பிட்ட மரக்கறி வகைகளை உணவில் தாராளமாக சேர்த்துக்கொண்டு சோறு மற்றும் மாவினால் செய்த இடியப்பம், தோசை என்பவற்றை குறைவாக எடுத்தல் வேண்டும், தீட்டாத அரிசி, ஆட்டாமா என்பவற்றில் அதிக நார்ப்பெருள் உள்ளதனால் மாற்றீடாக பயன்படுத்தலாம்.

நீரிழிவு நோயாளிகளுக்கு இருதய நோய்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகம். எனவே குருதியில் கொலஸ்திரோல் அதிகரிக்காது இருக்க உணவில் நெய், பட்டர், சீஸ், மாஜரின், தேங்காயெண்ணெய், மரக்கறி எண்ணெய், முழு ஆடைப்பால், முட்டை மஞ்சட்கரு, கணவாய், நண்டு, ஆடு, மாட்டு இறைச்சி என்பவற்றை தவிர்த்தல் வேண்டும். சிறிய அளவில் நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், சோயா எண்ணெய் என்பவற்றை பயன்படுத்தலாம். தோல் மற்றும் கொழுப்பு நீக்கிய கோழி இறைச்சி, மீன் உண்ணலாம்.

**இனிப்புச் சத்து உணவுகள்.**

சீனி, சர்க்கரை, கற்கண்டு, பனங்கட்டி ஜாம், கருப்பஞ்சாறு, மென்பானம், கேக், சொக்கலேட், இனிப்பூட்டிய பால்மா, இனிப்பூட்டிய பிஸ்கட் என்பவற்றை முற்றாக தவிர்க்கவேண்டும்.

இனிப்பின்றி உண்ண முடியாதவர்கள் செயற்கையான இனிப்புச் சுவையூட்டிய மாத்திரைகளை அல்லது சரைகளை பயன்படுத்தலாம். இதில் இனிப்புச்சத்து இல்லை, Suger Free, CALX Candlx எனும் பெயர்களின் விற்பனையிலுள்ளன.

உணவுக்கு இடைப்பட்ட வேளைகளில் மோர், எலுமிச்சம்பழச்சாறு, தக்காளிச்சாறு, சீனி சேர்க்காமல் உப்பு அதிகம் சேர்க்கமால் குடிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு பழுத்த பழங்கள் உண்பதை தவிர்த்தல் வேண்டும். ஒரு கதலி வாழைப்பழம். ஒரு துண்டு பப்பாசிப்பழம், கொய்யாப்பழம், 4, 5 நெல்லிக்காய், பச்சை நிற அப்பிள் ஒன்று என்பவற்றில் ஒன்றை தினமும் அளவோடு உண்ணலாம்.

தினமும் ஒரு கப் (200ml) ஆடைநீக்கிய பால் அல்லது சோயாப்பால் சீனி சேர்க்காது அருந்தலாம். கொலஸ்ரோல் அதிகம் உள்ளவர்கள் கொழுப்பு நீக்கிய பால்மாவை பயன்படுத்துவது நல்லது. (Non Fat Anchor, Non Fat Anlene, Non Fat Bonlac) என்பன கடைகளில் விற்பனையில் உள்ளன.

உப்பை இயலுமான வரை குறைக்க வேண்டும். அதிக உப்பு உயர்குருதி அழுத்தத்தை ஏற்படுத்தும்.

அடிக்கடி உணவுண்பதை, நொட்டைத்தீன் உண்பதை தவிர்க்க வேண்டும். பற்றிஸ், வடை போன்ற உணவு வகைகளையும், நூடில்ஸ் போன்ற செயற்கையான உணவுகளையும் தவிர்க்கவும்.

**சலரோக நோயாளிக்கான உணவு**

**காலை உணவு**

பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்று
தோசை - 2
இடியப்பம் - 3
பிட்டு - 2
பாண் - $^1/_4$ இறாத்தல்
உப்புமா - 1 கப்
கதலி வாழைப்பழம் - 1

சீனி சேர்க்காது தேநீர் அல்லது கோப்பி ஆடை நீக்கிய பால் அல்லது Nonfat Milk சேர்க்கலாம்.

**மதிய உணவு**

சோறு - $^1/_2$ கோப்பை
அசைவம் - மீன் - 2 துண்டு
இறைச்சி (கொழுப்பற்றது) - $^1/_2$ கப்
மரக்கறி விரும்பிய அளவு
கரட், பீற்றுட் என்பன பருப்பு - $^1/_2$ கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேநீர் வேளை**

சீனி சேர்க்காது தேநீர் அல்லது கோப்பி - ஆடை நீக்கிய பால் அல்லது Nonfat Milk Powder சேர்க்கலாம்.

1 அல்லது 2 கிறீம் கிறெக்கர் (இனிப்பற்ற) பிஸ்கட் $^1/_4$ கப் எண்ணெய் அற்ற கண்டல்

**இரவு உணவு**

தானிய வகை - பிட்டு இடியப்பம் தோசை காலை உணவைப் போல்

கறி வகை - மதிய உணவைப்போல்

**படுக்கை நேரம்**

1கப் ஆடை நீக்கிய பால் அல்லது சோயா பால் அல்லது கொழுப்பற்ற பால்மா அருந்தலாம்.

| | | |
|---|---|---|
| கதலிவாழைப்பழம் | - 1 | |
| கொய்யா | - 1 | |
| பப்பாசிப்பழம் | - 1 துண்டு | என்பவற்றில் ஏதாவது ஒன்று |
| விளாம்பழம் | - 1 | |
| புளித்தோடை | - 1 | |

**விரும்பிய அளவு உண்ணக்கூடிய உணவு வகை**

| | | |
|---|---|---|
| கோவா | காய்ப்பப்பாசி | சிறுநீரை |
| வெந்தயம் | பாகற்காய் | கத்தரி |
| தக்காளி | போஞ்சி | புடலங்காய் |
| வெண்டைக்காய் | வாழைப்பூ | மிளகாய் |

**ஒரு வேளைக்கு $^1/_2$ கப் மட்டும் உண்ணக்கூடியவை**

| | | |
|---|---|---|
| அகத்தி | பீற்றுட் | முருங்கைக்காய் |
| கரட் | முருங்கை இலை | வெங்காயம் |

**முற்று முழுதாகத் தவிர்க்க வேண்டியவை**

| | | |
|---|---|---|
| இனிப்பு வகை | குளிர்பானம் | குளுக்கோஸ் |
| கேக் | சீனி | சர்க்கரை |
| ஜாம் | மைலோ | சொக்கலேற் |
| தேன் | பனங்கட்டி | பழரசம் |
| ஹோர்லிக்ஸ் | நெஸ்ரமோல்ட் | வீவா/மைலோ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரிழிவு நோயாளி கவனத்தில் கொள்ளவேண்டியவை

1. உணவு கட்டுப்பாடு மிக அவசியம்

2. ஒவ்வொரு நாளும் உடற்பயிற்சி செய்யவேண்டும்.

3. தவறாது மாதாந்த வைத்திய பரிசோதனைக்குச் செல்ல வேண்டும்.

4. காயங்கள் ஏற்படுவதைக் கூடிய அளவில் தவிர்க்க வேண்டும்.

5. பாதங்களை முகம்போல கவனமாகப் பேணவேண்டும். ஒவ்வொரு நாளும் பாதங்களைப் பார்வையிடவேண்டும். கால் நகங்களை வெட்டிச் சுத்தமாக வைத்திருப்பதுடன் பாத அணிகளை எப்போதும் அணியவேண்டும். நகங்களை கவனமாக வெட்டவும். மிகவும் கட்டையாக குறிப்பாக மூலைகளில் வெட்டக்கூடாது. கால்களில் காயங்கள் ஏற்படுமாயின் அல்லது ஆணிகள் (Callosities) வளருமாயின் வைத்திய ஆலோசனை பெறவேண்டும்.

6. வைத்திய குறிப்புப் புத்தகத்தை எப்போதும் தன்னுடன் வைத்திருக்க வேண்டும்.

7. மருந்துக்குளிசை, ஊசி போன்றவற்றை வைத்தியர் கூறியபடி ஒழுங்காக எடுக்கவேண்டும்.

8. வைத்தியரின் ஆலோசனையின்றி மருந்தின் அளவை கூட்டவோ அல்லது குறைக்கவோ கூடாது.

9. குருதியில் கொலஸ்ரோல் அளவை (lipid Profile) 6 மாதத்திற்கு ஒரு தடவை செய்யவேண்டும்.

10. சிறுநீரில் புரதம் வெளியேறுவதை (Urine for Microalbum) 6 மாதத்திற்கு ஒரு முறையாவது சோதிக்க வேண்டும்.

11. கண் டாக்டரிடம் ஒரு வருடத்திற்கு ஒரு தடவை கண்களை பரிசோதிக்க வேண்டும்.

12. இரத்த அழுத்தத்தை (Blood Pressure) ஒரு மாதத்திற்கு ஒரு முறையாவது சோதிக்க வேண்டும்.

இரத்த அழுத்த 130/ 80 mmhg ஐ விட குறைவாக வைத்திருக்க வேண்டும்.

Dr. **வே.கமலநாதன்**
பிரதேசவைத்திய அதிகாரி,
பிரதேச வைத்தியசாலை, வரணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Banking



Nowadays All of us are dealing with the Banks activities. So Banks Takes a major role in an economy. Commonly, the main objective of a Banking system is to collect deposits from those who have a surplus cash and lend the funds to those who have a deficit of cash for an immediate needs for them.

We know that there is a lot of Banks in the country, Central Bank, Commercial Banks and Specialized Banks are the major types of a banking system.

Cental Bank is differ form the other banks. The distinction between the Central Bank and Commercial Banks rests essentially on their objectives. While commercial banks are primarily motivated by profit, a Central Bank considers the effects of its oprations on the working of the economy, Commercial Banks have their business dealings with the genaral public, while the central bank conducts little ordinary banking business.

The main objectives of the cental Bank of Sri Lanka are as follows,
Maintaining economic and price stability
Maintaining the financial system stability.

The economic and price stability means the low inflation. Inflation is a sustained increase of the genaral price level of goods and services in an economy over a period of time. Econemy performs well when inflation and the interest rates are low. So the maintaining economic and price stability makes the economic growth and the high employment. Cental Bank of Sri Lanka uses the monetary policy measures to control the inflation.

The Financial system stability means the effectiv functioning of financial system and the absence of baning, currency and balance of payments. It makes the provention of threats of the Financial system. A Stable financial system creates a favourable environment for depositors and investors encourages efficient financial intermediation and



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the effective functioning of markets and hence, promotos investment and economic growth.

The functions of the Central Bank of Sri Lanka are as follows.

* Implementing the monetary policy of the country.
* Sole authority on issue of currency management
* Banker's Bank
* Banker to the Goverment
* EPF Management
* Foreign Currency Management
* Public debt management
* Regional development.
* Lender of Last resort

Cental Bank functioning as the bankers to the commercial banks. So commercial banks maintain the balances with cental Bank which are used to make settlements between banks at the clearing, Central bank is empowered to vary the ratioo of reserves the commorcial banks are required to maintain with the central Bank.

And also cental Bank acts as a banker to Government. So it keeps the government's account's manages the public debt and lends to the Government.

Lets consider about the commercial banks are found in srilanka Bank of ceylon. people Bank are the statebanks.

The main functions of the commercial banks are three type of deposits are as follows.

* Saving Deposits
* Time Deposits
* Demand Deposits.

Saving deposits are the short run deposits. Whenever we can make withdrawals from our deposits. But the time deposits are the longrun deposits and we can get it on the maturity of the deposits, comparing with saving deposits, Time deposits have the higher interest rates.

Demand deposits are deffer from the other deposits Bank provides a chegue book to the customer. so the customer can get the cash by drawing cheques. Interest is not pay for this deposits. But theCustomer can get the everdraft facilities.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Lending money in the form of loans or overdrafts. Banks lend to all types of businesses, public authorities and the government. The interest cherged on loans remains a primary source of a banks income. Bank provide loans in many types such as personal loan, Vehicle loan, Mortage loans, Development loan, SME loans and etc.

Commercial banks provids a payments mechanism whereby individuals, firms and government can make payments to each other. It provide a safety place for customers to store their wealth. Jewellary and other valuables.

Specialized banks are the banks only taking deposits from the customers. They don't have the landing facilities to the customers. National saving bank is a good example for the specialized bank.

All the commercial banks and specialized banks are doing their works under the guidance of the Cental Bank. All the customers must understand the differences among the banks. Because Banks are take place in our day to day activities and also banks our day to day activities and also banks are the main role of an economy.

*By* Vinotha Paramanantham.
Banking Asistant Central Bank of Sri Lanka.
Former Student of Vivekananda Education Center



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2014ம் ஆண்டிற்குரிய பதவி வழி நிர்வாகத்தினர் பெயர் விபரம்**

தலைவர் :- இ.அபினேஸ்
செயலாளர் :- அ.அஜந்தா
பொருளாளர் :- இ.பிரதீபன்

உபதலைவர் :- வே.சச்சிதானந்தம்
உபசெயலாளர்:- ப.துஸ்யந்தன்

நிர்வாக உறுப்பினர்கள்

1. இ.வனஜா
2. ஜெ.யோகேஸ்வரி
3. மு.பற்குணசிங்கம்
4. க.குணதீசன்
5. கு.சந்திரசேகரம்
6. அ.குணராசா
7. சி.உலகராசா
8. வே.சிவானந்தம்
9. கி.செல்வச்சந்திரன்

போசகர் :- சி.அருந்தவராசா
கணக்குப்பரிசோதகர் :- ர.புவனேஸ்வரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விவேகானந்தா சனசமூக நிலைய அங்கத்தவர்களின் பெயர் விபரம்**

1. சி.செல்வராசா
2. பொ.அருந்தவராசா
3. மு.இரத்தினம்
4. கி.செல்வச்சந்திரன்
5. சி.சிறீஸ்வரன்
6. நா.இராசதுரை
7. கு.ஜெகதாஸ்
8. இ.ஜெகதீஸ்வரன்
9. இ.ஜெயரூபன்
10. வ.ஞானலிங்கம்
11. மா.குணம்
12. வே.நடராசா
13. த.இராசலிங்கம்
14. ச.நாகம்மா
15. ர.புவனேஸ்வரி
16. கு.பரமதாஸ்
17. த.இராசதுரை
18. சி.முத்துலிங்கம்
19. சி.ஸ்ரீபாக்கியராசா
20. மு.பாலேந்திரா
21. செ.யதீசன்
22. அ.அதீஸ்
23. இ.அபினேஸ்
24. இ.பிரதீபன்
25. ம.மனோகரன்
26. கு.குணதாஸ்
27. ப.துஸ்யந்தன்
28. வே.விஜயரத்தினம்
29. வே.விஜயமலர்
30. சி.தனபாலசிங்கம்
31. ப.லதா
32. வே.சச்சிதானந்தம்
33. வே.பரமானந்தம்
34. கி.அருமைத்துரை
35. வே.சிவானந்தம்
36. தே.பரமானந்தம்
37. சி.அருந்தவராசா
38. அ.குணராசா
39. கி.ஜெயதுரை
40. கி.ஜெயராசா
41. க.குணதீசன்
42. க.தினீஸ்
43. கு.மோகனதாஸ்
44. சி.கமலேஸ்
45. சி.சௌந்தரராசா
46. சௌ.ஜெயராஜன்
47. வே.தில்லையம்பலம்
48. கு.சந்திரசேகரம்
49. சி.நாகரத்தினம்
50. சீ.செல்லப்பாக்கியம்
51. வே.கனகரத்தினம்
52. கி.அழகுதுரை
53. மு.பற்குணசிங்கம்
54. சி.மகாலிங்கம்
55. சி.சோமசுந்தரம்
56. ஜெ.சிவனேஸ்வரி
57. கா.அரசரத்தினம்
58. மு.கிருஸ்ணபிள்ளை
59. இ.விஜயதீபன்
60. ப.லயந்தன்
61. க.கீர்த்திகன்
62. இ.அகிலேஸ்
63. இ.நிமலேஸ்
64. மு.அமலன்
66. இ.பிள்ளையார்
67. கி.அருந்தவராசா
68. ச.பிரசாந்
69. சௌ.ஸ்ரீதாசன்
70. செ.தவமணி
71. சி.ஜெயராசா
72. கா.கனகரத்தினம்
73. ம.மகேஸ்வரி
74. மு.இரத்தினசிங்கம்
75. கி.கிருஸ்ணகுமார்
76. இ.வரதராஜன்
77. செ.வசீகா
78. இ.வனஜா
79. அ.அசிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

80. அ.அஜந்தா
81. சி.உலகராசா
82. ந.மதியழகன்
83. சி.இளஞ்செழியன்
84. வ.அனுதா
85. இ.நிதுனேஸ்
86. சி.சிவராசா
87. சி.விஜயமலர்
88. லோ.காமினி
89. சி.கலைச்செல்வன்
90. ச.இந்துஜன்
91. க.கவிந்தன்
92. ச.நிஷாந்
93. ந.நிஷாகரன்
94. அ.அஜித்தன்
95. கு.லோகேஸ்
96. ப.றஜீதரன்
97. நா.நிவேதன்
98. சி.மனோகரராசா
99. சி.மிரேஸ்
100. சி.தர்மேஸ்
101. ஆ.சின்னத்தம்பி
102. கு.சதீஸ்வரன்
103. ப.வஜிதா
104. ச.நளாயினி
105. மு.அபர்ணா
106. செ.குணதேவி
107. ஸ்ரீ.சந்திரமலர்
108. க.இராஜேந்தினி
109. க.மயூரி
110. ஜெ.யோகேஸ்வரி
111. ம.வக்சலாதேவி
112. சோ.சசிகரன்
113. இ.நாகேஸ்வரன்
114. இ.இராசம்மா
115. நா.மகேஸ்வரி
116. அ.அமிர்தா
117. இ.தனுசா
118. க.றஜிந்தன்
119. வெ.மனோமலர்

**புலம்பெயர்ந்தோர் நிதி உதவி**

01. தில்லையம்பலம் ஜெயரூபன் - லண்டன்
02. குணத்திலிங்கம் மேகனதாஸ் - லண்டன்
03. இளையவர் தேசிங்கன் - லண்டன்
04. செல்லையா கனகராசா - சுவிஸ்
05. வேலுப்பிள்ளை சதானந்தம் - சுவிஸ்
06. சிங்கராசா ஸ்ரீஸ்கந்தராசா - சுவிஸ்
07. வல்லிபுரம் சந்திரலிங்கம்(பச்சைக்கிளி) - பிரான்ஸ்
08. சிவானந்தம் மழலைச்செல்வன் - பிரான்ஸ்
09. வெள்ளையன் குமாரதாஸ் (குமரன்) - பிரான்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விவேகானந்தா விளையாட்டுக் கழகம்**

விவேகானந்தா விளைாட்டுக் கழகம் விவேகானந்தா சனசமூக நிலையத்தினால் 1965ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஆரம்ப கர்த்தாவாக இருந்தவர் சி.குணத்திலிங்கம் அவர்கள். முதலாவது விளையாட்டாக கரப்பந்தாட்ட (ஓவர் கேம்) ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் ஆரம்பகால விளையாட்டு வீரர்களாக இருந்தவர்ள் விபரம் பின்வருமாறு.

1965

01. சி.குணத்திலிங்கம்
02. மா.சிதம்பரன் (குட்டி)
03. க.செல்லன் (மாயவர்)
04. சு.செகராசா
05. சி.சிங்கராசா
06. மு.இரத்தினம்
07. சி.சோமசுந்தம்
08. வே.நடராசா
09. சி.அருந்தவராசா
10. கி.அழகுதுரை
11. கி.அருமைத்துரை
12. ஆ.சிவலிங்கம்
13. மா.குணம்
14. பொ.அருந்தவராசா
15. வே.பரமானந்தம்
16. சி.நாதன்
17. மு.பற்குணசிங்கம்
18. வே.சிவானந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2014ல் கரப்பந்தாட்டம் செற்றப் முறைக்கு மாற்றப்பட்டு இன்றைய காலத்தில் ஓவர் கேம் முறை அருகி வருகிறது. இந்த விளையாட்டில் இப்பொழுது களத்தில் இருப்பவர்கள் விபரம் பின்வருமாறு.**

01. இ.அபினேஸ்
02. அ.அதீஸ்
03. செ.யதீசன்
04. ப.துஸ்யந்தன்
05. சி.கமலேஸ்
06. சௌ.ஜெயராஜன்
07. இ.பிரதீபன்
08. க.குணதீசன்
09. ம.மனோகரன்
10. வ.ஞானலிங்கம்
11. அ.குணராசா
12. மு.அமலன்
13. இ.அகிலேஸ்
14. இ.விஜயதீபன்
15. இ.நிதுனேஸ்
16. க.கீர்த்திகன்
17. சி.கலைச்செல்வன்
18. தி.கலைச்செல்வன்
19. ச.பிரசாந்
20. சி.ஸ்ரீஸ்வரன்
21. ம.பாஸ்கரன்
22. வே.விஜயரத்தினம்
23. இ.பிரகாஷ்
24. வே.கனகரத்தினம்
25. சௌ.ஸ்ரீதாசன்
26. தே.பரமானந்தம்
27. கு.ஸ்ரீறங்கன்
28. வே.சச்சிதானந்தம்
29. இ.நாகேஸ்வரன்
30. க.தினேஸ்
31. ச.முத்துலிங்கம்
32. மு.பாஸ்கரதாஸ்
33. செ.சங்கர்
34. சி.தருமேஸ்
35. கு.ஜெகதாஸ்
36. கு.மோகனதாஸ்
37. கி.ஜெயதுரை
38. இ.சசிகரன்
39. இ.ஜெயரூபன்
40. சி.மனோகரராசா
41. மு.சதீஸ்வரன்
42. ச.நிஷாந்
43. இ.நிஷாந்தன்
44. நா.நிவேதன்
45. சி.தனபாலசிங்கம்
46. வே.நடராசா
47. ந.நிஷாகரன்
48. ஆ.இந்திரசித்தன்
49. சி.தங்கவடிவேல்
50. ஆ.சின்னத்தம்பி
51. பொ.அருந்தவராசா
52. கு.சந்திரசேகரம்
53. கு.றஜிந்தன்
54. ப.றஜிதரன்
55. கு.லோகேஸ்
56. வி.விஜய்
57 கு.வேணுஜன்
58. அ.அரவிந்தன்
59. இ.அருந்து
60. சி.மிரேஸ்
61. ப.லயந்தன்
62. க.கவிந்தன்
63. ச.இந்துஜன்
64. அ.அஜிந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கழகத்தின் விளையாட்டு வீரர் தமிழ்நாட்டில் பழுத்தூக்கும் போட்டியில் கலந்து முதல் பரிசினையும் பட்டத்தினையும் பெற்றபோது 'உஷா' சஞ்சிகையில் வெளியான கட்டுரையும் பேட்டியும் இங்கு பிரசுரமாகிறது.

## உடற்பயிற்சி செய்வதால் ஆண்மை குறையுமா

ஆண்டுதோறும் நம் நாடு அளவில் ஆண்களுக்கான பளுதூக்கும் போட்டியினை சென்னையில் மூன்று ஆண்டுகளாக இராயபேட்டை நண்பர்கள் உடற்பயிற்சிக் கழகத்தின் நிறுவுனர் ராஜப்பா நடத்திவருகிறார்.

இந்த ஆண்டும் இப்போட்டி நடந்தது... தமிழ்நாடு முழுவதுமிருந்து நூற்றுக்கு மேற்பட்ட உடற்பயிற்சிக் கலையில் ஆர்வம் கொண்ட ஆணழகர்கள் வந்து கலந்து கொண்டார்கள்.

பளு தூக்குவதில் உட்கார்ந்து தூக்குதல். தோளுக்கு மேலே தூக்குதல், கை மடிப்புவரை தூக்குதல் என்று பல பிரிவுகள் உண்டு.



இதில் கை மடிப்புவரை (ஹாம்ஸ் பவர் லிப்டிங்) பிரிவில் பலர் கலந்து கொண்டார்கள். கலந்துகொண்டவர்களில் வி.சச்சிதானந்தமும் ஒருவர். இவரே இப்போட்டியில் முதல் பரிசினைப் பெற்றார்.

முதல் பரிசினைப் பெற்றதோடு சிறப்புப் பரிசு ஒன்றினையும் பெற்று ஸ்ட்ராங் மேன் அவுட் ஸ்டேண்டிங் லிப்டர் என்ற பட்டத்தையும் பெற்றிருக்கிறார்.

67 கிலோ எடையுள்ள உடல் திறன் கொண்டவர்களின் பிரிவில் இவர் தூக்கிய எடைதான் அதிகம் என்பதால் முதல் பரிசும், அன்று நடந்த போட்டியில் யாரும் இவர் அளவிற்கு பளு தூக்கவில்லை என்பதால் சிறப்புப் பரிசும் கிடைத்திருக்கிறது.

இப்படி ஒரே ஆண்டில் இரண்டு பரிசுகளைப் பெற்ற அந்த வலிமை மிக்க ஆணழகன் சச்சிதானந்தத்திடம் இந்த முயற்சிக்கான பயிற்சிகள் எப்படி என்று கேட்டோம்.

நான் 1986 முதல் உடற்பயிற்சி செய்துவருகிறேன். 1991 முதல் போட்டிகளில் கலந்துவருகிறேன். ஒவ்வொரு ஆண்டும் பரிசுகள் பெற்றிருக்கிறேன்.

என் இந்த உயர்விற்குக் காரணம் நான் பயிற்சி பெறும் ஸ்ரீமாருதி உடற்பயிற்சிக் கழகத்தின் நிறுவனரும் என் மாஸ்டருமான T.M.D சுந்தர் அவர்கள் தான்.

அவரது நம்பிக்கையான பயிற்சி முறைகளும், ஊக்கமும் அவர் கொடுத்த ஆர்வமும்தான் நான் இன்று தமிழ்நாடு அளவிற்கு புகழ் பெறக் காரணம்.

சிலர் நினைப்பதுபோல் உடற் பயிற்சி செய்பவர்களுக்கு ஆண்மைக் குறைவு ஏற்படும். கரடுமுரடாக பழகுவார்கள் என்று சொல்வது எல்லாம் பேத்தல்கள்.

முறையாக இந்தக் கலையில் ஈடுபடுபவர்களுக்கு உடல் அழகு பெறுவதும் வலிமை பெறுவதோடு மன அமைதியும், மனபலமும், சுயகட்டுப்பாடும் நோயற்ற வாழ்வும் அமையும் என்கிறார் இந்த ஆணழகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகானந்தாவின் பொன்விழா மலர் சிறக்க

வாழ்த்துகின்றோம்

# சிந்துஜன் ஜிம்



உடல் வலுவும்

மனவலுவும் சிறந்திட

உடற்கட்டழகர்களாக ஜொலிக்க

இணைந்து பயிற்சி செய்யுங்கள்

ஆணழகர்களாக திகழுங்கள்






முறையான பயிற்சி

இந்தியாவின் தமிழ்நாட்டில்

பயிற்சி பெற்ற

ஆசிரியரால் வழங்கப்படும்

நேர்த்தியான பயிற்சி

## உரிமை : K.V.சச்சி


கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகானந்தாவின் பொன்விழா நிகழ்வு சிறக்க வாழ்த்துகின்றோம்

# K.V.S ஹாட்வெயர் Hardware



கட்டிடப் பொருட்கள் எதுவானாலும்

நியாய விலையில் பெற்றுக்கொள்ள

நீங்கள் நாடவேண்டிய இடம்.







கூடுதல் பொருட்களை நீங்கள் வாங்கும்போது



உரிய இடங்களுக்கு வந்து ஒப்படைக்கும்

சேவையும் நடைபெறுகிறது.





காட்டுப்புலம்,
கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு.

*Kadduppulam ,*
*Kerudavil,*
*Thondaimanaru.*

*T.P:- 0776034094*

உரிமையாளர்: K.V.**சச்சி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50 வது ஆண்டு விழா கொண்டாடும் சிறப்புமலர் சிறக்க வாழ்த்தும்

## கபிலா மணப்பந்தல் அன் கபிலா வீடியோ அன் ஸ்ரூடியோ

பிறந்தநாள் விழாக்கள்,
பூப்புனித நீராட்டு விழாக்கள்,
மற்றும் பல நிகழ்வுகளுக்கேற்ப
சிறந்த பந்தல் சேவையினை பெற்றுக் கொள்ளவும்,





வீடியோ அன் போட்டோ பிரதிகளை
துல்லியமாக எடுத்திடவும்
நீங்கள் நாடவேண்டிய இடம்

## Kapila Wedding Shed & Kapila Vedio & Studio

உடுப்பிட்டி வீதி,
தொண்டைமானாறு,
தொ.பே.0776367649.

Uduppiddy Rd
Thondaimanaru.
TP: 0776367649

பொன்விழா சிறப்புமலர் சிறக்க வாழ்த்துகின்றோம்

## செழியன் ஓடியோ அன் வீடியோ



Cable T.V.Net Work &



Sound Service

**Phone Sales & Repair Accessories,**
**D.V.D Sale Recording**



சிறந்த முறையில் கேபிள் தொலைக்காட்சி சேவை
வீடியோ போட்டோ **Digital Sound** சேவையினையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்





செழியன் ஓடியோ அன் வீடியோ சென்ரர்
பிரதான வீதி, தொண்டமனாறு
T.P 0771334110, 0770782685



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50 வது பொன் விழா கொண்டாடும் சிறப்புமலர் சிறக்க வாழ்த்தும்

# சிவம் சேவிஸ் ஸ்ரேசன்




சகல விதமான வாகனங்களையும் ,
மற்றும் வாட்டர்பம் போன்றவற்றை
பழுதுபார்ப்பதிலும்,
வயின்ரிங் வேலையை
துல்லியமாக செய்வதற்கும்
நீங்கள் நாடவேண்டிய இடம்





**சிவம் சேவிஸ் ஸ்ரேசன்**
பாடசாலை வீதி, தொண்டைமானாறு.
தொ.பே: 0777135925
உரிமையாளர் – சிவம்

---

பொன்விழா சிறந்திட வாழ்த்துகின்றோம்

# வின்சன் வெல்டிங் வேக்ஸ்



கிறில், கேற், சொக்கட்டான் பந்தல்,
ரக்ரர் பெட்டி, லான்ட்மாஸ்ரர் பெட்டி,
ஹன்ரர் கூடாரம்
போன்றவற்றை சிறந்த முறையில்
அழகான வடிவங்களில்செய்து கொள்ளலாம்.




Kadduppulam
Thondaimanaru
T.P:- 0774356381

காட்டுப்புலம்
தொண்டைமனாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொன்விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்**


# சர்பீனன் பிறின்டேர்ஸ்



அழைப்பிதழ்கள், வாழ்த்துமடல்கள்,
நினைவு மலர்கள், கண்ணீர் அஞ்சலி



*Black & Colour Printing,*
*Photo & Video Editing*
*Photo Copy,*
*Scaning, CD writing*
*Laminating,*
*E-mail, Video Call,*
*Computer Sales*
*Computer Accessories & Repairing.*



அனைத்தையும் சிறந்த முறையில் பெற்றுக் கொள்ளலாம்.



கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு.
T.P: 0771633140/0779199707
E-mail - s.inpan2009@yahoo.com / inpan2012@gmail.com


**பொன்விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்**

# கீரன் சவுண்ஸ் சேவிஸ் மின் அமைப்பு



உங்கள் மங்களகரமான
நிகழ்வுகளுக்கும்
பொது நிகழ்வுகளுக்கும்
கலாசார நிகழ்வுகளுக்கும்
நாடவேண்டிய ஒரே தாபனம்





அழைத்து நீங்கள் இன்புறுங்கள். நியாயமான கட்டணம்

கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு.
தொடர்புகளுக்கு : ஈஸ்வரன் இலங்கேஸ்வரன் (தீபன்)
T.P: 0779077054.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மதுரன் கிறா(f)பிக்ஸ் & ஓவ்செற் பிறின்ரேர்ஸ், அல்வாய். 0776688318, 021 226 3099. e-mail : mathurangraphics@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org